பக்கங்கள் : பதினாறு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2036 மார்கழி 09 சனிக்கிழமை (24.12.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 28

# வாகன அணி மீது கிளைமோர் தாக்கு மன்னாரில் 15 கடற்படையினர் பலி!

தலைமன்னார், டிசெம்பர் 24

**மன்னாரில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதல்களில் 15 கடற்படைச் சிப்பாய்கள் அதே இடத்தில் உயிரிழந்தனர். மேலும் இருபது கடற்படையினர் படுகாயமடைந்தனர். இவர்களைத் தவிர மேலும் பதினைந்துக்கும் அதிகமான கடற்படைச் சிப்பாய்கள் மயிரிழையில் உயிர்தப்பினர்.**

நேற்றுப்பிற்பகல் இரண்டு மணியளவில் தலைமன்னார் வீதியில் பேசாலைக்கும், நூறு வீடமைப்புத் திட்டம் என்ற இடத்துக்குமிடையில் துள்ளுக்குடியிருப்பு என்ற இடத்தில் வந்துகொண்டிருந்த கடற்படை வாகனத் தொடரணி மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

மதகு ஒன்றில் வைக்கப்பட்டிருந்த இரண்டு கிளைமோர்கள் ஒரே நேரத்தில் வெடித்தன. கடற்படை சிப்பாய்கள் சென்றுகொண்டிருந்த பஸ் இதில் சிக்கியது. பஸ்ஸுக்கு முன்னால் சென்றுகொண்டிருந்த கடற்படை ட்ரக் மயிரிழையில் தப்பியது.

கிளைமோர் தாக்குதலுக்கு உள்ளான பஸ் தூக்கி வீசப்பட்டு சிதறியது. அப்போது பஸ்ஸின் மீது றொக்கட் லோஞ்சர்கள் மூலம் இரண்டு தடவைகள் தாக்குதல்களும் தொடுக்கப்பட்டதால் பஸ் மேலும் சிதறிச் சின்னாபின்னமானது. இதில் 15 பேர் அதே இடத்தில் உயிரிழந்தனர். படுகாயமடைந்த - சுமார் இருபது - கடற்படையினர் தள்ளாடி இராணுவமுகாம் வைத்தியசாலைக்கு உடனடியாக எடுத்துச் செல்லப்பட்டனர்.

காயமடைந்தவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இருந்ததால் தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து அவர்கள் விசேட ஹெலி

(16ஆம் பக்கம் பார்க்க)

## பேசாலைத் தாக்குதலுக்கு மன்னார் மக்கள் படை உரிமை கோரியுள்ளது

மன்னார்,டிசெ.24

பேசாலைப் பகுதியில் நேற்றைய தினம் கடற்படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு மன்னார் மக்கள் படை உரிமை கோரியுள்ளது.

புங்குடுதீவுப் பகுதியில் வைத்து யுவதி ஒருவர் கடற்படையினரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துக்குப் பதிலடியாகவே மன்னார் பேசாலைப் பகுதியில் கடற்படையினர் மீது இத்தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் -

(16ஆம் பக்கம் பார்க்க)

## இணைத் தலைமை நாடுகளின் தூதுவர்கள் இன்று வன்னி விரைவு

கிளிநொச்சி,டிசெ.24

இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் தூதுவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்திப்பதற்காக இன்று சனிக்கிழமை வன்னிக்கு வருகிறார்கள்.

தரைவழியாக இன்று காலை கிளிநொச்சியை வந்தடையும் இவர்கள் முற்பகல் 11 மணியளவில் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் இச்சந்திப்பு நடைபெறவுள்ளது.

ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம், இங்கிலாந்து, நோர்வே ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் இச்சந் திப்பில் பங்கேற்கின்றனர். இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவின் தலைவர் ஜுலியன்வில்சன், ஐக்கிய இராஜ்ஜியத்தின் உயர்ஸ்தானிகர் ஸ்டீபன் ஈவன்ஸ், ஜப்பானிய தூதுவர் ஆக்கியோ சூடா, இலங்கைக்கான நோர்வேயின் பிரதித் தூதுவர் ஒட்வர் லேக்ரீட் ஆகியோரே இந்தத் தூதுக்குழுவில் அடங்குகின்றனர். (க-3)

## மன்னார், பேசாலையில் நேற்றுப் பெரும் பதற்றம்!

தலைமன்னார்,டிசெ.24

பேசாலைப் பகுதியில் நேற்று கடற்படையினர் மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதல் சம்பவத்தையடுத்து அங்கு பெரும் பதற்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

இந்தச் சம்பவத்தையடுத்து பேசாலைக்கும், மன்னாருக்குமிடையில் அம்புலன்ஸ்களும், படை வாகனங்களும் கண்டபடி ஓடித்திரிந்ததால் பதற்றமடைந்த மக்கள், தமது இல்லங்களுக்குள் முடங்கினர். அரச அலுவலகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் இழுத்து மூடப்பட்டன.

அதேபோல் போக்குவரத்துச் சேவைகளும் முற்றாக ஸ்தம்பிதமடைந்தன. தூரப் பகுதிகளுக்குச் செல்வதற்கான பஸ்களும் சேவையில் ஈடுபடாத காரணத்தினால் மக்கள் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியேற்பட்டது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் பள்ளிமுனைக் கடலில் கடற்படைப் படகுகள் தாக்கப்பட்ட சம்பவத்தையடுத்து நடந்த தேடுதலில் கைதுசெய்யப்பட்ட ஏழு மீனவர்களில் மூவர் நேற்றுக்காலை விடுதலை செய்யப்பட்டனர். ஏனைய நால்வரும் தொடர்ந்தும் விசாரிக்கப்பட்டு வருகின்றனர் என மன்னார் பொலீஸார் தெரிவித்தனர். (க-3)

## குடாநாட்டில் தொடர்ந்து கிரனேட் தாக்குதல்கள்

யாழ்ப்பாணம், டிசெ.24

யாழ்ப்பாணத்தில் படையினர் மீது நேற்றும் கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சாவகச்சேரி நகரப்பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் படையினர் இருவர் காயமடைந்தனர். அவர்கள் உடனடியாகப் பலாலி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

சம்பவத்தை அடுத்து வழமைபோன்று வீதியில் போவோர் வருவோரையெல்லாம் படையினர் தாக்கினர். நகரப்பகுதிக் கடைகள் அனைத்தும் மூடப்பட்டன. கொடிகாமம் முதல் நுணாவில் வரையான ஏ-9 பிரதான வீதியில் ஆங்காங்கே படையினர் கடும் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். வாகனங்கள் அனைத்தும் மறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டன.

இதேவேளை, யாழ். குடாநாட்டில் படையினர் மீது தொடர்ச்சியாகத் தாக்குதல்கள் இடம்பெற்று வருவதை அடுத்து வீதிகளில் மக்கள் நடமாட்டம் குறைந்துள்ளது. பிரதான சந்திகளில் நிற்கும் படையினரே அதிகம் இலக்கு வைத்துத் தாக்கப்படுகின்றனர் என்பதனால், சந்திகளில் உள்ள வர்த்தக நிலையங்களின்

(16ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புக் கவுன்ஸில் அவசரமாகக் கூடியது

கொழும்பு,டிசெ.24

மன்னார் பேசாலையில் நேற்று மதியம் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலை அடுத்து நேற்றுமாலை பாதுகாப்புக் கவுன்ஸில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரிமாளிகையில் அவசர அவசரமாகக் கூடியது.

சுமார் ஒன்றரை மணிநேரம் இக்கூட்டம் நடைபெற்றது. அங்கு எடுக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்து எதுவும் தெரியவரவில்லை.

## படையினரின் தாக்குதலில் பெண் மரணம்! ஏழு பொதுமக்கள் ஆஸ்பத்திரியில் அனுமதி

### அதிர்ச்சியால் ஓட்டோ சாரதி உயிரிழப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.24

குடாநாட்டின் பல்வேறு இடங்களில் படையினர் பொது மக்கள் மீது மேற்கொண்ட தாக்குதல்களில் ஒரு பெண் மரணமானார்; ஓட்டோச் சாரதி அதிர்ச்சியால் உயிரிழந்தார். ஏழு பேர் காயமடைந்தனர்.

சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கத்துக்கு முன்பாகவுள்ள இராணுவக் காவலரண் மீது நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் கிரனேட் வீசப்பட்டது. பாரிய சத்தத்துடன் குண்டு வெடித்ததில் அப்பகுதியில் ஓட்டோவை ஓட்டிச் சென்ற கண்டுவில் வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த நல்லதம்பி தர்மலிங்கம் (வயது - 56) என்ற ஓட்டோச் சாரதி அதிர்ச்சியில் அந்த இடத்திலேயே மரணமானார்.

குண்டுவெடிப்பை அடுத்துப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கற்குழி, சாவகச்சேரியைச் சேர்ந்த மார்க்கண்டு புஷ்பமலர் (வயது - 32) என்ற பெண் படுகாயமடைந்தார். அவர் பின்னர் யாழ்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## இயல்புவாழ்வு ஏற்படுத்தக் கோரி அரச ஊழியர் பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.24

குடாநாட்டில் இயல்புவாழ்க்கைக்கு உத்தரவாதம் வழங்கக்கோரி அரச ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பை நாளைமறுதினம் திங்கட்கிழமை ஆரம்பிக்கவிருக்கின்றனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உடனடி மனிதாபிமானப் பணிகளுடன் தொடர்புபட்ட திணைக்களங்கள் தவிர்ந்த ஏனைய திணைக்கள ஊழியர்கள் இந்தப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர் என தமிழ்த்தேசிய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சிங்கள அரசினதும் படைகளினதும் அராஜகக் செயற்பாடுகள் யாவும், இங்கு புரிந்துணர்வு உடன்பாடு, யுத்த முறையில் உள்ளதா என்ற கேள்வியைத் தோற்றுவித்துள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## சிவில் நிர்வாகச் செயற்பாடுகளை நிறுத்தியது யாழ்.பொலீஸ் நிலையம்

### பொலீஸாரின் பாதுகாப்புக் கருதி

யாழ்ப்பாணம், டிசெ.24

யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையத்தின் சிவில் நிர்வாகச் செயற்பாடுகள் யாவும் நேற்றுப் பிற்பகலுடன் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

குடாநாட்டில் படையினர் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் தொடர்ச்சியான தாக்குதல்களையடுத்தே பொலீஸாரின் பாதுகாப்புக் கருதி பொலீஸ் நிலையத்தின் செயற்பாடுகள் யாவும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. அத்துடன் பொலீஸ் நிலையத்தின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது என்றும் யாழ். பொலீஸ் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நேற்றுப் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் யாழ். பொலீஸ் நிலையத்திற்குச் செல்லும் சகல வீதிகளும் முட்கம்பிச் சுருள்கள் போட்டு மூடப்பட்டன.

பொலீஸ் நிலையத்தில் பெருமளவிலான பொலீஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-3-7)

# இராணுவப் புலனாய்வாளர் ஒருவர் நுவரெலியாவில் சுட்டுக்கொலை!

நுவரெலியா, டிசெ.24

நுவரெலியா புனித அன்றூவ்ஸ் வீதியிலுள்ள குதிரைப்பந்தயத் திடலுக்கு அருகாமையில் நேற்றுக்காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவின் முக்கியஸ்தரொருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அவரது உடலில் ஒரேயொரு காயம் உள்ளது. அவர் சுடப்பட்டாரா அல்லது கூர்மையான ஆயுதம் எதனாலும் ஆழ்மாகக் குத்தப்பட்டாரா என்பது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. அவர் சுடப்பட்டிருக்கலாம் என ஆரம்பத்தில் பொதுவாகக் கருதப்பட்டது.

இராணுவ பொலீஸ் பிரிவின் சார்ஜண்ட் தனபால என்பவரே கொல்லப்பட்டவராவார். மொனறாகலையைச் சேர்ந்த இவர் இராணுவப் புலனாய்வுப் பிரிவில் நீண்டகாலம் கடமையாற்றியவரெனத் தெரிவிக்கப்படுகிறது.

மலையகப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் ஊடுருவியிருக்கிறார்களா என்பது பற்றிய விடயங்களைக் கவனிப்பதற்காக இயங்கிவரும் விசேட பொலீஸ் பிரிவில் இவர் இணைந்து பணியாற்றியவரென்றும் -

இந்தப் பணியின் ஓர் அம்சமாக சென்று கொண்டிருந்தபோதே இவர் கொலையுண்டார் எனவும் பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் இந்த இராணுவச் சிப்பாயின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், சரியாக எத்தனை மணிக்கு அவர் கொல்லப்பட்டார் என்பது பற்றிய விவரங்கள் உடனடியாகத் தெரியவரவில்லையென்றும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

நேற்றைய இந்த சம்பவத்தையடுத்து பொலீஸார் நுவரெலியாவில் தேடுதல் நடவடிக்கையொன்றை மேற்கொண்டபோதும் சந்தேகநபர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை. நுவரெலியா பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (க-3)

# காக்கைதீவுப் பகுதியில் குழு மோதல் 30 குடும்பங்கள் இடம்பெயர்வு

காக்கைதீவு ,பழம்றோட் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோதல் சம்பவங்களின் எதிரொலியாக சுமார் 30 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

நேற்றுக்காலை காக்கைதீவுப் பகுதியில் உள்ள உதயதாரகை சனசமூக நிலையப் பகுதியில் குழுமோதல் இடம்பெற்றது. அது மாலை பெரும் மோதலாக வெடித்தது. இதனால் அப்பகுதி பெரும் களேபரமாகக் காணப்பட்டது.

இந்த மோதல் காரணமாக அப்பகுதியைச் சேர்ந்த சுமார் 30 குடும்பங்கள் வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து சென்றுள்ளன.

மூன்று மண் குடில்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டதுடன், இரண்டு கல் வீடுகள் அடித்து நொருக்கிச் சேதமாக்கப்பட்டுள்ளன.அத்துடன் ஓர் ஓட்டோ மற்றும் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் என்பன தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன. இச்சம்பவத்தால் அப்பகுதியில் பெரும் பதற்ற நிலை காணப்படுகின்றது. (3-6-14)

# இந்துக் கல்லூரியில் தேடுதல்: கண்டித்து ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.24

யாழ். இந்துக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் படையினர் தேடுதல் மேற்கொண்டதைக் கண்டித்து கல்லூரியின் தமிழ் மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்குள் அத்துமீறி நுழைந்த இராணுவத்தினர் யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களால் அமைக்கப்பட்ட மாவீரர் நினைவுத் தூபியை முழுமையாக சேதப்படுத்திய இராணுவத்தினர் பாடசாலை வகுப்பறைக் கதவுகளையும் தளபாடங்களையும் அடித்து நொறுக்கிச் சேதமாக்கியுள்ளதுடன் பாடசாலைக்குச் சொந்தமான ஆவணங்களையும் தீயிட்டுக்கொளுத்தியுள்ளனர். அத்தோடு பாடசாலையில் கடமையில் நின்ற ஊழியர்கள், ஆசிரியர்கள் போன்றோர் கடுமையாகத் தாக்கப்பட்டு பலமணி நேரம் கட்டிவைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தை இராணுவத்தினரின் கோழைத்தனமாகவே மாணவர்கள் கருதுகின்றனர். இந்தச் சம்பவத்தை இந்துக் கல்லூரி மாணவர் சமூகத்தினராகிய நாங்கள் வன்மையாகக் கண்டிப்பதோடு, இந்துக் கல்லூரிக்கோ ஏனைய பாடசாலைகளுக்கோ இனியும் அச்சுறுத்தல் நிகழும் வகையில் இராணுவம் நடந்துகொண்டால் கடும் பின்விளைவுகளை எதிர்நோக்க நேரிடும் என எச்சரிக்கின்றோம் அத்தோடு ஒட்டுமொத்தமான இந் துக் கல்லூரி மாணவர்களும் இராணுவத்துக்கெதிராக கிளர்தொழத் தயாராகவுள்ளனர்.

இவ்வாறான அத்துமீறல்களை உரிய தரப்பினர் உரிய நடவடிக்கைகள் எடுத்து விரைந்து கட்டுப்படுத்தவேண்டும் என இத்தால் சம்பந்தப்பட்ட தரப்பிடம் வேண்டுகின்றோம். - என்றுள்ளது. (3)

### வீரவன்ஸ, அத்துரலிய தேரர் போருக்குச் செல்லவேண்டும்

# ஜே.வி.பியும் ஹெல உறுமயவுமே யுத்த வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளன

### ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.24

மன்னாரில் கடற்படையினர் தாக்கப்பட்டதைக் கண்டித்துள்ள ஐ.தே.கட்சி போர்நிறுத்த ஒப்பந்தத்தைப் பேணமுடியாத குற்றத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், விடுதலைப் புலிகளும் ஏற்றுக்கொள்ளவேண்டுமெனத் தெரிவித்திருக்கிறது. அத்துடன் அமைதி முயற்சிகளிலிருந்து அரசாங்கத்தை தூரப்படுத்தியதற்கான பொறுப்பை ஜே.வி.பியும், ஜாதிக ஹெல உறுமயவும் ஏற்க வேண்டுமெனவும் அது சாடியிருக்கிறது.

வடக்கு - கிழக்கில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து ஐக்கிய தேசியக் கட்சி நேற்று அறிக்கை ஒன்றை விடுத்திருக்கிறது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் வடக்கு - கிழக்கில் இடம்பெறும் கொலை மற்றும் வன்முறைச்சம்பவங்களுக்கு மேலாக, மேலும் இரண்டு சம்பவங்கள் பேசாலையிலும், நுவரெலியாவிலும் இடம்பெற்றுள்ளன. முன்னர் இடம்பெற்ற சம்பவங்களைக் கண்டித்தமை போன்றே இந்தச் சம்பவங்களை யும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

சாதாரண சிவிலியன்கள் மற்றும் முப்படையினர், பொலீஸாரைப் பாதுகாப்பது அரசின் பொறுப்பு. அரசு அந்தப் பொறுப்பை நிறைவேற்ற தவறியிருப்பது இந்தக் கொலைகள் மூலம் தெளிவாகத்தெரிகின்றது. மக்களின் உயிரைப்பாதுகாத்து உறுதிப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாகச் செய்யுமாறு நாம் அரசைக் கோருகிறோம்.

இந்தத் தாக்குதல்கள் பலவற்றிற்கு விடுதலைப் புலிகளே பொறுப்பாளிகள் என ஐ.தே.கட்சி நம்புகிறது. போர்நிறுத்த ஒப்பந்தத்தை பாதுகாக்க முடியாமை தொடர்பான தவறை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், விடுதலைப் புலிகளும் ஏற்கவேண்டும். அதேபோல், அரசை அமைதி முயற்சிகளிலிருந்து தூரப்படுத்தியதற்கான பொறுப்பை ஜே.வி.பியும், ஜாதிக ஹெல உறுமயவும் ஏற்கவேண்டும்.

இதுவரை ஏற்பட்ட உயிரிழப்புகளைக் கருத்தில்கொண்டு ஜே.வி.பியின் விமல் வீரவன்ஸவும், ஹெல உறுமயவின் அத்துரலியே ரத்னதேரரும், சம்பிக்க ரணவக்கவும் அடங்கிய குழுவினர் தற்போது யுத்த ஆடையணிந்து உடனடியாக யுத்தத்திற்குச் செல்லத்தயாராக வேண்டும். இல்லாவிடின் இந்தக்கொலைகளால் பாதிக்கப்பட்டவர்களின் நிந்தனைக்கு இவர்கள் ஆளாக வேண்டிவரும்.

போரைப் பேச்சுகள் மூலம் தோல்வியடையச் செய்வது ஐக்கிய தேசியக் கட்சியின் உறுதியான நிலைப்பாடாகும்.இதற்கான எந்தவொரு செயல்பாட்டிற்கும் ஐ.தே.க.வின் முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும்.

அப்பாவிப் பொதுமக்கள் மற்றும் படை உறுப்பினர்கள் உட்பட அனைத்துப் படுகொலைகளையும் உடனடியாக நிறுத்துமாறு இதனுடன் சம்பந்தப்பட்ட அனைவரையும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

போரை ஆயுதமாகக் கையாளுவதற்கான சந்தர்ப்பத்தை புலிகளுக்கு ஏற்படுத்திக் கொடுத்த ஜே.வி.பியும், ஹெல உறுமய உட்பட அனைத்து இனவாதத் தரப்புகளின் நடவடிக்கைகளை ஐ.தே.க மீண்டும் முழுமையாக நிராகரிக்கிறது. அதேபோல், இந்தச் சந்தர்ப்பத்தில் பொறுமையாக இருக்குமாறும் நாட்டு மக்களிடம் கேட்டுக்கொள்கிறது - என்றுள்ளது. (க-5)

# சோனக தெருவில் முஸ்லிம் இளைஞர் தாக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம்,டிசெ.24

யாழ்.சோனகதெருவைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞர்கள் அப்பகுதிலுள்ள காவலரண் பகுதியில் குவிக்கப்பட்டிருந்த படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர் எனக் கூறப்பட்டது.

நேற்று பிற்பகல் 4.30 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றது. இராணுவத்தினரால் இளைஞர்கள் தாக்கப்படுவதை நிறுத்துமாறு கோரிய மக்கள் பணிமனைத் தலைவரான மௌலவி சகீலும் தாக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகம் மனித உரிமைகள் அலுவலகம் என்பவற்றில் முறைப்பாடு செய்யப்படவுள்ளன. (3-6)

# தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் இந்தியத் தூதருடன் அவசர சந்திப்பு

கொழும்பு, டிசெ.24

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் குழுவொன்று அதன் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் நேற்று, இந்தியத் தூதுவர் நிரூபமா ராவைச்சந்தித்து வடக்கு - கிழக்கின் இன்றைய நிலைமை குறித்து அவருடன் பேசியுள்ளது.

சமாதான பேச்சுகளை மீள விரைந்து ஆரம்பித்தல், யுத்தநிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்தும் பேணுதல் ஆகியன குறித்து இந்தச் சந்திப்பில் விரிவாகப் பேசப்பட்டதாக கூட்டமைப்பின் எம்.பி ஒருவர் தெரிவித்தார்.


சுமுகமாக நடந்த இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பின் எம்.பிக்களான மாவை சேனாதிராஜா, ஜோசப் பரராஜசிங்கம், செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தியத் தரப்பில் இந்தியத் தூதருடன் தூதரக அரசியல் செயலர் அமன்டீப் சிங் சில்லும் உடனிருந்தார். (க-3)

# போராளி வீரச்சாவு

யாழ்ப்பாணம்,டிசெ.24

தவறுதலாக இடம்பெற்ற விபத்தொன்றில் கப்டன் முல்லை(ஜெயபாலன் தயாநிதி - தயா, அராலி, யாழ்ப்பாணம்) என்ற போராளி வீரச்சாவடைந்துள்ளார் என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (3-6)



மேஜர் முரளி மற்றும் பத்து வேங்கைகளின் நினைவுதினம் உரும்பிராயில் உள்ள அவர்களின் நினைவுத் தூபியடியில் எழுச்சியுடன் இடம்பெற்றது.

தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழ்த்தாய் ஒருவர் தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம்.

# செங்கலடியில் வியாழன் இரவு இளம் பெண் சுட்டுக்கொலை!

### ஒருவர் காயம்; இருவரைக் காணோம்!

செங்கலடி,டிசெ.24

மட்டக்களப்பு மாவட்டத்தின் செங்கலடி பிரதேச செயலகப் பிரிவில் நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் இளம் பெண் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். அவரின் தந்தை படுகாயமடைந்தார்.

எல்லைவீதி, செங்கலடி என்ற முகவரியைச் சேர்ந்த கந்தராசா வள்ளிநாயகி (வயது- 18) என்ற இளம் பெண்ணே கொலை செய்யப்பட்டவராவார். இச்சம்பவத்தில் கொலையுண்டவரின் தந்தையான தம்பிராசா கந்தராசா (வயது-45) என்பவரும் படுகாயமுற்றார். அவர் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

கொலையுண்ட பெண்ணின் சகோதரரான கந்தராசா- மகேந்திரன் (வயது -17), அவரது மைத்துனனான பாக்கியநாதன் சாந்தன் (வயது-19) ஆகியோரும் சூட்டுச் சம்பவத்தினைத் தொடர்ந்து காணாமல் போயுள்ளனர். இவர்கள் பயத்தில் எங்காவது ஓடினார்களா, அல்லது துப்பாக்கிதாரிகளினால் கடத்தப்பட்டார்களா என்ற விவரம் எதுவும் இதுவரை தெரியவில்லை என ஏறாவூர் குற்றத்தடுப்பு பொலீஸ்பிரிவின் சார்ஜண்ட் டபிள்யூ. ஏ. லக்சிறி தெரிவித்தார்.

முகமூடியணிந்த மூன்று நபர்கள் கொலையுண்ட பெண்ணின் மீதும், அவரது தகப்பன் மீதும் துப்பாக்கிப்பிரயோகம் செய்துவிட்டுச் சென்றிருக்கின்றனர். ரி.56ரக துப்பாக்கியே இதற்குப் பயன்படுத்தப்பட் டுள்ள தெனவும் பொலிஸார் கூறுகின்றனர்.

துப்பாக்கியின் வெற்றுத்தோட்டா ஒன்றையும் பொலீஸார் சம்பவ இடத்திலிருந்து மீட்டுள்ளனர். (க-3)

# தேருதலின்போது குண்டுகள் மீட்பு

தென்மராட்சி,டிசெ.24

கச்சாய் வடக்கு குடியிருப்பு காணியொன்றில் புதைத்துவைக்கப்பட்டிருந்த இரண்டு கைக்குண்டுகள் மற்றும் வாள் ஆகியவை படையினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் அப்பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் இவற்றினைக் கண்டுபிடித்தனர். வீட்டு உரிமையாளரும் அவரது மகனும் படையினரால் கைதுசெய்யப்பட்டு கொடிகாமம் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நபர்களை பொலீஸார் மேலதிக நீதிவான் முன்னிலையில் ஆஜர்செய்தபோது எதிர்வரும் 26ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (3-117)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# மேய்ப்பர் வழி தொடர்வோம்!

மனுக்குல மேய்ப்பன் - இறைதூதன் - தேவசுதன் - இயேசு பிரான் அவதரித்த கிறிஸ்மஸ் நன்னாள் நாளையாகும்.

அவலங்களுக்கும் அனர்த்தங்களுக்கும் மத்தியில் சமாதானத்தைத் தேடி, அமைதியை நாடி, தீராத ஏக்கத்தோடும் எதிர்பார்ப்போடும் காத்திருக்கும் இலங்கைத்தீவின் மக்களுக்கு திருமைந்தன் தேவகுமாரனின் வாழ்வும், வழிகாட்டலும் காரிருளில் கிடைத்த அற்புத வெளிச்சங்களாகும்.

சமாதானம், அமைதியான வாழ்வு, இரக்கம், ஈகம், தியாகம் என்ற உன்னத வாழ்வியல் மகத்துவங்களை பூவுலகுக்கு எடுத்துரைத்து வழிகாட்டவே மீட்பராகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்து, மகிமையிலிருக்கும் தேவனுடைய குமாரனாக இருந்தும் வேற்றுமை பாராட்டாது, மானிட சமூகத்தை நாடி, மகிமையிலிருந்து கீழே இறங்கி வந்தார். மானுடம் செய்த தவத்தின் பேறு அவரது வருகை. காலத்தைக் கடந்த இறைவன், ஞாலத்தைக் காப்பதற்காக ஓலமிடும் மக்களை அவலத்திலிருந்து விடுவித்து அவர்களுக்கு சீலத்தைப் போதிப்பதற்காகக் காலத்துக்கு உட்பட்டு, பாலனாய்ப் பிறந்து, மானுடத்துக்கும், தேவனுக்கும் பாலமாய் அமைந்தான். பாடுகளைச் சுமந்து, பார் உலகை அரவணைத்தான். அன்பு, அஹிம்சை வழியில் மனிதரை நல்வழிப்படுத்தினான்.

ஆரம்பம் முதல் இறுதிவரை இறைதூதரின் செயற்பாடு சமாதானத்தை அறிவிக்கும் மாண்புமிக்க பணியாகவே அமைந்தது என்று நற்செய்தி அறிவிக்கும் ஏடுகள் நமக்கு உணர்த்துகின்றன.

தமது பணி வாழ்வை ஆரம்பிக்கும் அவரது மலைப் பிரசங்கம் கூட அமைதியை வலியுறுத்துவதாகவே அமைந்தது.

சமாதானத்திற்காக - மானுட அமைதிக்காக - தன் சொல்லாலும், செயலாலும், ஜீவனாலும் நற்பணி புரிந்த நமது மேய்ப்பர் அதற்காகவே தமது உயிரையும், உடலையும் கூட அர்ப்பணித்தார் என்பதே அவரது வாழ்வு காட்டும் சிறப்பாகும்.

''இருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டனர்; மரண நிழல்படும் நாட்டில் உள்ளோருக்கு ஒளி உதித்தது; சுடர் வீசிற்று'' - என்று தேவசுதனின் பிறப்புக் குறித்து முன்னறிவிக்கப்பட்டது.

இன்று மரணங்கள் மலிந்த பூமியில், மன்றாடும் நமது மக்கள் இயேசுவின் இந்தக் கிறிஸ்தோதயம் அந்த நெருக்கடிகளில் இருந்து தமக்கு விடிவையும், ஒளியையும் பெற்றுத் தராதா என்று ஆதங்கத்தோடு ஏங்குகின்றார்கள்.

''கஷ்டப்பட்டோர் பேறுபெற்றவர்கள். ஏனெனில், மகிமையில் உள்ள ஆண்டவரின் ஆசீர்வாதம் அவர்களுக்கு உண்டு.'' - என்பது உன்னத வாக்கியம்.

இலங்கைத் தீவில் தமது வாழ்வியல் இருப்புக்காகவும் அடிப்படை உரிமைக்காகவும் சொல்லொணாத் துன்ப துயரங்களை நிதம் நிதம் அனுபவித்துக்கொண்டிருப்பவர்கள் தமிழர்கள். கஷ்டங்களின் பேறாக - பாடுகளின் விளைவாக - சுபீட்சமும், சுதந்திர வாழ்வும், நிலையான அமைதியும், நேர்சீரான வாழ்வும் தங்களுக்குக் கிட்டாதா என்ற நியாயமான எதிர்பார்ப்பு அவர்களின் மனதில் ஏக்கத்தோடு இழையோடுவது நியாயமானது.

கஷ்டங்களுக்கு மத்தியில் நம்பிக்கை. எதிர்பார்ப்பு. - இதுதான் வாழ்வியலின் அடிநாதச் சிறப்பு.

இதன்படி, கிறிஸ்தோதயத் திருநாளில் - தேவசுதனின் கிருபையால்- இதுவரை நாம் அனுபவித்த அவவாழ்வும் அவலங்களும் அகன்றுவிடும் என்ற நம்பிக்கை மிதமிஞ்சிப் பிறப்பதில் தவறில்லை. அதுவும் தமிழர்களின் விடுதலைப் போராட்ட வாழ்வில் இந்த கிறிஸ்மஸ் திருநாள்கள் மிக முக்கியமான நம்பிக்கைதரும் தினங்களாகும்.

புதிய மிலேனியம் ஆண்டின் கிறிஸ்மஸ் தினத்தில்தான் நீதியான - அமைதியான - சமாதானமான - நிரந்தரமான - தீர்வு ஒன்றை எட்டுவதற்கு வாய்ப்பளிக்கும் விதத்தில் ஒருதலைப்பட்சமாக யுத்தநிறுத்தத்தை அறிவித்தார் தமிழர்களின் தேசியத் தலைவரான வே. பிரபாகரன். ஆனால், அந்த அழைப்பை தென்னிலங்கையின் அப்போதைய தலைவியான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உதாசீனப்படுத்தினார்; நிராகரித்தார். அதனால் மக்களின் எதிர்பார்ப்புத் தோற்றுப்போயிற்று. பாடுகளைச் சுமக்கும் அவலம் தொடர்ந்தது.

அடுத்த ஆண்டில் - 2001 டிசெம்பரில் - கிறிஸ்தோயத் திருநாள் நம்பிக்கை ஒளிக்கீற்றுடன் பிறந்தது. டிசெம்பர் 5 தேர்தலை அடுத்து ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு பதவியேற்ற நிலையில் இம்முறையும் கிறிஸ்மஸுடன் ஒருதலைப்பட்சமாக யுத்தநிறுத்தத்தை அறிவித்து அமைதி முயற்சிகளுக்கு பிள்ளையார் சுழி போட்டார் தலைவர் பிரபாகரன்.

அமைதி முயற்சிகள், சமாதானப் பேச்சுகள் என்ற நம்பிக்கை தரும் எத்தனங்களுடன் 2002 கிறிஸ்தோயத் திருநாள் பிறந்து கழிந்தது.

ஆனால், மீண்டும் அவலம் 2003 கிறிஸ்மஸை ஒட்டி நேர்ந்தது. பிரதமர் ரணில் தலைமையிலான அரசின் அமைதி முயற்சிகளை நசுக்கி பௌத்த, சிங்களப் பேரினவாதம் விஸ்வரூபம் எடுக்க வாய்ப்பளித்த அப்போதைய ஜனாதிபதி சந்திரிகாவின் செயற்பாடுகளினால் அவநம்பிக்கையுடன் அந்த ஆண்டில் கிறிஸ்மஸை சந்தித்தார்கள் இலங்கைத் தீவு மக்கள்.

அதற்குப் பின்னர் கடந்த ஆண்டிலும், இம்முறையும் மிகமிக மோசமான - அச்சம் தருகின்ற - பீதி ஏற்படுத்துகின்ற - அனுபவங்களோடும் எண்ணங்களோடும் தேவசுதன் பிறப்பை எதிர்கொள்கிறார்கள் நம்மக்கள்.

எந்த நேரமும் மீண்டும் யுத்தம் வெடிக்கலாம் என்ற மிரட்சி ஒவ்வொருவர் மனதிலும் நெருடுகின்றது. நம்பிக்கை தகரும் குழப்பநிலையே நீடிக்கின்றது.

இறைமகன் இயேசு காட்டிய சமாதான வழியில் - மற்ற மனிதர்களையும், இனத்தையும் தன்னைப்போல் மாண்புடன் மதிக்கின்ற பாதையில் - செயற்படுகின்ற மேலான மனப்பாங்கும், மனப்பக்குவமும் நம் இலங்கைத் தீவின் தலைவர்களுக்கு வராத வரையில் தேவன் காட்டிய அமைதி வாழ்வு நமக்குக் கிட்டப்போவதில்லை. அத்தகைய நல்வழியில் தேசத் தலைவர்கள் நடப்பதற்கு இறைதூதர் வழிகாட்டுவாராக!

# திருமலையில் புதிய கோணத்தில் சாத்வீக வழியில் போராட்டம்!

## பொங்கு தமிழ்ச் சமூகம் முஸ்தீபு

திருக்கோணமலை,டிசெ.24

''எதிர்வரும் நாள்களில் ஸ்ரீலங்கா அரசுக்கும் அரச படைகளுக்கும் எதிராக - வன்முறைக்கு இடங்கொடாது - சாத்வீகமான வழியில் - எமது ஒன்றுபட்ட எதிர்ப்பைத் தொடர்ச்சியாகக் காட்டும் விதத்தில் - புதியதொரு கோணத்தில் - எமது போராட்டத்தை நடத்தவுள்ளோம். அதற்குத் தயாராகுங்கள்! ''

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றது திருகோணமலை மாவட்ட பொங்குதமிழ்ச் சமூகம்.

''அன்பிற்கினிய தாயகத் தலைநகர் திருகோணமலையின் தமிழ் பேசும் மக்களுக்கு!'' - என்ற தலைப்பில் பொங்கு தமிழ்ச் சமூகம் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அந்த அறிக்கையில்:-

அன்பான திருமலை தமிழ் பேசும் மக்களே!

எமது நகரத்துக்குள் இராணுவம் எமது வீடுகளுக்கு முன்பு குவிக்கப்பட்டு, வீதியெங்கும் காவலரண்கள் அமைக்கப்பட்டு, எங்கள் மீது உளவியல் யுத்தம் தொடக்கப்பட்டுள்ளது.

நாங்கள் ஸ்ரீலங்கா அரசிற்கு எதிராக சாத்வீக வழியில் முன்னெடுக்க விரும்பும் உண்ணாவிரதப் போராட்டம் எதுவும் பயன்தராது. தியாகி திலீபனைச் சாக விட்டுப் பார்த்து ரசித்துக்கொண்டிருந்தவர்கள் இவர்களும் இந்திய அரசும். எனவே, இத்தகைய போரட்டம் ஒன்றை நடத்துமிடத்து சாவது தமிழன்தானே என்று பேசாமலிருப்பார்கள். கண்டன ஊர்வலம் நடத்தினால் யாழில் நடந்த நிலையையே இங்கும் உருவாக்குவார்கள். எமது எத்தகைய அகிம்சை வழிப் போராட்டத்தையும் நசுக்குவதற்குத் திட்டம் தீட்டுவார்கள். இருப்பினும் சாத்வீக வழியில், வன்முறைக்கு இடம் கொடுக்காது, எமது போராட்டத்தை புதியதொரு கோணத்தில் நடத்த வேண்டிய நிலையை ஸ்ரீலங்கா அரசும் இராணுவமும் எம்மீது திணித்துள்ளன.

ஆதலினால் அன்பான எமது மக்களே! எதிர்வரும் நாள்களில் நாங்கள் ஸ்ரீலங்கா அரசிற்கும் அரச படைகளுக்கும் எதிராக வன்முறைக்கு இடங்கொடாது சாத்வீகமான வழியில் எமது ஒன்றுபட்ட எதிர்ப்பினைத் தொடர்ச்சியாக நடந்தவேண்டியுள்ளதால் இயன்றளவு உங்களைத் தயார்படுத்திக்கொள்ளுங்கள் என அன்பாகவும் தாழ்மையாகவும் கேட்டுக்கொள்கின்றோம் - என்றும் அதில் உள்ளது. (எ-க)

# தீவகத்திலிருந்து யாழ்.வரும் பயணிகள் மீது பண்ணையில் கடும் சோதனைக் கெடுபிடி

ஊர்காவற்றுறை,டிசெ.24

தீவுப்பகுதியில் இருந்து யாழ்.நகர் நோக்கிச்செல்லும் பயணிகள், பண்ணைச் சந்தியில் உள்ள சோதனை நிலையத்தில் வைத்து படையினரால் தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

வாகனங்களில் செல்லும் பயணிகள் அனைவரும் வாகனங்களில் இருந்து இறக்கப்பட்டு அவர்களது அடையாள அட்டைகள் மற்றும் பொதிகள் என்பன படையினரால் தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

இதனால், பயணிகள் சோதனை நிலையத்தில் இருந்து சுமார் நூறு மீற்றர் தூரம் நடந்து சென்றே மீண்டும் வாகனங்களில் ஏற வேண்டியுள்ளது.

இதனால், வயோதிபர்கள், நோயாளர்கள் பெருஞ்சிரமங்களின் மத்தியில் பயணம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

படையினரால் வழங்கப்பட்டுள்ள விசேட அடையாள அட்டைகள் பயணிகள் வைத்திருந்த போதும் அவற்றிற்கு மேலதிகமாக தேசிய அடையாள அட்டைகளைக் காண்பிக்குமாறும் படையினர் பயணிகளைத் தொந்தரவு செய்வதாகவும் புகார் தெரிவிக்கப்படுகின்றது. (எ-16)

# லண்டன் விமானம் புறப்படுவது சந்திரிகாவினால் மீண்டும் தாமதம்

## ஒரு மாதத்திற்குள் இரண்டாவது சம்பவம்

கொழும்பு, டிசெ.24

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் வருகையினால் ஏற்பட்ட தாமதத்தினால் நேற்றுமுன்தினம் லண்டனுக்குச் செல்லவிருந்த ஸ்ரீலங்கா எயார் லைன்ஸ் விமானம் அரை மணி நேரம் தாமதமாகவே புறப்பட்டது.

லண்டனுக்குச் செல்லவிருந்த யு.எல். 501 விமானம் நேற்றுமுன்தினம் 8.50 மணிக்கு புறப்பட ஏற்பாடாகியிருந்தது. இதில் செல்லவிருந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தாமதமாக வருவாரென அறிவிக்கப்பட்டதையடுத்து , அவர் வரும் வரை விமானிகள் விமானம் புறப்படுவதைத் தாமதித்தனர்.

காலை 9.20 மணிக்கே முன்னாள் ஜனாதிபதி விமான நிலையத்திற்கு வந்து சேர்ந்தார். இதனால், பயணிகளின் கேள்விகளை எதிர்நோக்கவேண்டிய தர்மசங்கடமான நிலை விமானநிலைய அதிகாரிகளுக்கு ஏற்பட்டது. அத்துடன் விமானங்கள் புறப்படுவதற்கான கால அட்டவணையை மாற்றவேண்டிய இக்கட்டும் ஏற்பட்டது.

முன்னதாக இம்மாத முற்பகுதியிலும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் வருகையில் ஏற்பட்ட தாமதத்தினால் சிங்கப்பூருக்குச் செல்லவிருந்த விமான மொன்று சுமார் ஒரு மணி நேரம் தாமதமாகப் புறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-க)

# யாழ்.-திருநெல்வேலி வங்கிகளின் வாடிக்கையாளர் சேவை நேரம் 2 மணிவரை மட்டுப்படுத்தப்பட்டது

யாழ்ப்பாணம்,டிசெ.24

குடாநாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு யாழ். மாநகரசபையின் எல்லைக்குட்பட்டதும் - திருநெல்வேலியில் அமைந்துள்ளவையுமான வர்த்தக வங்கிகள் அ..னத்தும் மறு அறிவித்தல் வரை வாடிக்கையாளருக்கான அலுவலக நேரத்தைப் பிற்பகல் 2 மணிவரை மட்டுப்படுத்தியுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட வங்கியாளர் சங்கம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது என்றும் - இதனால், வாடிக்கையாளர் நலன் பாதிக்கப்படுவதையிட்டு தாம் மனம் வருந்துவதாகவும் - வங்கியாளர் சங்கம் அறிவித்துள்ளது. (எ)

## தென்மரா சியில் வியாழன்று மட்டும்

# வெவ்வேறு சம்பவங்களில் நான்கு சிறுவர்கள் படுகாயம்

வெவ்வேறு சம்பவங்களில் காயமடைந்த நான்கு சிறுவர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஆட்டுக்கடாவுக்கு குழை கொடுத்துக் கொண்டிருந்த மூன்றரை வயதுச் சிறுவன் ஆடு கொம்பினால் குத்தியதனால் கண்ணில் காயமடைந்தார். மீசாலையைச் சேர்ந்த வி.துஷாந் (வயது-31/2) என்ற சிறுவனே காயமடைந்தவராவர்.

மரத்தில் கொத்திவைக்கப்பட்டிருந்த கத்தி தவறி வீழ்ந்ததினால் ஒன்றரை வயதுக் குழந்தையின் கண்புருவத்தில் குத்தி வேம்பிராயைச்சேர்ந்த ஜே.அஸ்வினி என்ற குழந்தையே காயமடைந்துள்ளது.

விசர்நாய் ஓடி வருவதைக் கண்டு கையில் அகப்பட்ட பித்தளை விளக்கினை எறிந்த போது அப்பகுதியில் விளையாடிக்கொண்டிருந்த ஏழு வயதுச் சிறுவனின் நெற்றியை தாக்கிக் காயப்படுத்தியது. கச்சாய்ப்பகுதியில் இடம்பெற்ற அந்தச் சம்பவத்தில் வி.நிதுஷன் (வயது-7) என்பவரே காயமடைந்தவராவார்.

மோட்டார் சைக்கிள் பயிற்சி பெற்ற 12 வயதுச் சிறுவன் மோட்டார் சைக்கிள் முட்கம்பி வேலிக்குள் சென்றதால் காயமடைந்தார்

அல்லாரையைச் சேர்ந்த என்.சங்கீதன் (வயது-12) என்பவரே காயமடைந்தவராவார். காயமடைந்த நால்வரும் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ-117)

# ஆஞ்சநேயர் ஆலய தெய்வீக இசையரங்கில்

யாழ்ப்பாணம்,டிசெ.24

மருதனார் மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலய இலட்சார்ச்சனையை முன்னிட்டு நடைபெறும் தெய்வீக இசைஅரங்கு நிகழ்வில் இன்று சனிக்கிழமை அ.ஜீவந்தனியின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும்.

வயலின் - ஏ.ஜெயராமன் மிருதங்கம் - என்.மாதவன், கெஞ்சிரா- வி.ராகவன் ஆகியோர் பக்கவாத்தியங்களாக பங்கேற்பர். (எ-204)

## நாளை

மார்கழி 10
ஞாயிற்றுக்கிழமை
25.12.2005
திதி: நவமி
பிற்பகல்: 12.39 வரை
நட்சத்திரம் : சித்திரை ,
பின்னிரவு : 06.07 வரை
சுபநேரம் : 09.26 - 10.56
ராகுகாலம் : 04.56 - 06.26
கிறிஸ்மஸ் தினம்
(யாவும் பழைய நேரப்படி)

# வீதியோரம் குண்டு மீட்கப்பட்டதை அடுத்து ஊர்காவற்றுறையில் தொடர்ந்து பதற்றம்

ஊர்காவற்றுறை,டிசெ.24

ஊர்காவற்றுறையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதனைத் தொடர்ந்து அங்கு பொதுமக்கள் மத்தியில் பெரும் பதற்றநிலை உருவாகியுள்ளது.

ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கும் - அருகிலுள்ள நெசவுசாலைக்கும் இடையேயுள்ள வீதி வளைவில் இந்தக் குண்டு கடற்படையினரால் கண்டு பிடிக்கப்பட்டது.

இதனால், காலை முதல் நண்பகல் வரை இவ்வீதியூடான போக்குவரத்து கடற்படையினரால் முற்றாக தடுக்கப்படிருந்தது.

இதன் காரணமாக ஊர்காவற்று வடக்கு வீதியூடாகச் செல்லவேண்டிய பஸ்கள் செபஸ்தியார்கோயில் வீதி வழியாக நாரந்தனைச் சந்தியை அடைந்து அங்கிருந்து பொன்னாச்சிகடை சந்தியூடாக தமது பயணத்தை மேற்கொண்டன.

எனினும், நண்பகல் ஒரு மணியளவில் இக்குண்டு கடற்படையிரால் செயலிழக்கப்பட்டதனைத் தொடர்ந்து இவ்விதியீயூடான போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது.

(எ-16)

## உதயவாக்கு

சுயநலம் என்ற நெருப்பு முதலில் மற்றவர்களைப் புசிக்கிறது. பின்னர் தன்னையே புசிக்கிறது.

-ஓர் அறிஞர்.

# புலமைப் பரிசில் திட்டம் - 2006

**O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே!**

எமது நிறுவனத்தினால் நடாத்தப்படவுள்ள புலமைப்பரிசில் பரீட்சை மூலம் மிகக்குறைந்த கட்டண சலுகையுடன் கணினி கற்கைநெறியை நீங்களும் கற்கலாம்.

சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்ப படிவங்களை நேரில் அல்லது தபால் மூலமாக எமக்கு 30.12.2005 ற்கு முன்னர் கிடைக்க செய்யவும்.

இவ் அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கொள்ளுங்கள்

பரீட்சைக்கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது

**C.B Computer Academy**

T.P No. 021-4590291 Station Road, Kondavil.



**ICT Information & Communication Technology**

**Grade - 10**

ICT கற்கைநெறிக்கான விரிவுரைகள் (தரம்-10 மாணவர்களுக்கு) நாளை (25.12.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. எனவே முன்கூட்டியே மாணவர்கள் பதிவு செய்துகொள்ளவும்.

**C.B.Computer Academy**
Station Road, Kondavil.
T.P.: 021 4590291.



**S.L.A.S**

கட்டுரையும் சுருக்கமும்
பொது அறிவு, பொது உளச்சார்பு
ஆரம்பம்: 24.12.2005 சனி
திகதி 24 முதல் 27 வரை (சனி முதல் செவ்.வரை)

யாழ். நகர் - 9 - ஒரு மணி வரை
இணுவில் - 5 - 6 மணிவரை

நியூநட்டன்
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்

திகழ் கல்வி நிறுவனம், இணுவில்.

வழிகாட்டி நூல் இங்கு கிடைக்கும்.


# அ.பொ.செல்லையாவுக்கு பளையில் அஞ்சலி நிகழ்வு

தென்மராட்சி,டிசெ.24

அண்மையில் கனடாவில் காலமான முத்தமிழ் வித்தகர் அ.பொ. செல்லையாவுக்கு பளைப் பிரதேச மக்கள் அஞ்சலி நிகழ்வொன்றினை நடத்தவுள்ளனர்.

பிரதேசத்தைச் சேர்ந்த கல்விமான்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-117)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

## 21ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திருமதி
**ஈஸ்வரி குணபாலசிங்கம்**

மண்ணில் 16-07-1944 விண்ணில் 04-12-2005

திதி : திருதியை

04.12.2005 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (24.12.2005) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தாவடி வடக்கு,
காளி கோயிலடி.
T.P.No.: 077 - 9001399,
077 - 9688229.

தகவல்:
குடும்பத்தினர்.

(44503) (32*19.17)

# ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தாயின் மடியில் 10 . 05 . 1979

இறைவன் அடியில் 24 . 12 . 2000

## கனகலிங்கம் சுரேஸ் (கண்ணன்)

இன்பத்தை யாசிக்கவே பனித்
தேசம் அனுப்பிவைத்தோம்
கண்ணா நீ எங்கு சென்றாய்!
தவிக்கின்றதே எங்கள் நெஞ்சம்
ஒற்றை மகனைப் பெற்றெடுத்தோம்- இறைவா!
அவனையும் பறித்தாயோ!
உயிரைத்தான் எடுத்தாய்- உடலைத்தான்
காணவிட்டாயோ - இறைவா!
பெற்றவர்களை கலங்கித் தவிக்கவிட்டு
சென்றாயோ கண்ணா!
ரஷ்யாவிலே உன்னுயிரையும் பயணத்தையும் முடித்து
விட்டியே கண்ணா!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

முகவரி :-
விவேகானந்தா வீதி,
மஞ்சத்தடி, இணுவில்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

(44338)(11-44)

# பேராதனைப் பல்கலையின் முதற்கலைத் தேர்வு வைத்தீஸ்வராவில்!

யாழ்ப்பாணம்,டிசெ.24

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி மாணவர்களுக்கான முதற் கலைத்தேர்வுப் பரீட்சைகள் இன்று சனிக்கிழமை தொடர்ந்தும் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறும் என பரீட்சைமேற்பார்வையாளர்களான கலாநிதி வ.மகேஸ்வரன், வே.சிவயோகலிங்கம் ஆகியோர் அறிவித்துள்ளனர்.

இந்தத் தேர்வின் முதற்கட்டப் பரீட்சைகள் ஏற்கனவே வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (8)

# ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.24

ஆழிப்பேரலையின்போது உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை எதிர்வரும் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன குருமூர்த்தி ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (எ-204)

# கச்சாயில் தந்தையும் மகனும் கைது

கொடிகாமம்,டிசெ 24

கொடிகாமம், கச்சாய் பகுதியில் நேற்று முன்தினம் படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலையடுத்து நேற்றுமுன்தினம் முழுவதும் கச்சாய், பாலாவிப் பகுதிகளில் தேடுதல் நடத்தப்பட்டதுடன், முருகேசு குணசிங்கம், குணசிங்கம் குணாளன் (வயது17) ஆகிய தந்தையும் மகனும் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது தொடர்பாக கொடிகாமம் பொலீஸிலும் மனித உரிமை ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-74)

# சாவகச்சேரியிலும் ஒருவர் கைதானார்

கைதடி,டிசெ.24

சாவகச்சேரிப் பகுதியில் படையினரால் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதடி கிழக்கைச் சேர்ந்த முருகதாஸ் ஜெயதீபன் (வயது 19) என்பவரே நேற்று முன்தினம் பிற்பகல் சாவகச்சேரி 190ஆம் கட்டைப்பகுதியில்வைத்துப் படையினரால் கைது செய்யப்பட்டுள் ளார். (எ-6-75)

# அறிவித்தல்

**பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்**
(குடியியல் நடவடிமுறைச் சட்டக் கோவையின் 16ஆம் பிரிவின் கீழ்)

வழ.இல: நா்னாவிதம்/1323/05

நடராஜா கனேசலிங்கம்
கௌரவ செயலாளர்,
புற்றளை சித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபை,
புற்றளை சித்திவிநாயகர் ஆலயம், புற்றளை,
புலோலி தெற்கு, புலோலி.

மற்றும் கணையன்தோட்டம்
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.
புலோலி தெற்கு,
சித்தி விநாயகர் ஆலய
பரிபாலனசபை சார்பாக

வழக்காளி

எதிர்

சிவஸ்ரீ சோமஸ்கந்தக்குருக்கள்
ஜெயபாலசுந்தரக்குருக்கள்
புற்றளை சித்திவிநாயகர் ஆலயவீதி,
புற்றளை, புலோலி தெற்கு, புலோலி.

எதிராளி

மேற்படி வழக்காளியால் புற்றளை சித்தி விநாயகர் ஆலய எதிராளி ஆகிய பூசகருக்கு எதிராக இம்மன்றில் 2005ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 3ஆம் திகதி ஒரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு கௌரவ மாவட்ட நீதிபதி அவர்கள் முன்னிலையில் ஆதரிக்கப்பட்டு ஒரு கட்டாணையும் குடியியல் நடவடிமுறைச் சட்டக் கோவையின் 16ஆம் பிரிவின் கீழ் ஓர் அறிவித்தலும் வழங்கும்படி கட்டளையிடப்பட்டுள்ளது. இவ்வழக்குத் தொடர்பில் அக்கறையுள்ளவர்கள் யாராவது இருப்பின் அவர்கள் இவற்றுக்கு எதிராக ஆட்சேபனையையும் மறுமொழியையும் 2006ஆம் ஆண்டு தை மாதம் 3ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ இம்மன்றில் தாங்களாகவோ அல்லது சட்டத்தரணி மூலமாகவோ கோப்பிடுமாறு இத்தால் வேண்டப்படுகின்றீர்.

2005ஆம் ஆண்டு மார்கழி மாதம் 21ஆம் திகதி
''மன்றின் கட்டளைப்படி''

வரைவு,
லிங்கா துரைராசா
வழக்காளியின் சட்டத்தரணி.

பதிவாளர்:
S.SANTHIRALINGAM,
REGISTRAR & J.P.
DEPUTY FISCAL,
DISTRICT COURT,
POINTPEDRO.

(47037) (32-31-17-18)

# மரண அறிவித்தல்

## கந்தையா யோகலிங்கம்

(புடைவை வியாபாரி - சுன்னாகம் சந்தை உட்புறம்)



சுன்னாகம், அந்தோனியார் வீதியைச் சேர்ந்த கந்தையா யோகலிங்கம் 23.12.2005 வெள்ளிக்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- இளையபிள்ளை தம்பதியினரின் செல்வப்புதல்வனும் சிவஞானம் மற்றும் காலஞ்சென்ற சுசீலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் குமுதமலர், பொன்னையா, குணரத்தினம் (விவசாயத் திணைக்களம், வவுனியா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் சுகந்தன் (பிரான்ஸ்), சபேசினி (கல்வியற் கல்லூரி, கோப்பாய்), சர்மினி (பலாலி, ஆசிரியர் கலாசாலை), ஜெயந்தினி (பழைய மாணவி, யூனியன் கல்லூரி) ஆகியோரின் அருமை மாமனாரும் ஹரிகரன் (கொழும்பு), கயந்தினி (பேராதனைப் பல்கலைக்கழகம்), கஜேந்திரன் (வவுனியா பல்கலைக்கழகம்), கஜனி (பழைய மாணவி, யூனியன் கல்லூரி), கெங்காதரன் (யூனியன் கல்லூரி) ஆகியோரின் பிரியமான சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இல்லத்தில் இன்று (24.12.2005) சனிக்கிழமை இறுதிக்கிரியைகள் நடைபெற்று, முற்பகல் 11 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
க.சிவஞானம் (சகோதரர்),
பொ.குணரத்தினம் (மைத்துனர்).

புனித அந்தோனியார் வீதி,
சுன்னாகம். (44508)(21.32.19.17)


SALE SALE SALE SALE SALE SALE

# நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு காவேரியின்

## மாபெரும் மலிவு விற்பனை

**24.12.2005 முதல் 31.12.2005 வரை**

புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட



- அனைத்து ரக சாறி வகைகள்,
- ஸ்கேட் & பிளவுஸ்,
- சல்வார், எலிபண்ட் கிட்ஸ்,
- சூட்டிங் & சேட்டிங் வகைகள்,
- சிறுவர், சிறுமியர்களுக்கான றெடிமேட்

ஆடைகள் அனைத்தும் மலிவு விலையில்.....

# காவேரி சில்க்ஸ்

48, பெரியகடை, யாழ்ப்பாணம்.

222-2333

(சி.47009) (39-32-17-19)

# தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு இன்றேல் போர் வெடிப்பது தவிர்க்க முடியாததாகிவிடும்!

## திருமுறிகண்டி தேசிய இளைஞர் சேவை மன்றம்

கிளிநொச்சி,டிசெ.24

தமிழர் பிரச்சினையை அரசியல் ரீதியில் தீர்த்துவைப்பதற்கு அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறும் பட்சத்தில் ஆயுதப் போர் வெடிக்கும்.

- இவ்வாறு எச்சரித்துள்ளது திருமுறிகண்டி தேசிய இளைஞர் சேவை மன்றம்.

அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டில் இடம்பெற்றுவரும் இராணுவ அத்துமீறல்களைக் கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலே மேற்படி மன்றம் இந்தவேண்டுகோளை விடுத்துள்ளது.

இது விடயமாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்:-

பேரினவாத அரசு தமிழ் மக்கள் மீது மீண்டும் இன வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. பாடசாலை மாணவர்கள், கல்விமான்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் அப்பாவிப் பொதுமக்கள் எனப்பலரும் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிவருகின்றனர்.

இதன்மூலம் சிங்கள அரசு, தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு மூலம் தீர்வு வழங்க மாட்டாது என்ற உண்மை மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

பேரினவாதத்தின் ஒரு அங்கமாகவே அண்மையில் புங்குடுதீவில் இளம் பெண் படுகொலை, அதனைத் தொடர்ந்து இடம்பெற்றுவருகின்ற வன்முறைச் சம்பவங்களுமாகும். இந்தச் சம்பவங்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

எமது தேசியத்தலைவர் வழங்கிய கால அவகாசத்தைச் சிங்கள அரசு சமாதான நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த வேண்டும். இதற்குச் சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும். தவறும் பட்சத்தில் அதனால் ஏற்படப் போகும் விளைவுகளுக்கு சிங்கள அரசும், சர்வதேச சமூகமும் பதில் கூறவேண்டும்.

சிங்கள அரசின் இத்தகைய கொடூர செயல்களைச் சர்வதேச சமூகம் கண்டும் காணாமலும் இருந்துவருகின்றது. அவர்களுக்கு எமது இறுதியான வேண்டுகோளை விடுக்கின்றோம். தமிழர் பிரச்சினைக்குத் தாமதம் இன்றி அரசியல் ரீதியாகத் தீர்வைக்காண முன்வரவேண்டும். தவறும் பட்சத்தில் ஆயுதப் போராட்டம் வெடிக்கும் சூழ்நிலை தவிர்க்க முடியாததாகிவிடும் என்றும் அதில் உள்ளது. (எ-6)

# கரடி கடித்ததில் காயம்!

ஒட்டுசுட்டான்,டிசெ, 24

சம்மளங்குளம் கிராமத்தில் வேட்டைக்கு சென்ற நபர் ஒருவர் கரடியால் கடியுண்டு புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் காட்டிற்குள் வேட்டைக்காகச் சென்ற வேலுப்பிள்ளை சத்தியமூர்த்தி (வயது-45) என்பவரே கரடி கடித்ததில் படுகாயமடைந்து புதுக்குயிருப்பு அரசினர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-341)

# ஒட்டுசுட்டான் வித்தியாலயத்தில் மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பு

ஒட்டுசுட்டான்,டிசெ.24

ஒட்டுசுட்டான் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஒட்டுசுட்டான் இந்து தமிழ் வித்தியாலயத்தில் சிறப்பாக நடைபெற்றது.

முல்லை. மாவட்ட ஊடகப் பேச்சாளர் சி.வேதவனம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பொதுச்சுடரைத் தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியை ஒட்டுசுட்டான் பிரதேசப் பொறுப்பாளர் தமிழரசன் ஏற்றினார்.

முதல் மாவீரர் சங்கரின் உருவப்படத்திற்கு சோதியா படையணிப் பொறுப்பாளர் தர்சிகா மலர் மாலை அணிவிக்க, முல்லை மாவட் கல்விக் கழகப் பொறுப்பாளர் சுடர் ஈகச்சுடர் ஏற்றிவைத்தார்.

முதல் பெண் மாவீரர் மாலதியின் உருவப் படத்திற்கு மாவீரர் பணிமனையைச் சேர்ந்த அர்ச்சனாவும், லெப். கேணல் விக்ரரின் உருவப்படத்திற்கு ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய அதிபர் பங்கயர்ச்செல்வனும் -

அங்கயற்கன்னியின் உருவப்படத்திற்கு தமிழீழத் தேசியத் தொலைக்காட்சியின் முல்லை. மாவட்டப் பொறுப்பாளர் அருணாவும் மலர் மாலை அணிவித்து ஈகச்சுடரேற்றினர்.

கப்டன் மில்லரின் உருவப்படத்திற்கு முல்லை. மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் மயூரனும் - அன்னை பூபதியின் உருவப்படத்திற்கு ஒட்டுசுட்டான் இந்து தமிழ் கலவன் பாடசாலை அதிபர் சி.வேலாயுதபிள்ளையும் - தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படத்திற்கு கற்சிலைமடுப் பொறுப்பாளர் ஈழவாணியும் மலர்மாலை அணிவித்து ஈகச்சுடரேற்றினர்.

நிகழ்வில் கருத்துரையை ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய அதிபரும், சிறப்புரையை தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆகியோரும் நிகழ்த்தினர்.

தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டனர். (எ-341-202)

# ஆழிப்பேரலையால் சிதறுண்ட தேவாலயம் நாளை முதல் நினைவாலயமாகப் பிரகடனம்

## வழிபாடு எதுவும் நடக்காது என்றும் அருட்தந்தை அறிவிப்பு

வவுனியா,டிசெ.24

முல்லைத்தீவு புனித ராயப்பு தேவாலயம் இனிவருங்காலங்களில் வழிபாட்டுக்குப் பயன்படுத்தப்படமாட்டாது என்றும் -

இனிமேல் இந்தத் தேவாலயம் நினைவாலயமாக மட்டும் இருக்கும் என்றும் -

தேவாலய வணபிதா. அருட்திரு ஜேம்ஸ் பத்திநாதன் தெரிவித்தார்.

இதுகுறித்து அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதன் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த டிசெம்பர் மாதம் ஏற்பட்ட ஆழிப்பேரலை சீற்றம் காரணமாக இந்தத் தேவாலயம் முற்றாகச் சேதம் அடைந்தது. இதன் காரணத்தினாலும் - முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 ஆயிரத்து 500 வரையிலான பொதுமக்கள் உயிரிழந்ததன் காரணமாகவும் -

பலரது வேண்டுகோளுக்கிணங்க மறை மாவட்ட ஆயரின் அனுமதியுடன் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இறந்த அனைத்துப் பொதுமக்களினதும் பெயர்கள் தற்போது திரட்டப்பட்டு வருகின்றன. இந்தப் பெயர்கள் அனைத்தும் அந்தத் தேவாலயத்தில் உள்ள தூண்களில் பொறிக்கப்படும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை, ஆழிப்பேரலை ஏற்பட்ட நேரத்தில் இந்தத் தேவாலயத்தில் நடைபெறும் விஷேட பிரார்த்தனையின் பின்னர் இந்தத் தேவாலயம் நினைவாலயமாக மாற்றப்படும். எனவே, இதுவரை முல்லைத் தீவில் இறந்தவர்களின் பெயர் விவரங்களைச் சமர்ப்பிக்காதவர்கள் அவற்றை உடனடியாக வழங்க வேண்டும் என்றும் அடிகளார் கூறினார். (எ-164)

# மன்னாரில் படையினரால் சேதமான கட்டடங்கள் புனரமைக்கப்படவில்லை

ஒட்டுசுட்டான்,டிசெ.24

மன்னார் பகுதியில் 1999 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஸ்ரீலங்கா இராணுவ நட வடிக்கையின் போது அழிக்கப்பட்ட கட்டடங்கள் பல புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் காணப்படுகின்றன. மன்னார் பாலம்பிட்டி, பெரியமடு, பள்ளமடு மற்றும் விடத்தல் தீவு ஆகிய பகுதிகளிலேயே பெருமளவான கட்டடங்கள் இராணுவ நடவடிக்கைகளின் போது அழிக்கப்பட்டன. 1999 ஆம் ஆண்டு இடம்பெற்ற 'ரண கோஷ' இராணுவ நடவடிக்கையின் போது இப்பகுதிகளில் 175 கட்டடங்கள் படையினரால் அழிக்கப்பட்டன.

இவற்றில் 45 பொதுக் கட்டடங்கள், 130 வீடுகள் உட்பட பாடசாலை, மருத்துவமனை, ஆலயம் என்பனவும் அடங்கும். (ஒ-6-341)

# புதுக்குடியிருப்பு உணவகங்களில் உணவு கையாள்பவர்களுக்கு அடையாள அட்டைகள்

பரந்தன்,டிசெ.24

புதுக்குடியிருப்பு பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட உணவகங்களில் பணியாற்றும் உணவுகளைக் கையாளும் பணியாளர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன், அவர்கள் மருத்துவ பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் ஒன்று கூடல் மண்டபத்தில் புதுக்குடியிருப்பு பொதுச்சுகாதாரப் பரிசோதகர் மு.இராஜ்குமார் தலைமையில் அண்மையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில், முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய தொற்று நோயியலாளர் வைத்திய கலாநிதி சு.சுதர்சன், வைத்திய கலாநிதி பி.சுரேஸ், முல்லைத்தீவு பதில் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க.தவராஜா, மாங்குளம் பொதுச் சுகாதாரப்பரிசோதகர் ஜெ.ஜெயனிகாந், விசுவமடு பொதுச்சுகாதாரப் பரிசோதகர் இரா. சௌமியமூர்த்தி, முல்லைத்தீவு பொதுச்சுகாதாரப் பரிசோதகர் இரா.குணராஜன், ஆகியோர் கலந்துகொண்டனர். உணவு கையாள்பவர்கள், உரிமையாளர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், உணவகங்களின் தற்போதையநிலைமைகள், தனி உடல் நல சுகாதாரம், நெருப்புக் காய்ச்சலுக்கான தடுப்பூசி ஏற்றல் உட்பட பல விடயங்கள் தொடர்பாக புதுக்குடியிருப்பு பொதுச்சுகாதாரப் பரிசோதகர் மு.இராஜ்குமார், மாங்குளம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜெ.ஜெயனிகாந் ஆகியோர் இந்நிகழ்வில் அறிவுறுத்தல்களை வழங்கினர். (எ-6-352)

## கிளிநொச்சி வன்னிச் செய்திகள்

# பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கிளிநொச்சியில் அங்குரார்ப்பணம்

வட்டக்கச்சி,டிசெ.24

கிளிநொச்சி மாவட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கடந்த மாதம் அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் கிளிநொச்சி மாவட்ட மாணவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றியத்தினை அமைத்து மாணவர்களுக்கும் மாவட்டத்திற்கும் பல சேவைகளை ஆற்றிவந்தனர்.

அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மாவட்ட மாணவர் ஒன்றியங்கள் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த ஒன்றியம் அமைக்கப்பட்டுள்ளதாக ஒன்றிய வட்டாரங்கள் தெரிவித்தன.

கிளிநொச்சி மாவட்ட புது முக மாணவர் ஒன்றியத்தினரையும் இணைத்து இப்புதிய மாணவர் ஒன்றியம் இயங்கும் என்று கூறப்பட்டுள்ளது. புதுமுகமாணவர் ஒன்றிய அலுவலகம் இனி அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியமாகச் செயற்படும் என்று ஒ றியத் தலைவர் தெரிவித்தார்.

இவ் ஒன்றியத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து இலங்கையில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் தெரிவாகும் மாணவர்கள், தெரிவாகியதில் இருந்து பட்டப்படிப்பினை முடிக்கும் வரை அங்கத்தவர்களாக இருப்பார்கள்.

தற்போது இந்த ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தமிழீழ மாணவர் அமைப்பின் அனுசரணையுடன் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் கணித, விஞ்ஞான பிரிவுகளில் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவர்களுக்கு வாராந்தம் 'வெற்றி நிச்சயம்' எனும் பரீட்சையை நடத்தி வழிகாட்டல்களாகச் செய்து வருகின்றது.

அண்மையில் தமிழீழ மாணவர் அமைப்பாளருடன் இணைந்து ஜி.சீ.ஈ. சாதாரணதர மாணவர்களுக்கான கணிதம், விஞ்ஞானம் ஆகிய பரீட்சைகள் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் நடத்தப்பட்டு அவை புள்ளியிடப்பட்டு அது தொடர்பான பயிற்சி வகுப்புகளும் நடைபெற்றன.

கடந்த 18ஆம் திகதி இவ்ஒன்றியத்தின் பொதுக்கூட்டம் முற்பகல் 10.30 இற்கு ஒன்றியத் தலைவர் தலைமையில் நடைபெற்றது. இதில் பல்கலைக்கழக புதுமுக மாணவர்களுக்கான நிதி உதவிகளைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பாகவும் ஒன்றியத்தின் எதிர்கால நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

இக்கூட்டத்தில் தமிழீழ மாணவர் அமைப்பின் கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். (த-405)



பூநகரி கௌதாரிமுனை அ.த.க. பாடசாலையின் புதிய கட்டடத்திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளர் யுனிசெப் நிறுவன இணைப்பாளருமான கே.கந்தசாமி மலர்மாலை அணிவித்து கௌரவிக்கப்படுவதையும் அருகில் பாடசாலை முதல்வர் ஆர்.கலைச்செல்வன், பூநகரி நல்லூர் ம.வி. முதல்வர் ந.கணேஷ்வரநாதன், பூநகரி பங்குத்தந்தை லியோ கம்ஸ்ரோங் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.
(படம்: ஆர்.பி.வசந்தன், பூநகரிச் செய்தியாளர்)

## இலவச வைத்திய பரிசோதனை

யாழ்ப்பாணம்,டிசெ.24

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் யாழ்.இணைப்பு அலுவலகத்தினரும் யாழ். போதனா வைத்தியசாலை மகப்பேற்று வைத்தியர்களும் இணைந்து யாழ்.மாவட்டத்தின் பல்வேறு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளையும் சேர்ந்த கர்ப்பவதித் தாய்மார்களுக்கான இலவச வைத்திய பரிசோதனைகளையும் ஆலோசனைகளையும் வழங்கியுள்ளனர்.

பருத்தித்துறை, வியாபாரிமூலை ஆரம்ப சுகாதார நிலையம், ஏழாலை மாதர் சங்கம், ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலை, காரைநகர் அரசினர் வைத்தியசாலை, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ஆகிய இடங்களில் இந்த மருத்துவ சேவைகள் நடத்தப்பட்டுள்ளன.

(எ-202)

## சனசமூக நிலைய மேசை விசமிகளால் சேதம்

வரணி,டிசெ.24

மந்துவில் மேற்கு, சூரியகுமாரன் சனசமூக நிலையத்துக்குச் சொந்தமான மேசை ஒன்று அண்மையில் விசமிகளால் சேதமாக்கப்பட்டுள்ளது.

இரவுவேளை சனசமூக நிலையத்துக்குள் நுழைந்த சிலர் மேசையை வெளியே எடுத்து வந்ததுடன் அதனை நடுவீதியில் வைத்து சேதமாக்கியுள்ளனர் என சனசமூக நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் தொடர்பாக நிலைய நிர்வாகிகள் கலாசாரம் பேணுவோரிடம் முறையிட்டுட்டுள்ளனர்.

(எ-170)

## செஞ்சிலுவைச் சங்க தூதுக்குழு பல்கலைப் பதிவாளரைச் சந்தித்தது

யாழ்ப்பாணம்,டிசெ.24

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.மாவட்ட அலுவலகப்பிரதிநிதிகள் நேற்று முன்தினம் முற்பகல் யாழ். பல்கலைக்கழக பதிவாளரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

பல்கலைக்கழக சூழலில் அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் அசம்பாவிதங்கள் தொடர்பாக தகவல்களைத் திரட்டி அறிக்கை ஒன்றைத் தயாரிக்கும் நோக்குடனேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாக பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்தார்.

பல்கலைக் கழக மாணவப் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்கு அனுமதி கோரிய சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் பதிவாளரின் அனுமதியைப் பெற்று மாணவர்களைச் சந்திக்கச் சென்றவேளை மாணவப் பிரதிநிதிகள் எவரும் அங்கு இல்லாததால் மாணவருடனான சந்திப்பு நடைபெறவில்லை.

இதேவேளை பல்கலைக் கழக அசம்பாவிதங்கள் தொடர்பாக யாழ். மாவட்ட இராணுவத் தளபதி ஆர்.எம்.பி.சந்திரசிறிக்கு யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளார் என்று பல்கலைக்கழக பதிவாளர் மேலும் தெரிவித்தார். (எ-12-14)

## கோப்பாயில் 3 மாதகால நிவாரணம் விநியோகம்

கோப்பாய்,டிசெ.24

பாதுகாப்பு வலயத்திலிருந்து இடம்பெயர்ந்து கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வதியும் மக்களிற்கான கடந்த ஜூலை முதல் மூன்று மாத காலத்துக்கான உலர் உணவு விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன் கிழமை முதல் குறித்த பகுதி பல.நோக்குக் கூட்டுறவு சங்கக் கிளைகள் மூலம் நிவாரணம் வழங்கப்பட்டு வருவதாகக் கூறப்பட்டது.

சமுர்த்தி முத்திரைகளைப் பெற்று பின்னர் அதனை மீளளிப்புச் செய்தவர்களுக்கே பட்டியல் மூலம் நிவாரண விநியோகம் வழங்கப்படுவதாகக் கூறப்பட்டது.

நிவாரணம் பெறும் குடும்பங்கள் தமது குடும்ப அட்டைகளைச் சமர்ப்பித்துச் சங்கக் கிளைகளினூடாக நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்று கோப்பாய் உதவிப் பிரதேச செயலர் திருமதி சாந்தசீலன் தெரிவித்தார். (எ-72)


**வீடியோ, ஓடியோ CD க்கள் விற்பனைக்குண்டு**

திருநெல்வேலி பகுதியில் அமைந்துள்ள வீடியோக் கடையில் வீடியோ, ஓடியோ சிடிக்கள், கணனி, பிறின்ரர் உட்பட பல பொருள்கள் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :
T.P No.: 0212222949

(44487) (32-15-45)



**வீட்டுக்கொரு கணனி**

**COMPUTER**

400 MHz, 64MB RAM, 4.3GB Hard Disk, AGP 4MB 3D Card, Sound Card, Network Card, CD Drive, Floppy Drive, 2 USB Port

அத்துடன் 10000/- பெறுமதியான

**17" Colour Monitor**

Windows XP, MS Office XP, Page Maker, Coral Draw, Photoshop, Flash, Dream Weaver, மென்பொருட்களுடன்

உடன் கொள்வனவுக்கு 18000/-
ஒரு மாத முற்பதிவுடன் 15000/
இரண்டு மாத முற்பதிவுடன்*
12,000/-மட்டும்
(இச்சலுகை இன்றும் நாளையும் மட்டும்)

**SAAMSTECH**

841, Hospital Road, Jaffna. 4591571
233/4, Kasthuriar Rd, Jaffna. 2229505
198, 1st Flr, Galle Rd, Dehiwala . 2739939
145–157, St.Johon Street, London. EC1V 4PY
8345 NW 66th Street #9164, MIAMI FL 33166-2628



**MCS** 324, Palaly Road, Jaffna.

| | | |
|---|---|---|
| × Diploma in MS Office | ~~3750/=~~ | 500/= |
| × Diploma in Desktop Publishing | ~~4800/=~~ | 1200/= |
| × Diploma in Web & Multi Media | ~~4800/=~~ | 1200/= |
| × Visual Basic, VB Net | ~~12000/=~~ | 4800/= |
| × MCSE per Module - MCP | ~~12000/=~~ | 4800/= |
| × CCNA -CISCO | ~~18000/=~~ | 7200/= |
| × Sun Certified Java Programmer | ~~18000/=~~ | 7200/= |

அனைத்து கற்கை நெறிகளுக்கும் பதிவுக்கட்டணம் இல்லை.

X'Mas OFFER

Free
A+ Hardware / Internet & E-mail

இச்சலுகைகள் யாவும் 01.01.2006 வரை மட்டுமே

*****Supported by UNDP/JRRP*****



இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

**றோயல் குளுக்கோஸ்**

100% சுத்தமானது!

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!

Packed By:-
ROYAL INDUSTRIES
COLOMBO 12
☎:0777-277670

அனைத்துப் பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப்பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎: 021 222 2537

(C-43109)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

உதிப்பு 15 - 03 - 1937



உதிர்வு 24 - 11 - 2005

**திருமதி ஞானலக்ஸ்மி (ஆச்சி) கனகசபாபதி**

இன்று (24.12.2005) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

''வசந்தம்'',
ஊரெழு கிழக்கு,
சுன்னாகம். (44314) (32-15-45)

தகவல்:
**பிள்ளைகள்.**

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 - 05 - 1937



உதிர்வு 31 - 12 - 1999

**திருமதி சிவலோகநாயகி குணபாலசிங்கம்**

திதி: 24.12.2005

பரிவோடு எம்மை வளர்த்து
பாசமாய் முகர்ந்தணைத்து
கண்ட கனவுகள் நனவாகு முன்னே
காலனவன் சடுதியாய் அணைத்தானோ
உங்கள் இனிய முகம் காணாது
வாடுகின்றோம் இப்புவியில்.

பாசமுடன்:
**கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(44385) (32-45-15)


**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
No 15, Sirambiyadi Lane,Jaffna.
Tel:- 021-2228250, 0777-222422

யாழ்நகரில் முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர

**Computer Hardware Engineering Course**

உள்நாட்டு,வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப் பெற,
சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப் பெற

*Course Condense :-*

- கணனி தொடர்பான அறிமுகம்
- Operating System - Windows XP & Dos
- Internet & E-mail
- கம்ப்யூட்டரின் பாகங்களும் அவற்றின் விளக்கங்களும்.
- Mother board, Processor, Ram தொடர்பான விரிவான விளக்கம்
- கம்ப்யூட்டரை அசெம்பிள் செய்தல்
- அசெம்பிளிங் முடிந்தவுடன் என்ன செய்வது என்பது தொடர்பான விளக்கம்.(BIOS Setup)
- Hard Disk ஐ முறைப்படுத்தல்
- Software,Operating System இன்ஸ்ரோல் செய்தல்
- கம்ப்யூட்டரில் ஏற்படுகின்ற பழுதுகளை சரிபார்த்தல்.

நன்மைகள்

- பாடநெறியின் இறுதியில் Computer Hardware சம்பந்தமான பூரண அறிவைப்பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
- Pentium I முதல் Pentium IV வரையிலான Computer களில் பூரண செய்முறைப் பயிற்சி.
- எமது ஆய்வுகூடத்தில் கம்ப்யூட்டரின் உட்தொழினுட்பம் பற்றி பூரண அறிமுகம் செய்வதால் கம்ப்யூட்டர் பற்றிய முன்னறிவு அவசியமில்லை.
- தராதரமும் நீண்ட அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களினால் கற்பிக்கப்படுகின்றது.

*Hardware* பயிற்சி

- கணனிப் பாகங்களை இனம் காணும் முறை
- Assembling
- BIOS Configurations (முறைப்படுத்தல்)
- Hard Disk இனை முறைப்படுத்தல் (Partition & Formatting)
- Net work தொடர்பான அறிமுகம்.
- Trouble Shooting / Maintenance

Free Study Pack & Driver CD

*Soft Ware* பயிற்சி

- Operating System நிறுவும் முறை (Windows 98/ Windows XP)
- Software Install செய்யும் முறை.
- Driver Installation செய்யும் முறை (Sound card, Modem , VGA, TV Card, Printer)
- Trouble Shooting .(Files Updating, Coping)

வகுப்புக்கள் ஆரம்பம்:-
26/12/2005 :- 08.30-04.00

*Course Fee :- 2000/=*

சர்வதேச தரம்வாய்ந்த சான்றிதழ்கள் வழங்கப்படும்

அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் அனுமதிக்கு முந்துங்கள்

கொழும்பிலிருந்து வருகைதரும் பிரபல விரிவுரையாளரால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

### இந்தியாவையும் கறிவேப்பிலை போன்றே பயன்படுத்தவேண்டும்

# அளவுக்கு மீறி சர்வதேசத் தலையீட்டுக்கு இடங்கொடாதீர் என்கின்றது ஜே.வி.பி.

## நிமல் ரட்நாயக்கா நாடாளுமன்றில் உரை

தமிழீழ விடுதலைப் புலிகள் சர்வதேச நாடுகளில் இருந்து நிதி பெறுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எமது நாட்டைப் பிரித்துக் கொடுப்பதற்காக எம்மை சுற்றிச் சுற்றிவரும் சர்வதேச நாடுகளைத் தவிர்க்கவேண்டும். எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக்கொள்ளும் நிலைக்கு வரவேண்டும்.

இந்தியாவாக இருந்தாலும் தேவைக்கு அதிகமாக பயன்படுத்தக் கூடாது. இந்தியாவைக் கறிவேப்பிலைபோல் பயன்படுத்த வேண்டும். தேவை முடிந்ததும் ஒதுக்கிவிட வேண்டும்.

எமது தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண நாம் இப்போது இந்தியாவை அணுகுகிறோம். இந்தியாவையும் நாம் அளவோடுதான் பயன்படுத்த வேண்டும்.

எமது பிரச்சினையில் அதிகம் மூக்கை நுழைக்க இந்தியாவை அனுமதிக்கக்கூடாது. கறிவேப்பிலையைப்போல் பயன்படுத்திவிட்டு வீசிவிட வேண்டும்.

எமது நாட்டின் பிரச்சினைக்கு இந்தியாவை மாத்திரமன்று, சர்வதேச நாடுகளினதும் ஆலோசனைகளைப் பெறுவது தப்பில்லை.

-இவ்வாறு நேற்று முன்தினம் நாடாளுமன்றில் வரவு - செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் ரட்நாயக்க கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

புலிகள் இயக்கத்திற்கு பல சர்வதேச நாடுகளிடமிருந்து நிதி கிடைக்கின்றது. அண்மையில் பிரான்ஸில் இருந்து புலிகள் பத்துக்கோடி யூரோ நிதியைப் பெற்றுள்ளனர். எனப் பிரான்ஸ் தெரிவித்துள்ளது. இதுமாத்திரமின்றி பல நாடுகளில் புலிகள் இவ்வாறு பணத்தைப் பெற்றுவருகின்றனர்.

இதைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை வெளிநாட்டமைச்சு சர்வதேச மட்டத்தில் மேற்கொள்ளவேண்டும்.

சர்வதேச மட்டத்தில் புலிகள் பலமடைந்துள்ளனர் எனப் புதிய இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். இதை வெளிநாட்டமைச்சு கருத்திகொண்டு செயற்பட வேண்டும்.

அதேபோல், எமது நாட்டின் இந்த யுத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 101 மேலதிக வாக்குகளால் பட்ஜெட் நிறைவேறியது

2006ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் 101 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது.

வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான விவாதம் செவ்வாய், புதன் மற்றும் வியாழன் ஆகிய மூன்று நாள்கள் இடம்பெற்றன.

இதை நிறைவேற்றுவதற்கான வாக்கெடுப்பு நேற்றுமுன்தினம் மாலை நடந்தது. வரவு - செலவுத் திட்டத்தை ஆதரித்து 119 வாக்குகளும், எதிராக 18 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அரசுடன் இணைந்து ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் ஆதரித்து வாக்களித்தன.

இ.தொ.கவிலிருந்து அரசு பக்கம் 'பல்டி' அடித்து பிரதி அமைச்சர் பதவியைப் பெற்றுக்கொண்ட வடிவேல் சுரேஷ் மற்றும் இ.தொ.காவின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பைஸல் முஸ்தபா ஆகியோரும் ஆதரித்து வாக்களித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மாத்திரம் எதிர்த்து வாக்களித்தனர்.

# அரசகரும மொழியாகிய தமிழுக்கு உரிய அந்தஸ்து வழங்கப்படவில்லை!

## அதற்காக வெட்கப்படுகின்றாராம் மஹிந்த சமரசிங்க எம்.பி.

நாட்டின் தேசியப் பிரச்சினையான யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து நிரந்தர சமாதானத்தை உருவாக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளில் தமிழ்மொழியை அரசகரும மொழியாகப் பிரகடனப்படுத்தும் திட்டமும் ஒன்று.

தமிழ்மொழியும் அரசகரும மொழிகள் என எமது அரசமைப்பு யாப்பு அங்கீகரித்திருக்கின்றபோதும் அது நடைமுறையில் இல்லை. இதை நினைத்து நாம் வெட்கப்பட வேண்டியுள்ளது. இந்நிலையை மாற்ற உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

-இவ்வாறு எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான மஹிந்த சமரசிங்க நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் வரவு - செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

தமிழ்மொழியும், சிங்களமொழியும் அரசகரும மொழிகள் என எமது அரசமைப்பில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டே வருகிறது.

இதைச் சரியான முறையில் நடைமுறைப் படுத்தும்போது தேசியப் பிரச்சினைக்கு அது நல்ல தீர்வாக அமையும்.

எமது நாட்டின் நலன்கருதி ஜனாதிபதி அடுத்தவாரம் இந்தியாவுக்குப் பயணம் செய்யவுள்ளார். இந்தப் பயணம் வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

ஜனாதிபதி போவது ஒன்றும் முக்கியமல்ல. அவர் இந்த நாட்டுக்கு அங்கிருந்து என்ன கொண்டுவருகிறார் என்பதுதான் முக்கியம்.

சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பைப் பெறுவதினின்றும் நாம் விலகியிருக்கமுடியாது. அதைவிடவும் எமது தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்பு எமக்கு மிகவும் முக்கியம். அந்த வகையில் நாம் இந்தியாவுடன் உறவைப் பலப்படுத்த வேண்டியது மிகமிக முக்கியம்.

ஜனாதிபதிக்கு இந்தியாவில் அமோக வரவேற்பு அளிக்கப்பட இருப்பதை நான் அறிகிறேன்.

இதுபற்றிய ஏற்பாடுகளைச் செய்ய ஏற்கனவே ஐந்து உயரதிகாரிகள் டில்லிக்குச் சென்றுள்ளனர். ஜனாதிபதியின் இந்த விஜயம் வெற்றியளிக்கவேண்டும் என் நான்

(12 ஆம் பக்கம் பார்க்க)



நாடாளுமன்றிலிருந்து...

# அமைச்சர் டக்ளஸ் மீது கூட்டமைப்பினர் பாய்ச்சல்!

கடந்த புதனன்று நாடாளுமன்றில் இடம்பெற்ற 2006ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனைப் பேசவிடாமல் கூச்சல்போட்டு குறிக்கீடு செய்தார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. அவரைப் பார்த்துப் பதிலுக்கு மிக மோசமான வார்த்தைகளினால் திட்டித்தீர்த்தார் கஜேந்திரன் எம்.பி.

''தமிழ் மக்களை இனவாதிகளுக்குக் காட்டிக்கொடுக்கும் உனக்கு எம்மைப் பேசவிடாமல் குறுக்கீடு செய்வதற்கு என்ன தகுதி இருக்கின்றது?'' - என்றும் ஏசினார் கஜேந்திரன்.

சபையில் இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈழவேந்தன், சிவநேசன் ஆகியோரும் கஜேந்திரனுக்கு ஆதரவாக தொடர்ந்தும் சத்தமிட்டவாறு ஏசத்தொடங்கியதால் அமைதியாக அடங்கிப்போனார் அமைச்சர் டக்ளஸ்.

இந்தக் களேபரத்தில் சபை ஒரே கூச்சலால் இரண்டுபட்டது.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் இடம்பெற்ற -2006ஆம் ஆண்டுக்கான - வரவு - செலவுத்திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் யாழ்.புங்குடுதீவில் இளம் பெண் ஒருவர் கடற்படையினரால் பாலியல் வல்லலுறவுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலைசெய்யப்பட்டமை பற்றியும் அதனைத் தொடர்ந்து படையினர் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பேராசிரியர் மீது மேற்கொண்ட தாக்குதல் பற்றியும் காரசாரமாகக் கண்டித்து உரையாற்றிக் கொண்டிருந்தார்.

அப்போது ஆளுங்கட்சியின் முன் வரிசை ஆசனத்தில் அமர்ந்திருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கஜேந்திரனைப் பேசவிடாமல் குறுக்கீடு செய்தார். கஜேந்திரன் கூறுவது பொய் எனப் பொருள்படும் வார்த்தைகளை அவர் பிரயோகித்தார்.

தமிழ் உணர்வுடன் ஆவேசமாகப் பேசிக்கொண்டிருந்த கஜேந்திரன், டக்ளஸின் குறுக்கீட்டால் மேலும் ஆவேசமடைந்தார்.

அந்த ஆவேசத்தில் டக்ளஸ் தேவானந்தாவை வாயில் வந்தவாறு ஏசித்தள்ளினார் கஜேந்திரன்.

'இனவாதிகளுக்கு செருப்புத்தூக்குபவன்', 'தமிழ்மக்களைக் காட்டிக் கொடுக்கும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அரசு நீடிக்கும் அவசரகாலச்சட்டம் தமிழ் மக்களின் அவமானச்சின்னம்

## தமிழ்ச்செல்வனைச் சந்தித்தபின் மனோ கணேசன் தெரிவிப்பு

கிளிநொச்சி, டிச.24

இலங்கை அரசு தொடர்ந்து நீடித்துவரும் அவசரகாலச் சட்டமானது தமிழ் மக்களின் அவமானச்சின்னம் என்று மேலக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார். தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை மேலக மக்கள் முன்னணித் தலைவர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடி னார்.

இச்சந்திப்பிற்குப் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அப்பேட்டியின் விவரம் வருமாறு:-

இன்றைய சந்திப்பு (22.12.2005) சுதந்திரமாகவும் சிறப்பாகவும் நடைபெற்றது. புதிதாகப்பதவியேற்றுள்ள மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் பற்றிய பார்வை எப்படியுள்ளது என்பதைத் தெரிந்துகொள்வதற்காக எமது பயணம் அமைந்திருந்தது.

எதிர்காலத்தில் நடைபெறவுள்ள உத்தேசப் பேச்சு வார்த்தையானது தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அடிப்படையாக வைத்து அதன் அடிப்படையிலேயே நடைபெறும் என்பதை தமிழ்ச்செல்வன் எமக்குத் தெளிவுபடுத்தியிருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு தேசிய இயக்கம்.

வடக்கு - கிழக்கு சார்ந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்று செயற்பட்டுக்கொண்டிருக்கும் கட்சிகள், இதைத் தவிர வடக்கு - கிழக்கிற்கு வெளியே எங்களின் மேலக மக்கள் முன்னணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகிய அனைத்துக்கட்சிகளும் ஒருசேரச் செயற்பட்டு இலங்கை நாடாளுமன்றத்திலேயே ஒரு பலம்மிக்க அரசியல் பேரம் பேசக்கூடிய அணியாக அமையவேண்டும் என்ற அடிப்படையில் இன்றைய கலந்துரையாடல் அமைந்திருந்தது.

எங்களைப் பொறுத்தவரையிலே ஏற்கனவே நாடாளுமன்றத்துக்குள்ளும் வெளியேயும் மேலக மக்கள் முன்னணி தமிழ் கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. பல்வேறு சந்தர்ப்பங்களில் தமிழர் விரோத சட்டமூலங்களும் செயற்பாடுகளும் நாடாளுமன்றத்துக்குள்ளே முன்னெடுக்கப்படும்போது அதற்கு எதிரான நிலைப்பாடுகளை நாம் எடுத்துள்ளோம் என்பது எமது நேர்மையான வரலாறாக இருந்து இருக்கின்றது.

அதுபோன்று நாடாளுமன்றத்திற்கு வெளியே ஸ்ரீலங்கா தலைநகரத்தில்தெருக்களில் இறங்கி தமிழ் தேசிய முழக்கத்தை முன்வைப்பதும் தமிழர்களுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு எதிராகப் போராட்டங்களை முன்னெடுப் பதும் நடைமுறையிலேயே செய்துகாட்டியுள்ளோம்.



ஆகவே பொதுவான இணக்கப்பாடு ஏற்கனவே உள்ளது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸைப் பொறுத் தவரையில் கடந்த காலங்களிலேயே அவ்வாறான செயற்பாடுகளில் அது இறங்க வில்லை. அவசரகாலச் சட்டம் போன்ற பல்வேறு சட்டமூலங்கள் வரும்போதெல்லாம் பொதுவான இணக்கப்பாட்டுடன் அவர்கள் செயற்படவில்லை.

இன்றைய சூழ்நிலையிலே சமீபத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளைச் சந்தித்துப் பேசிய பின்னர் - தற்போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முன்வைத்துள்ள முழக்கங்களின் அடிப்படையில் எங்கள் அனைவருடனும் இணைந்து செயற்படுவார்கள் என எதிர்பார்க்கின்றோம். அதற்கான கோரிக்கையும் விடுக்க விரும்புகிறேன்.

கேள்வி:- அவசரகாலச் சட்டம் தொடர்பான தங்களின் நிலைப்பாடு என்ன?

பதில் :-அவசரகாலச் சட்டம் என்பது தமிழர்களின் அவமானச்சின்னம். அச்சட்டத்தின் அடிப்படையில் வரக்கூடிய பலத்தை வைத்துக்கொண்டுதான் சிங்கள இராணுவமும், பொலீஸாரும் தமிழ் மக்களை அடக்கி, ஒடுக்கிக்கொண்டிருக்கின்றனர்.

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்திலேயே நடைபெறக்கூடிய கள நிலைமைகள் வேறு. வடக்கு - கிழக்குக்கு வெளியே ஸ்ரீலங்கா தலைநகரப் பகுதியிலே, எங்களது மேலகப் பகுதிகளிலே வாழக்கூடிய தமிழ் மக்களை இந்த அவசரகாலச்சட்டத்தை வைத்துக் கொண்டுதான் பொலீஸார் மற்றும் இராணுவத்தினர் பல்வேறு கெடுபிடிகளுக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நத்தார் திருப்பலி

குருநகர்,டிசெ.24

அல்வாய் சற்கோட்டை புனித பிரான்சிஸ்கு சவேரியார் ஆலயத்தில் நத்தார் தினத்திருப்பலி இன்று சனிக்கிழமை இரவு 11.45 மணிக்கு இடம் பெற உள்ளது. தொடர்ந்து நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கும் திருப்பலி நடைபெறும். (த-51)

## நினைவுத் தூபிகள் புனரமைப்பு

குருநகர், டிசெ.24

குருநகர் கடற்கரை வீதியில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா மற்றும் புரட்சித்தலைவர் எம்.ஜி.இராமச்சந்திரனின் சிலைகள் அமைந்துள்ள வளவு குருநகர் எம்.ஜி.ஆர். இரசிகர்களால் புனரமைக்கப்பட்டுள்ளது. இன்று எம்.ஜி. இராமச்சந்திரனின் 18 ஆவது வருட நினைவு நாளாகும். (3-51)

## சுகவாழ்வு நிறுவனத்தின் அஞ்சலி நிகழ்வு

யாழ்ப்பாணம் டிசெ.24

சுகவாழ்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் உயிரிழந்தவர்களுக்கான ஓராண்டு நினைவஞ்சலி நிகழ்வு எதிர்வரும் திங்கட்கிழமை மணற்காட்டில் நடைபெறும்.

மணற்காடு புனித அந்தோனியார் ஆலயத்தில் காலை 9. மணிக்குதிருப்பலி இடம் பெறவுள்ளது. அனர்த்தத்தில் இறந்தவர்களின் கல்லறைகளில் மலர்தீப அஞ்சலிகள் இடம்பெறும். அனர்த்தத்தின் போது பெற்றோர் களை இழந்த பிள்ளைகளுக்கு உடுபுடைவைகள் மற்றும் கற்றல் உபகரணங்களும் வழங்கப்படும் என சுக வாழ்வு நிறுவனத்தின் இயக்குநர் அருட் தந்தை டேமியன் அடிகளார்தெரிவித்துள்ளார். (3-190)

### வெளிக்கழத்தினம்

யாழ்,டிசெ.24

யாழ்ப்பாணம் வணிகர்கழகத்தின் பொதுக்கூட்டமும் நிர்வாகசபை தெரிவும் அடுத்த மாதம் 28ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கழகஅலுவலகத்தில் நடைபெறவுள்ளன (3-202)


**Organ/V ionNotes**

புதிய சினிமாப் பாடல்களுக்கான இசைக் குறிப்புகள் (பாகம்1-42) கேள்வி ஞானம் மேற்கத்தேய இசைபற்றிய தெரிந்து கொள் வோம் KeyBoard,Exercise ஆகி புத்தகங்கள் விற்பனைக்குண்டு

**S.S.Rajeendran**
Karaweena ISai Manram
75,Temple Road, Nallur,Jaffna.
T.P: 0713055991
நல்லூர் ஆஸ்பத்திரியில் இருந்து 500 தெற்கே



**ACTION CONTRE LA FAIM**

**RECEPTIONIST (JAFFNA)**

Action Contre La Faim is an International NGO involved in humanitarian activities in SriLanka, since 1997. Current activities are based in Batticaloa, Jaffna and Tricomalee districts. **We require a Receptionist for the Base of Jaffna.**

This position is suitable for a man or woman who has experience in receptionist work. (S) he has to answer to the phone and to dispatch the calls. (S)he will help the staff in every secretarial work. (S)he has to record appointments and to record and dispatch all the letters. (S)he is able to translate in English the incoming messages written in Tamil.

Applicants must be fluent in Tamil and English and able to do basic communication in Sinhala. Computer literacy, especially MS Word and Excel is required.

***Duration:*** 1 year with insurance coverage

Apply as soon as possible:
**ACF Administration**
**No. 40, Racca Lane, Chundikuli,**
**JAFFNA**
**TP/ FAX : 021 222 2465/ 021 222 6993**



**இதயங்கனிந்த நன்றி நவில்வதில் இறும்பூதெய்துகின்றோம்**



கொக்குவில் கற்புலத்து
ஸ்ரீ மனோன்மணி ஆலய
மண்டபத்தில் பார்த்திபவருடம்
கார்த்திகைத் திங்கள் 12 ஆம்
நாள் 27.12.2005
ஞாயிற்றுக்கிழமை நிறைவெய்திய
எங்களது நல்லறமாம் இல்லற
வாழ்வின் திருமாங்கல்ய தாரண
வைபவத்தில் கலந்து சிறப்பித்து
அன்புடன் ஆசீர் வதித்து
நல்வாழ்த்துக்கள் நல்கிய எமது
உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள் மற்றும் சக
ஊழியர்கள் அனைவருக்கும்
இதயங்கனிந்த நன்றிகளைத்
தெரிவிப்பதில்
நாம் மகிழ்ச்சியடைந்து
இறும்பூதெய்துகின்றோம்.

முதலாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பணம்.

-அன்புடன்-
திரு.திருமதி மயூரன் சுபதினி தம்பதிகள்

(44386)(51)



காலத்தின் தேவையறிந்து புதியதை அறிமுகம் செய்யும் சி.ஐ.சி
இல்லத்தில் இருந்து விவசாயிகளுக்கு புதிய தோர் வரப்பிரசாதம்
நெற்பயிரில் கபிலநிறத்தத்தியையும், வெளையத்திகளையும் கட்டுப்படுத்த




**அக்டரா 25W.G**

உருளைக்கிழங்குப்பயிரில் அழுக்கணவனைக் கட்டுப்படுத்த

அனைத்து சாறு உறிஞ்சும் பூச்சிகளையும் கட்டுப்படுத்தும்.
5gஅக்டரா 16l நீருக்கு போதுமானது

குறிப்பு:- சங்கரத்தை, மட்டுவில், வரணி, மிருசுவில், நாவற்குழி ஆகிய இடங்களில் தத்தியின் தாக்கம் அதிகமாக காணப்படுகிறது.

**சி.ஐ.சி. இல்லம்**
**199, கியூவீதி,**
**கொழும்பு.**

**ஏகவிநியோகஸ்தர்கள்:**
**பவானி களஞ்சியம் [யாழ்., நீர்வேலி]**
**அம்பிகா களஞ்சியம் [வன்னி]**



**நத்தார் - புதுவருடத்தை முன்னிட்டு அளப்பரிய அன்பளிப்புகள் இனாம்**

kit

WESTERN UNION MONEY TRANSFER

வெளிநாட்டிலிருந்து உறவினர்கள் **WESTERN UNION** மூலம் பணம் அனுப்பி பணப் பரிமாற்றல் இலக்கம் (MTCN 10 இலக்கங்கள்) உங்கள் கைகளில் கிடைத்துவிட்டதா?

**வங்கிக்கணக்கு தேவையில்லை, 24 மணி நேரமும் ஒருசில நிமிடங்களில் உங்கள் கைகளில் பணத்துடன் அன்பளிப்பும் கிடைக்க உடன்நாடுங்கள்.**

**மேலும் சகல விதமான தொலைபேசி அட்டைகள் Dialog GSM இணைப்புகள் (SIM) மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும்,**

**உள்நாட்டு, வெளிநாட்டுக் கடிதங்கள், பொதிகள் உடனுக்குடன் அனுப்பிட**




(C-46357)(45-15)

**SRI MURUGAN**
**TELE COMMUNICATION**
**AGENCY POST OFFICE**
**303, K.K.S. ROAD, JAFFNA. T.P. : 021 222 5392.**
**E.mail : srimurugan@eureka.lk**
**இன்னும் பல சேவைகளையும், அன்பளிப்புகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளவும்.**



# COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 15, Sirambiyadi Lane,Jaffna.
Tel:- 021-2228250, 0777-222422

**மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் ~ 2006**

**80% OFF**

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office<br>750/=<br>Duration :- 3 Months | Diploma in Desktop Publishing<br>~~6000~~/= 1200/=<br>Duration :- 4 Months | Diploma in Web page Designing<br>~~7000~~/= 1400/=<br>Duration :- 4 Months |
| Diploma in Graphic Designing<br>~~7000~~/= 1400/=<br>Duration :- 4 Months | Diploma in Hardware Engineering<br>~~6000~~/= 1200/=<br>Duration :- 3 Months | Accounting Package<br>~~7000~~/= 1400/=<br>Duration :- 3 Months |
| Diploma in Computer Science<br>~~7000~~/= 1400/=<br>Duration :- 4 Months | Honors Diploma in Computer Science<br>~~9000~~/= 1800/=<br>Duration :- 6 Months | Diploma in Auto CAD<br>~~6000~~/= 1200/=<br>Duration :- 3 Months |

**Advances Courses**

**50% OFF**

| | | |
|---|---|---|
| Diploma in Net Working | ~~4000~~ | 2000 |
| Diploma in Video Editing | ~~6000~~ | 3000 |
| Diploma in Multimedia | ~~5000~~ | 2500 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்,
வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

வகுப்புகள் ஆரம்பம்
Batch I - 07/01/2006
Batch II - 13/01/2006
Batch III - 15/01/2006
Batch IV - 28/01/2006

January 30ம் திகதிக்கு முன்னர் பதிவு செய்துகொள்ளவும்.


## பஸ்ஸில் நகைகள் திருட்டுப்போயின்.

அச்சுவேலி, டிசெ.24.

யாழ்ப்பாணத்திலிருந்து அச்சுவேலிக்குதனியார் மினிபஸ்சில் பிரயாணம் செய்த பெண்ஒருவரிடம் பதினாறு பவுண் தங்க நகைகள் திருடப்பட்டன.

தங்கநகைகளை பறிகொடுத்த பெண் அச்சு வேலி வடக்கைச்சேர்ந்த திருமதி கிருஸ்ணமூர்த்தி அன்னராணி ஆவார்.

தனது மகள் யாழ். போதனாவைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டதால் மகளின் பத்துப்பவுண் தாலிக் கொடிமற்றும் காப்பு, சங்கிலி உள்ளிட்ட நகைப்பார்சலை தனது பையில் வைத்துக்கொண்டு அச்சுவேலிக்குத் தனியார் மினிபஸ்சில் திரும்பினார்.

மினிபஸ்சில் வைத்தே நகைகள் களவாடப்பட்டு விட்டன. இது தொடர்பாக அச்சுவேலி பொலீசில் புகார் செய்யப் பட்டுள்ளது. (3-11)

## சேவைக்காலப்பயிற்சி

அச்சுவேலி, டிசெ.24.

பிள்ளைநேயப் பாடசாலை தொடர்பான இரண்டு நாள் சேவைக்காலப் பயிற்சி அச்சுவேலி மத்திய கல்லூரியில் இன்று சனிக்கிழமையும் எதிர்வரும் திங்கட்கிழமையும் நடைபெறும். அடுத்தவருடம் தொடக்கம் நடைமுறைப்படுத்தப் படவுள்ள ''பிள்ளைநேயப் பாடசாலையில் செயற்பாட்டில் அதிபர்கள் ஆசிரியர்களின் கடமைக்கூறுகள்'' தொடர்பான சேவைக்காலப்பயிற்சிகள் பாடசாலை மட்டத்தில் நடைபெற்று வருகின்றன. (3-11)

# புதுப்புது வடிவங்களில் மிதிவண்டிகளைப் பொருத்தும் சாதனை படைக்கும் சாவகச்சேரி இளைஞன்!...

**நவீன வசதிகள் கொண்டதாக மிதி வண்டிகளைத் தயாரிக்கும் தொழில் நுட்பங்களை அறிமுகம் செய்து வருகின்றார் சாவகச்சேரியைச் சேர்ந்த ந.ஜெயசீலன் என்ற இளைஞன். அவர் உதயனுக்கு வழங்கிய செவ்வி.**

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் புதிய வடிவிலான மிதிவண்டியில் இருவர் பயணித்து வருவது எல்லோரின் கவனத்தையும் ஈர்த்தது.

ஆறு அடி நீளமும் ஆறு அடி உயரமும் கொண்ட இந்த மிதிவண்டியில் 5½ அடி உயரத்தில் ஒருவரும் 2½ அடி உயரத்தில் ஒருவருமாக இருவரும் மிதிவண்டி பெடல்களை மிதித்துச் செலுத்திச் செல்கின்றனர்.

இருவர் மிதிக்கவெனத் தனித் தனிப் பெடல்கள் அமைக்கப்பட்டுள்ளதால் இருவரும் ஒரே நேரத்தில் பெடல்களை மிதித்து வேகமாக செலுத்திச் செல்கின்றனர்.

உயரத்தில் உள்ள இருக்கையில் அமர்ந்துள்ளவர் முன் சக்கரத்தின் செயற்பாட்டினை வைத்திருக்கும் கான்ரில் மற்றும் மிதிவண்டியினை நிறுத்தும் 'பிரேக்' ஆகியவற்றைக் கையாளும் வகையில் இந்த மிதிவண்டி வடிவமைக்கப்பட்ட போதிலும் பின் இருக்கையில் அமர்ந்திருப்பவர் பிடிக்கக் கூடிய கைபிடியும் உள்ளதால் எதுவித பயமுமின்றி ஏ-9 வீதியூடாக ச் செல்கின்றது இந்த வண்டி.

சாவகச்சேரிப் பகுதியில் புதுவிதமான மிதிவண்டியாக உள்ளதால் அதன் உரிமையாளர் யார் என விசாரித்தபோது சாவகச்சேரி பழைய நீதிமன்றின் முன்பாக உள்ள நியூஜெயம் மிதிவண்டி திருத்தும் கடையின் உரிமையாளர் ந.ஜெயசீலன் என்பவரினது எனத் தெரியவந்தது.

அவரின் கடையை நோக்கிச் சென்றபோது எனக்குப் பெரும் ஆச்சரியமாக இருந்தது. ஏனெனில் கடந்த வருடம் பெரிய, சிறிய சக்கரங்களைக் கொண்ட ஒருவர் பயணிக்கக் கூடிய மிதி வண்டியைத் தயாரித்து வெற்றி கண்டவர் எனத் தெரிந்து கொண்டேன்.

அங்கு நான் கண்ட காட்சி என்னையே வியப்பில் ஆழ்த்தியது.

வீதியில் உலாவரும் மிதிவண்டி போன்று மேலும் ஒரு மிதிவண்டி வடிவமைக்கப்பட்டு பூர்த்தியடையாத நிலையில் காணப்பட்டது.

கடையினுள் பெருமளவு மிதி வண்டியின் பழைய உதிரிப் பாகங்களின் குவியல்கள் ஒரு புறத்திலும் திருத்த வேலைக்கென கொடுக்கப்பட்ட மிதிவண்டிகள் ஒரு புறத்திலும் காணப்படுகின்றபோதிலும் ஓரமாக ஒரு இடத்தில் புதிய மிதி வண்டி வைக்கப்பட்டிருந்தது.

இந்த மிதிவண்டியின் உற்பத்தி தொடர்பாக உதயன் பத்திரிகையில் கட்டுரை வரைவதற்குத் தகவல்கள் வழங்க முடியுமா? எனக் கேட்ட போது என் அருகில் வந்து அமர்ந்து பேட்டி தரத் தயாரானார்.

**கேள்வி:** இதே போன்ற மிதி வண்டி உற்பத்தி செய்வதற்கு ஐடியா எவ்வாறு ஏற்பட்டது?

**பதில்:** உலக நாடுகளில் உள்ள தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் வித்தியாசமான முறையில் தயாரிக்கும் பொருள்களை ஊடகங்கள் மூலம் விளம்பரப்படுத்தும் போது அதை நாம் வியப்புடன் பார்க்கின்றோம். அவ்வாறான உற்பத்திப் பொருள்களில் பல எமது நாட்டிற்கு வருவதில்லை. அதனால் நாங்கள் பத்திரிகையில், ரீ.வியில் மட்டும் பார்க்கிறோம்.

**செவ்வி கண்டவர் :- ஐ.கிருஷ்ணன்**

எமது மண்ணிலும் இவ்வாறான ஒரு உற்பத்தியினை உருவாக்கி அதனை உலக நாடுகளில் பார்க்கச் செய்யவேண்டுமென என் மனதில் எழுந்த சிந்தனையே இந்த உற்பத்தியினை செயல் வடிவமாக்க பல இரவுகள் கஷ்டப்பட்டு உழைத்ததன் பயனே இந்த மிதிவண்டி. இந்த உற்பத்தி ஊடகங்கள் மூலம் விளம்பரமாகி உலக நாடுகள் மத்தியில் பிரபலம் பெறும் போது எமது தமிழ் மண்ணுக்குக் கிடைக்கும் பெருமையாகவே கருது வேன்.

**கேள்வி:** இவ்வாறான மிதி வண்டியின் உருவாக்கம் விற்பனை நோக்கத்திற்காகவா அல்லது காட்சிப்படுத்தும் விளம்பரத்திற்காகவா?

**பதில்:** இந்த மிதிவண்டியில் உல்லாசமாக நீண்டதூரம் பயணிக்கக் கூடிய வகையில் உரு வாக்கப்பட்டதால் இந்த வண்டிக்கு கிராக்கி ஏற்படும் என நம்புகின்றேன்.

இதன் நடுச்சட்டம் (பார்) மட்டும் நாங்கள் உருவாக்கினோம். ஏனைய உதிரிப்பாகங்கள் யாழ்ப்பாணத்தில் தாராளமாகப் பெற முடிவதால் நிச்சயமாக வியாபார நோக்கத்துடனேயே உருவாக்கினோம்.

எம்மால் முன்னர் உருவாக்கப்பட்ட மிதிவண்டி மக்கள் மத் தியில் ஆர்வத்துடன் கொள்வனவு செய்தது போன்று இந்த மிதி வண்டியும் கொள்வனவு செய்ய மக்கள் முன் வருவார்களாயின் அவர்களின் தேவையைப் பூர்த்திசெய்து வழங்குவோம்.

**கேள்வி:** இந்த மிதிவண்டியைச் செலுத்துவதில் சிரமங்கள் ஏற்படாதா?

**பதில்:** நிச்சயமாக ஏற்படாது. ஏனெனில் இந்த மிதிவண்டியைச் செலுத்துவதற்கு இருவர் பெடல்களை மிதிக்கின்றபோதும் ஒருவரே அதனை இயக்குவதால் எந்தவொரு சிரமமும் ஏற்படமாட்டாது.

உயரத்தில் இருப்பவரே அதன் முழு இயக்கத்தினை வைத்திருப்பதால் மிதிவண்டியினை வேகமாகச் செலுத்தினாலும் பாதிப்பு இல்லாத வகையில் வழமையாக மிதிவண்டியில் பயணிப்பதைப் போல இந்த மிதிவண்டியில் செல்லமுடியும். தனியொருவர் கூட பயமின்றிச் செலுத்தக்கூடிய வகையில் உரு



வாக்கியுள்ளோம்.

**கேள்வி:** இந்த மிதிவண்டியினை உற்பத்தி செய்வதற்கு பெருமளவு செலவு ஏற்படுமா?

**பதில்:** இந்த மிதிவண்டியினை உருவாக்குவதற்கான உபகரணங்கள், குழாய்கள் யாழ்ப்பாணத்தில் கிடைக்கிறது. அவற்றினைத் தேவைக்கு அளவாக வெட்டி நடுச்சட்டமாக உருவாக்குவதற்குரிய இயந்திரமும், வர்ணம் பூசும் இயந்திரமும் எம்மிடம் உள்ளன.

மற்றைய உதிரிப்பாகங்கள் அனைத்தும் இங்கு பெறக் கூடிய தாக உள்ளன. இவற்றினை மிதி வண்டியாக உருவாக்குவதற்குரிய கருவிகள் அனைத்தும் எம்மிடம் உள்ளன. இதனால் இதனை உற்பத்தி செய்வதற்கு அதிக செலவு ஏற்படுமென நினைக்கவில்லை.

இது முதல் உற்பத்தியென்பதால் (10 ஆம் பக்கம் பார்க்க)

# சின்னம் சூட்டும் நிகழ்வு






'மைக்ரோசொப்ற்' நிறுவனத்தின் கணனிப் பொறியியலாளர் கற்கை நெறியைப் பூர்த்தி செய்தோருக்கான சான்றிதழ் வழங்குதலும் சின்னம் சூட்டுதலும் அண்மையில் எம்.சி.எஸ்.கணனி நிறுவனத்தில் நடைபெற்றது.

சிரேஷ்ட புவியியல் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு 'மைக்ரோசொப்ற்' நிறுவன அதிபர் பில்கேற்ஸ் கையெழுத்திட்டு அனுப்பி வைத்த சான்றிதழையும் தகைமை காண் அட்டையையும் வழங்கினார்.

உலகில் சிறந்த கணனிக் கல்வி நெறிகளைக் குறைந்த செலவில் வழங்குவதில் எம்.சி.எஸ். நிறுவனம் சிறந்த பங்களிப்பை வழங்கி வருகின்றது. பல்வேறு சவால்களுக்கு மத்தியில் எமது பிரதேசத்திலேயே சர்வதேச நிறுவனங்களின் கணனி சார் உயர் தொழில்நுட்பக் கற்கை நெறிகளையும் கணனிப் பொறியியல் கற்கைநெறிகளையும் கற்கும் சந்தர்ப்பமானது எம் மாணவர்களுக்கு சிறந்த வரப்பிரசாதமாகும். மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத்தில் அடிப்படை கற்கை நெறிகளை மட்டுமல்லாது தொழில்சார் சிறப்புக் கற்கை நெறிகளையும் பயில வேண்டும் என பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

'சிஸ்கோ', 'ஏ+' கற்கை நெறிகளையும் ஆரம்பித்துள்ள தாம் விரைவில் இணைப் பல்கலைக்கழக முறைமையை யாழில் ஆரம்பிக்கவுள்ளதாகவும் இதனூடாக யாழ். மாணவர்கள் சர்வதேச பல்கலைக்கழகங்களின் கற்கைநெறிகளிலும் இணைந்து கொள்ளக்கூடியதாக இருக்கும் என அந்த நிறுவனத்தின் அதிபர் தெரிவித்தார். (3)




ஹற்றன் நஷனல் வங்கியின் நெல்லியடிக்கிளை தனது முதலாவது பிறந்த தினத்தை அண்மையில் கொண்டாடிய போது எடுக்கப்பட்ட படம் நிகழ்வில் வங்கியாளர்கள் பிறந்ததின கீதம் இசைக்க முகாமையாளர் பிரதி முகாமையாளருக்கு கேக் ஊட்டும் போது எடுக்கப்பட்ட படம் இது. (3-203)

# சிறப்பாக நடைபெற்ற 'அகரமுதலி' கணனி மென்பொருள் வெளியீடு

யாழ்ப்பாணம்,டிசெ.17

கணனி மென்பொருள் வடிவமைப்பாளர் செல்வதாஷனின் தகவல் தொழில்நுட்ப 'கலைச்சொல் அகர முதலி' எனும் கணனி மென்பொருள் வெளியீட்டு விழா அண்மையில் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.



இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பேராசிரியர் என்.சண்முகலிங்கனும் சிறப்பு விருந்தினராக வணிகத் துறைப் பீடாதிபதி கே.தேவராஜாவும் கலந்து கொண்டனர்.

ஆசியுரையை யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயரும் வாழ்த்ததுரையை வலிகாமம் வலய மாணவர் அபிவிருத்திப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் கு.சண்முகநாதன், மானிப்பாய் இந்துக்கல்லூரி பிரதி அதிபர் கே.ஜெகநாதன், மானிப்பாய் இந்துக்கல்லூரி முன்னாள் சிரேஷ்ட ஆசிரியை திருமதி கிருபாலசிங்கம் ஆகியோரும் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பேராசிரியர் என். சண்முகலிங்கன் கணனிமென்பொருள்களை வெளியிட்டு வைக்க வணிகத் துறைப் பீடாதிபதி கே.தேவராஜா அதன் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார்.(203)

# தொழில் வளம்








'யுனிவெக்' நிறுவனத்தின் கணனி மென்பொருள் பொறியியல் பூங்காவின் ஆரம்பவைபவம் கடந்த 15 ஆம் திகதி நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி இரா.சிவச்சந்திரன் மாணவர்கள், விரிவுரையாளர்கள் சகிதம் அழைத்து வரப்படுவதையும்- பிரதம விருந்தினர் பொறியியல் பூங்காக் கட்டடத்தை நாடாவெட்டித் திறந்துவைப்பதையும் முதலிருபடங்களிலும் காணலாம். அடுத்துள்ள படத்தில் 'யுனிவெக்' நிறுவன நிர்வாக முகாமையாளர் பா.சுரேஷ்குமார், பிரதம விருந்தினர் இரா.சிவச்சந்திரன் ஆகியோருடன் விரிவுரையாளர்களான சி.சுதர்சன், எஸ்.செல்வதாசன், து.ரஜீவன் ஆகியோரையும் காணலாம்.

# புதுப்புது வடிவங்களில் மிதிவண்டிகள்....

(09ஆம் பக்க தொடர்ச்சி)

செலவு விவரங்கள் திட்ட வட்டமாகத் தெரிவிக்கமுடிய வில்லை. இருப்பினும் இதனைத் தயாரிப்பதற்கு சுமாராக 4 ஆயிரம் ரூபாவுக்கும் 5 ஆயிரம் ரூபாவுக்கும் இடைப்பட்ட தொகை செல வாகு மென நினைக்கிறேன்.

ஏனெனில் மிதிவண்டிக்குப் பயன்படுத்தும் நடுச்சட்டம் (பார்) தவிர்ந்த ஏனைய உதிரிப்பாகங்கள் சாதாரண மிதிவண்டிக்குப் பயன் படுத்துபவை என்பதால் அவற்றிற்கான செலவினை நாம் கணக்கிட்டுப் பார்க்கும் போது மேற் கூறிய தொகை செலவாகுமென நினைக்கிறேன்.

கேள்வி: முன்னால் உங்களால் உருவாக்கப்பட்ட மிதிவண்டி உற் பத்தியை நிறுத்தி விட்டீர்களா?

பதில்: எம்மால் முன்னர் உரு வாக்கிய சிறிய, பெரிய சக்கரங்களைக் கொண்ட மிதிவண்டிக்குப் பெரும் கிராக்கி. தென்னிலங்கை யில் உள்ள மிதிவண்டி விற்பனை நிலையம் ஒன்று எம்முடன் அடிக் கடித் தொடர்புகொண்டு அந்த மிதி வண்டியினை அனுப்புமாறு கோரி வருகின்றனர்.

சாவகச்சேரியில் கடந்த மாதம் நடைபெற்ற சர்க்கஸ் நிகழ்வில் எமது தயாரிப்பான மிதிவண்டி தினமும் பயன் படுத்தி அந்த மிதி வண்டியினை சர்க்கஸ் கொம்பனி கொண்டு போய்விட்டது.

கேள்வி: மிதிவண்டி திருத்தும் பணியில் உள்ள உங்களுக்கு இவ்வாறான மிதி வண்டிகள் உற்பத்தி செய்ய நேரம் கிடைக்கிறதா?

பதில்: தினமும் காலை 7 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை எமது தொழிலில் கவனம் செலுத் தும் நாங்கள் இரவு 8 மணிக்குப் பின்னரே இவ்வாறான தயாரிப்புகளில் ஈடுபடுகிறோம்.

என்னுடன் கடையில் வேலை செய்பவர்கள் ஆறுமணியுடன் வேலை முடிந்து வீட்டுக்குச் சென்றுவிட்டு 8 மணிக்கு மீண்டும் வருவார்கள். அதன் பின்னரே இதனை உருவாக்கினோம். எனது கடையில் வேலை செய்பவர்களின் நிறைந்த ஒத்துழைப்பிற்குக் கிடைத்த வெற்றியே இந்த மிதி வண்டி என்றால் மிகையாகாது.

## காயம்

தென்மராட்சி டிசெ.24

வீதியின் குறுக்கே வந்த மூன்று மாடுகளுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் அதில் பயணித்த இருவர் காயமடைந்தனர்.

கடந்த . புதன் கிழமை கொடிகாமம் பகுதியில் இச் சம்பவம் இடம் பெற்றது

காயமடைந்த புலோப்பளையைச் சேர்ந்த கே. ஈஸ்வரன் (வயது34) என்பவர் சாவ கச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக் கப்பட்டு மேலதிக சிகிச் சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப் பட்டார்.

(3-117)


## எட்டாம் ஆண்டு நினைவு

தோற்றம் 28 – 02 – 1927



மறைவு 24 – 12 – 1998

### அமரர் நாகமுத்து சின்னத்துரை(J.P)

*(முன்னாள் உடுவில் கி.ச.உபதலைவர்)*

ஏழு ஆண்டுகள் சென்றதய்யா
மாறவில்லை உம் திருவதனம்
தேடி நித்தம் ஏங்குகின்றோம்
காணவில்லை உம் திருவுருவம்
கூடியிருந்து அரவணைத்து - இன்று
எம்மை விட்டுச் சென்றதேனோ

பிரிவால் துயருறும்:
மகள் - பவளமலர்
மருமகன்- பாக்கியநாதன்
பேரப்பிள்ளைகள்- பிரியா,தீபா, சிந்து, சரணியா.

ஞானப்பிரகாசம் வீதி,
மல்வம்,
உடுவில்.

(44467)(21.15.45)



## பதவி வெற்றிடம்

கிளிநொச்சி சேவாலங்கா நிறுவன சுனாமி அலுவலகத்தின் ஜீவனோபாயத் திட்டப் பிரிவில் பின்வரும் பதவிகளுக்கான நியமனங்கள் உடனடியாக நிரப்பப்படவுள்ளன.

01. மீன்வள அபிவிருத்தி உத்தியோகத்தர் (Fisheries Officer)
*கல்வித் தகைமை:-* Dip in Fisheries
*விசேட தகைமை:-* அரச சார்பற்ற நிறுவனத்தில் குறைந்தது ஒரு வருட சேவை செய்த அனுபவம்

02. விவசாய உத்தியோகத்தர் (Agricultural Officer)
*கல்வித் தகைமை:-* விவசாயப் பட்டதாரி அல்லது விவசாய டிப்ளோமா சான்றிதழ்
*விசேட தகைமை:-* அரச சார்பற்ற நிறுவனத்தில் குறைந்தது ஒரு வருட சேவை செய்த அனுபவம்

03. வெளிக்கள ஒருங்கிணைப்பாளர் (Field Coordinator)
*கல்வித் தகைமை:-* க.பொ.த (உ/த)
*விசேட தகைமை:-* அரச சார்பற்ற நிறுவனத்தில் குறைந்தது ஒரு வருட சேவை செய்த அனுபவம், கணனி அனுபவம்

04. வெளிக்கள உத்தியோகத்தர்
*கல்வித் தகைமை:-* க.பொ.த (உ/த)
*விசேட தகைமை:-* அரச சார்பற்ற நிறுவனத்தில் குறைந்தது ஒரு வருட சேவை அனுபவம்,

(கல்லாறு மருதங்கேணி சுப்பர் மடம் கொட்டடி மாதிரிக்கிராமம் தீர்த்தக் கரை ஆகிய பிரதேசங்களில் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதனால் அப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

மேற்படி பதவிகளுக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் சேர வேண்டிய இறுதித் திகதி 31.12.2005 விண்ணப்பங்கள் திட்ட முகாமையாளருக்கு கடித மூலமாகவோ, பக்ஸ் மூலமாகவோ,நேரடியாகவோ கிடைக்க வேண்டிய முகவரி:-

**சேவாலங்கா மன்றம்,**
**சுனாமித் திட்ட அலுவலகம்,**
*இல.72, திருநகர்,*
*கிளிநொச்சி.*
பக்ஸ்:- 021-2283957

*முக்கிய குறிப்பு:* 1,2,3ஆம் நிலைகளுக்கு கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களிற்கு முன்னுரிமை அளிக்கப்படும்

(சி-47028)
(21.15.45)



## CHRISTMAS OFFER FROM MOBITEL

**Total Incoming Free PKG**

| | Peak | Off Peak |
|---|---|---|
| Out going | 9.50 | 5.00 |
| In coming | Free | Free |
| M to M(out going) | 5.00 | 4.00 |

இச்சலுகை 31th Dec மட்டுமே---

**Pre paid Card**

| | Peak | Off Peak |
|---|---|---|
| Out going | 10.00 | 6.00 |
| In coming | 6.00 (1st 2min free) | Free |

Without Commitment

(C/47026)

Nominated any Four numbers out going 5/=

All Phones Sales With 1 Year Warranty

412, Hospital Road, Jaffna. T.P:021 222 2031



## IDM Computer Studies (pvt) Ltd.

IDM
The Nation's ICT Academy

**Jaffna Branch**
**216, Navalar Road, Jaffna**

### முக்கிய அறிவித்தல்

IDM மாணவர்களுக்கான இறுதிப்பரீட்சை

யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் 27.12.2005 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு [பு.நே] பரீட்சைகள் இடம்பெறுகின்றன.

பரீட்சை விவரம்:

Diploma in Computer Studies (DICS)
Diploma in Computerized Accounting (DICAP)
Diploma in Hard Ware Engineering (DHW)
International Computer Driving Licence (IDCL)

இப்பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து மாணவர்களையும் அன்றைய தினம் பரீட்சைக்குரிய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

[சி/47022][42-21.15.45]

### நீத்தார் நயப்புரை

# சமய, இலக்கிய மேம்பாட்டிற்கு வாழ்நாளை அர்ப்பணித்தவர்



சைவசமய வளர்ச்சிக்கும் சமூக மற்றும் சமய இலக்கிய மேம்பாட்டிற்கும் தம் வாழ்நாளை அர்ப்பணித்து வந்தவர் சீனியர் விநாசித்தம்பி அவர்கள். கல்வித்துறையில் மாத்திரமின்றி இயல்பாகவே கவிதை புனைவதிலும் வல்லவராக விளங்கினார். பண்டிதர் சி.கதிரவேலு, பண்டிதமணி இலக்கிய கலாநிதி சி.கணபதிப்பிள்ளை, தத்துவஞானி பொ.கைலாசபதி, ஆசிரியக் கலாசாலை அதிபர் திரு. எஸ்.சுவாமிநாதன் ஆகியோருடைய தொடர்பினால் தன்னுடைய கல்வி, கவித்துவ வளர்ச்சியிலே இன்னுமொரு பரிமாணத்தை ஈட்டிக்கொண்டார். ஆன்மீகத் துறையிலும் இவர் காட்டிவந்த ஈடுபாடு குறிப்பிடத்தக்கதாகும்.

சிறந்த சமயச் சொற்பொழிவாளராகவும், கதாப்பிரசங்கம் நிகழ்த்துவதில் வல்லராகவும் விளங்கிய விநாசித்தம்பி அவர்களது சமயப்பணி யாழ்ப்பாணத்தில் உள்ள பெரும்பாலான ஆலயங்களில் விரிவடையலாயிற்று. கந்தபுராணம், பெரிய புராணம், விநாயகபுராணம், கந்தர் அனுபூதி, தேவிபாகவதம், கம்பராமாயணம் ஆகிய சமய இலக்கியங்கள் தரும் உயர்ந்த சமய சிந்தனைகளைத் தமது சமய உரைகள் மூலம் மக்கள் மத்தியில் பரப்பி நல்லைநகர் நாவலர் காட்டிய வழியில் சமயவளர்ச்சிக்கு அரும்பணியாற்றியவர்.

இவர் அண்மையில் வெளியிட்ட கந்தபுரண வசன காவியம் என்ற நூல் குறிப்பிடத்தக்கதொன்று. இவரது கவித்துவச் சிறப்பினால் பிள்ளைத்தமிழ், திருவூஞ்சல், திருப்புகழ், பஜனைப்பாக்கள், திருவிரட்டை மணிமாலை, திருவந்தாதி, திருப்பள்ளியெழுச்சி போன்ற பாவடிவங்களில் ஏறக்குறைய நூற்றுப் பத்தொன்பது கவிதை நூல்கள் வெளிவந்துள்ளன. இவரது பல வருட விடாமுயற்சியின் பெறுபேறாக இவ்வெளியீடுகள் விளங்குகின்றன. இந்நூல்கள் சைவ சமயத்திலும் சைவசித்தாந்தத்திலும் இவருக்கு இருந்த புலமையை வெளிப்படுத்தி நிற்கின்றன.

பல்வேறு சமூக நிறுவனங்களில் இவர் இணைந்து பணியாற்றியதன் மூலம் சிறந்ததொரு சமூக வழிகாட்டியாகவும் விளங்கியவர். ஆதரவற்ற குழந்தைகளைப் பராமரிப்பதிலும் சமூக நிறுவனங்களில் ஆலோசகராகப் பணியாற்றுவதிலும் விநாசித்தம்பி பெரிதும் ஆர்வத்துடன் செயற்பட்டவர். வீடுகள் மற்றும் ஆலயங்கள் அமைக்கப்படும்போது இவர் உரிய ஆலோசனைகளை வழங்குவதில் வல்லவர். சோதிடத்துறையிலும் கணிசமாகப் பங்காற்றி வந்தவர். இவை யாவற்றுக்கும் மேலாக யாழ்ப்பாணத்தில் இயங்கும் இந்துசமயப் பேரவைக்குத் தலைமை தாங்கி வழிநடத்தியதன் மூலம் தமது ஆளுமையை வெளிப்படுத்தி சமய சமரச உளப்பாங்குடன் செயற்பட்டுவந்தார்.

அகில இலங்கை இந்து மாமன்றம் தனது பொன்விழாவையொட்டி கடந்த ஜூலை மாதத்தில் யாழ்ப்பாணத்தில் நடத்திய இந்து மாநாட்டின்போது இவருக்கு ''ஞானவித்தகர்' என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்திருந்தது.

**கந்தையா நீலகண்டன்**

# சமூக சேவையாளர் சிவரத்தினம்



சைவமும் தமிழும் செழித்து வளரும் யாழ்ப்பாணத்திலே, கல்வியும் செல்வமும் சிறப்புற்றோங்கும் சுன்னாகம் என்னும் ஊரிலே அமரர் சிவசுப்பிரமணியம் சிவரத்தினம் பிறந்தார்.

இவரின் தந்தையார் சிவசுப்பிரமணியம் விஞ்ஞானத்திலும் கலைப் பிரிவிலும் பட்டம் பெற்றவர். சமூக நன்மதிப்புப் பெற்ற தொழிலாகிய 'குருத்தொழிலை' தெரிவுசெய்து அதிலே இணைந்துகொண்டவர். ஆசிரியராக, உப அதிபராக, அதிபராகப் படிப்படியாக உயர்ந்து வளர்ந்தவர். சிவசுப்பிரமணியம் அதிபராகப் பணியாற்றிய காலத்திலே ஸ்கந்தவரோதயக் கல்லூரி பேருடனும் புகழுடனும் விளங்கியமையை யாவரும் அறிவர். இக்காலப் பகுதியிலே இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் மாணவர்கள் ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலே வந்து படித்து சிறந்த பட்டங்களையும் நல்ல பதவிகளையும் பெற்றனர். அமரர் சிவரத்தினமும் இவரது சகோதரர்களும் இக்கல்லூரியிலேயே கல்வி கற்று உயர்நிலையடைந்தனர்.

அமரர் சிவரத்தினத்தின் மூத்த சகோதரர் வைத்திய கலாநிதி சி.சிவானந்தராசா மிகச்சிறந்த வைத்தியர் மாத்திரமன்றி, நல்ல சமூக சேவையாளருமாவார். எமது பிரதேசத்தின் உயர்ந்த கல்விச் சொத்தாக மிளிரும் யாழ்.பல்கலைக்கழகத்தின் அதியுயர் சபையாகிய பேரவையின் உறுப்பினராகப் பல வருடங்கள் சிறப்புடன் பணியாற்றி வருகின்றார். இவரது குடும்பத்தினர் யாவரும் மிகவும் உயர்ந்த நிலையிலேயே இருக்கின்றனர்.

அமரர் சிவரத்தினம் யாழ்.செயலகத்தில் விலை மதிப்பீட்டாளராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கையில் காலமானார். அவரது சகோதரன் சி.சிவானந்தராசா பல்கலைக்கழகத்திற்கு பணியாற்றுவது போலவே அமரர் சிவரத்தினமும் பணியாற்றியதை இவ்விடத்திலே நினைவு கூர விரும்புகின்றேன்.

பல்கலைக்கழகத்திற்குத் தேவையான காணிகளை விலைக்கு வாங்கும்போது அக்காணியை அரசாங்க விலைமதிப்புத்திணைக்களத்தால் விலை மதிப்புச் செய்யவேண்டும். நாளுக்கு நாள் விலையேறும் காணியை விரைவாக விலைமதிப்புச் செய்து தந்தாலே அதை வாங்க முடியும். இந்த வகையில் நாம் குறிப்பிடும் காணிகளை விரைவாக விலை மதிப்பீடு செய்து வாங்குவதற்கு அன்னார் பேருதவியாற்றி வந்தார். அதை நாம் என்றும் மறக்கமுடியாது.

இவ்வளவு விரைவில் சிவரத்தினம் அமரராவார் என்று ஒரு பொழுதும் சிந்தித்திருக்கவில்லை. அச்செய்தி கேட்டவுடன் மிகவும் அதிர்ச்சியும் வேதனையுமடைந்தேன். அன்னாரது இழப்பு அன்னாரது மனைவி, பிள்ளைகளுக்கும், சகோதர சகோதரிகளுக்கும், உற்றார், உறவினர்களுக்கு மட்டுமன்றி சமூகத்திற்கும் பேரிழப்பாகும்.

**பேராசிரியர் எஸ்.மோகனதாஸ்,**

# சட்டத்துறையுடன் சமூகத் தொண்டிலும் ஈடுபட்ட பெரியார்



கடந்த 01.12.2005 இல் அமரத்துவம் அடைந்த சட்ட விற்பன்னர் உருத்திரா அவர்களுடன் பல வருடங்கள் பழகும் வாய்ப்பு பெற்றமையால் அன்னாரின் அருங்குணங்கள், தகுதிகள், திறமைகள் முதலானவற்றை இச் சந்தர்ப்பத்தில் நினைவு கூர விரும்புகின்றேன். சட்டத்துறையுடன் வேறு பல துறைகளுக்கும் அவர் சொந்தக்காரர் என்பதைச் சிலரே அறிவர்.

சட்ட நிபுணராகப் பெயரெடுத்தாலும் இறுதிவரை சிறந்ததொரு கல்வியியலாளனாகவே அவர் விளங்கினார். சட்டத்துறையில் அவர் புகுவதற்குமுன் நல்லாசானாக இருந்து பல பள்ளிகளில் கல்விப் பணியாற்றியவர். அவரிடம் பயின்ற நல்மாணாக்கர் பலர் அவரது இறுதிக்காலம் வரை அடிக்கடி அவரில்லம் வந்து நன்றியுணர்வுடன் உரையாடி மகிழ்வர். ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் போன்ற பாடங்களைப் போதிப்பதிலும் வல்லவராயிருந்தார். சட்டத்துறைக்கு வந்த பின்னரும் ஓய்வு நேரங்களில் கல்வி புகட்டும் பணியைக் கைவிட்டாரில்லை. அவரது கல்விச் சிறப்பின் காரணமாக யாழ்.பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பின்ராகவும் நியமிக்கப்பட்டுப் பெருமை பெற்றார். பிரபல சட்டத்தரணியாகவும் கல்விமானாகவும் மாத்திரமல்ல ஓர் ஆன்மீக வாதியாகவும் அதே சமயம் சமூகத்தைச் சீர்செய்யும் பகுத்தறிவு வாதியாகவும் செயற்பட்டார். ஆன்மீக வாதியாக எம்பிரான் சந்நிதிகளில் வெகுநேர்த்தியாக புராண படனம் பண்ணுவார். இருந்தும் இறைபக்தியை விட மக்கள் சேவையே மகேசன் சேவையாகக் கருதினார். சீர்திருத்தக் கருத்துக்களைப் புகட்டியவர். மூடநம்பிக்கைகளையும் சாதி வேற்றுமைகளையும் சாடியவர் அவ்வாறே வாழ்த்தும் காட்டியவர். எல்லாவற்றுக்கும் மேலாக அவர் மனித நேயம்மிக்க மனிதகுல மாணிக்கமாக மிளிர்ந்தார். வாழ்வாதாரமற்ற வறியவர்களுக்கு உதவிக்கரம் நீட்டும் இரக்க சிந்தையாளர். அவர் தம் வலதுகை வழங்குவதை இடதுகை அறியாது. பணம் பண்ணுவதை மட்டுமே குறிக்கோளாகக் கொள்ளாது இயலாதவர்களுக்காய் பணம் பெறாதும் வழக்காடிப் பணிபுரிந்த பெருமகன். எடுத்த கருமங்களை அவைகள் சமூகப்பணிகளாயினும் சரி, வழக்குகளாயினும் சரி செவ்வனே தொடுத்து முடிப்பதில் வல்லவர். நீதிமன்றம் செல்வதற்காகத் தம்மிடம் வந்த பல வழக்குகளைத் தாமே சுமுகமாகத் தீர்த்துவைத்த சமூக சேவையாளனாகவும் திகழ்ந்தார்.

**மு.தர்மலிங்கம்**

# நூல் விமர்சனம்

நூல் : ஞான காவியம்
ஆசிரியர் : எம்.இந்திராணி



ஏழாலையை வசிப்பிடமாகக் கொண்ட எம்.இந்திராணியின் ஆக்கமாகிய ஞானகாவியம் ஆகிய நூலை மேலோட்டமாக வாசித்தபோது, என்மனக் கண்முன் தோன்றிய நினைவலைகளின் முடிவும், அது உள்ளடக்கிய உணர்வும், உண்மையும் பின் வருமாறு.

அச்சுவேலியிலிருந்த ஞானியாகிய சடைவரதர் ஏழாலைக்கு வரவேண்டிய காரணம் என்ன?

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அதற்கு விடை தருகிறார்.

*''ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதி மாண்பும்*
*கேட்பான் புகில் அளப்பில் கிளக்க வேண்டாம்''*

அருளானந்தசிவம் என்ற தீட்சாநாமம் கொண்ட பொன்னையா பரிகாரியார் ஒரு பக்குவான்மா. அவர் ஆரம்பத்தில் ஒரு வேதாந்தியாக விளங்கினார் என்ற அபிப்பிராயம் நிலவியது. அன்னாரை ஓர் உண்மைச் சித்தாந்தியாக்க வேண்டுமென்ற இறைசித்தம் இருந்திருக்கிறது.

அவரை அருளானந்த சிவமாக்கி, அன்னார் மூலம் கதிரிப்பிள்ளை என்ற இயற்பெயர் கொண்ட முருகேசு - சிவக்கொழுந்து தம்பதியருக்கு கடைசிப் புத்திரனாகப் பிறந்த இவரை உண்மையான ஞானப்பிரகாசம் ஆக்குவதற்கே. இவர் பிறப்பிலேயே ஒரு சிறந்த ஞானக்குழந்தை. இவர் மூலம் ஏழாலை மேற்குமட்டுமல்ல. யாழ்ப்பாணம் முழுவதிலுமே ஞானம் மேலோங்க வேண்டும். பிரகாசிக்க வேண்டுமென்பதே இறைவன் திருவருட் சித்தம்.

சடைவரத சுவாமிகளால் அருளானந்தசிவம் சித்தார்த்த மேதை ஆனார். அவர் மூலம் கதிரிப்பிள்ளை ஆகிய இளைஞர் ஞானப்பிரகாசமானார். சிவபெருமானது திருவுளப்பாங்கு இருந்தவாறுதான் என்னே!

இங்ஙனமே சிவபெருமானின் திருவிளையாடல்கள் இப்போதும் நடந்து கொண்டிருக்கின்றன. இது போன்றவற்றை உள்ளடக்கியே சிவயோக சுவாமிகள் நான்கு வேதங்களுக்கு இணையாகிய நான்கு வாக்கியங்களைக் கூறியருளியது.

எப்பவோ முடிந்த காரியம், யாமறியோம், முழுவதும் உண்மை, ஒரு பொல்லாப்புமில்லை.

'ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும் என் அம்மை' என்று கலைமகளைத் துதிக்கும் பாடல் நாமனைவரும் அறிந்ததே. அவ்வறுபத்து நான்கு கலைகளுள்ளும் காவியம் என்பது ஒன்று. காவியத்தின் குணம் பலவாகும்.

செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி ஆகிய இன்னோரன்னவாம். பண்டைய வரலாறுகளைப் புராணங்கள் கூறுகின்ற தன்மையை ஒப்ப காவியங்களும் சரித்திர நூல்களாக அமையும். ஞானகாவியமும் அத்தகைய தொன்றே. நூலுக்கு ஏற்ற பாஷையும் வசன அமைப்புகளும் செறிவாக விளங்குகின்றன. இந்நூலின் ஆசிரியரைப் பாராட்டாமலிருக்க முடியாது. ஞானம் உபாத்தியாரை நன்கு படம் பிடித்துக் காட்டியுள்ளது.

***அ.விஸ்வநாதன் B.A.***



உடுவில் மகளிர் கல்லூரியில் கீழைத்தேச சங்கீதப் பிரிவின் பொறுப்பாசிரியரான செல்வி கிளேறா அருளானந்தத்தின் சேவைகளைப் பாராட்டி நடத்தப் பட்ட விழாவில் கல்லூரி அதிபர் திருமதி ஷெரி மில்ஸ் கிளேறா அருளானந்தத்திற்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். *(படம்: கொக்குவில் செய்தியாளர்)*

# மக்கள் முகம்



இணுவில் தியேட்டர் லேனைச் சேர்ந்த சாமுவேல் தங்கராஜா [illegible] மல்லாகம் மாவட்ட நீதவான் திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் சமாதான நீதிவானாகக் கடந்த 12ஆம் திகதி சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இணுவில் கலாஜோதி சனசமூக நிலையத்தினதும் வலிகாமம், உடுவில் பிரதேச கிராமிய இணையத்தினதும் நிர்வாக உறுப்பினராகப் பணியாற்றி வருகிறார்.

சமூக சேவையாளரான இவர் இணுவிலைச் சேர்ந்த திருமதி சாமுவேல் சின்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வராவார். (3-204)

* * *



அரச மரக்கூட்டுத் தாபன யாழ்.அலுவலகத்தில் களஞ்சியப் பொறுப்பாளராகக் கடமையாற்றிய சிவசம்பு நடராசா அண்மையில் ஓய்வு பெற்றுள்ளார்.

இவர்புளியங்குளம், வவுனியா, மாங்குளம், மட்டக்களப்பு, காரைதீவு, சங்கானை, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் 36 வருடங்களாக கடமையாற்றியுள்ளார்.

இணுவில், மருதனார்மடத்தைச் சேர்ந்த இவர் சிறந்த சமூக சேவையாளராவார். (3-88-204)

* * *



தொட்டிலடி, சங்கானையைச் சேர்ந்த வைரமுத்து சிவபாலன் அண்மையில் யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி கொ.தியாகேந்திரன் முன்னிலையில் சமாதான நீதவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழைய மாணவரான இவர், யாழ்.மாவட்ட நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தராவார்.

மேடை, வானொலி திரைப்படக் கலைஞரான இவர் இலங்கையில் உருவாக்கிய வாடைக்காற்று, தெய்வம் தந்த வீடு, நெஞ்சுக்கு தெரியும் போன்ற திரைப்படங்களில் நடித்துப் பாராட்டுப் பெற்றவர்.

வலி.மேற்கு பிரதேச செயலக கலாசார குழுவில் முக்கிய பதவி வகிக்கும் இவர் தொட்டிலடி சனசமூக நிலையத்தின் போசகராகவும் விளங்குகிறார். (201)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

குவாட்டா மொடல் 550 உடைய லான் மாஸ்ரர் விற்பனைக்குண்டு. தொடர்பு: றஜீவன் T.P.: 0773223190 (நகரை அண்டிய பகுதியில்) (44480)

H.P. மொடல் கொம்பியூட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 0776685113 (44495)

சிறிது காலம் பாவித்த புதிய Singer தையல் Machine with all facilities மற்றும் சிறிய Amplifire இரண்டு Speaker Box களும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0713056757 (44456)

## காகிதாதி/CD விற்பனைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் சந்தியில் இயங்கிய சதீஸ் புத்தகசாலையின் காகிதாதிகள், CD க்கள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: முருகன் இல்லம், கோண்டாவில் வடக்கு, கோண்டாவில். T.P.: 0776915125. (44375)

## வீடு விற்பனைக்கு

வத்தளை, ஹெந்தலை பகுதியில் நிமல மரிய மாவத்தையில் 6 அறைகளைக் கொண்ட மாபிள் பதிக்கப்பட்ட அழகான மாடிவீடு 11½ பேர்ச் நிலத்துடனும் வாகன தரிப்பிடம், தொலைபேசி அனெக்ஸ் வசதிகளுடனும் நீர், மின்சாரம் என்பவற்றுடனும் கூடியது. தொடர்புகளுக்கு: T.P.: 2948543, 0773296338 (சி-47030)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

3 வயது நிரம்பிய Dobermann Pincher நாய் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: S. நிருஜன், 249/2, நாயன்மார் வீதி, நல்லூர். (44279)

சுத்தமான Dobermann Pincher & Dachshund குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (44372)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை). தொடர்பு: (நல்லூர் வீடியோசென்ரர்வளவு) 19, முருகேசர்ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (44371)

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு புறொயிலர் 3½ kg முழுமையான நிறையுடன் கல்பேட்டும் எந்நேரமும் சுத்தம் செய்து உடன் பெற்றுக்கொள்ளலாம். தாசன் பாம், 158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.(44459)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 26.12.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், கரன் - உடுவில் (ஆலடி), நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (43135)

## தவறிவிட்டது

23, புனித பத்திரிசியார் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த றெஜினோல்ட் லெனாட் என்பவரது தேசிய அ. அ. (782423126V) 21.12.2005 புதன்கிழமை யாழ். நகரப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய முகவரியில் ஒப்படைத்து உதவவும். T.P. 0779687157. (44493)

இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி என்னும் முகவரியில் வசிக்கும் செல்லக்கண்டன் செந்தீஸ்வரன் என்பவரின் தே.அ.அட்டை (870843208V) 16.12.2005 அன்று யாழ்ப்பாணத்திற்கும் புறாப்பொறிக்கிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைத்துதவவும். (44485)

## பூச்சாடிப் பிரியர்களுக்கு

றபர் துகள்களால் (Crumbed Rubber) தயாரிக்கப்பட்ட சிறிய, பெரிய கலர்ப் பூச்சாடிகள் விற்பனைக்குண்டு. வீட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் இலகுவில் இடம் மாற்றி வைக்கக்கூடியது. தொடர்பு: க.ஸ்ரீபதி, நவரட்ணராஜா வீதி, நெட்டிலிப்பாய், கோண்டாவில் (DSI ரயர் களஞ்சியத்திற்கு அருகில்). T.P.: 021-4590372 (சி-46731)

**Refresh System**

*புதிய, பழைய கணனிகள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும். தொடர்பு:* 077-3253104, 077-6279671. சுதுமலை, மானிப்பாய்,

(44178)(21.16.45)

## வீடு வாடகைக்கு

இல.170, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குழி, கணக்கர் சந்திக்கு அருகில் சகல வசதிகளுடனும் கூடிய 5 அறைகள், 2 பெரிய ஹோல், வாகனத் தரிப்பிட வசதி மற்றும் நன்நீர் வசதியுடன் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. தனியார் நிறுவனங்களுக்கும் வியாபார நிறுவனங்களுக்கும் உகந்தது. தொடர்பு: 021 - 222 7530, 021 - 222 6612.(44305)

பழைய பூங்கா றோட், சொலமன் வீதியில் அமைந்துள்ள சகல வசதிகளும் கொண்ட 5 அறைகள், ஒரு பெரிய ஹோல், வாகனத் தரிப்பிடம் கொண்ட புதிய மாடி வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: 222 5539, 0777 030015, 0777 488185. (44497)

மருதடிவீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சகல வசதிகளும் கொண்ட பெரிய வீடு வாடகைக்குண்டு. றக்கா வீதி, சென். ஜோன் பொஸ்கோ பாடசாலைக்கு மிக அருகில் உள்ளது N.G.O விரும்பத்தக்கது தொடர்பு: 0776176921. (44490)

விதானையார் வீதி, 2ஆம் ஒழுங்கையில் விசாலமான எல்லா வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: 54, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம். T.P.: 222 2691 (44491)

## House to Rent

A House at palaly Road by the side of Nallur AGA's Office with 9 rooms, 2 halls, 2 kitchen and 5 bathrooms of floor area 4000 sq.ft with water supply and electricity. Available for immediate occupation. NGO's preferred. Contact No. 7491, or 7267. (44487)

**VACANCY**

| Post | Qualification | Experience | Salary |
|---|---|---|---|
| Computer Insturctor (Male) | G.C.E A/L M.S Office D.T.P Web Designing | 01 year | Negotiable |
| Computer Typiest (Female Only) | M.S Office D.T.P | 01 year | Negotiable |
| Computer Hardware Technician | Pass in A/L Diploma in Hardware | 02 Years | Negotiable |
| Computer Trainee | BIT Students HNDM Students (ATI) | — | Negotiable |

Present for interview with necessary documents before 30.12.2005 at 9.am to 11 am or 5pm to 7pm

**C.B Computer Academy**
T.P No. 021-4590291 Station Road, Kondavil.

கணினி உலகில் புதிய பரிமாணம்

பல்லூடக நெறிப்படுத்தலுடன் கூடிய

**முற்றிலும் இலவச கணினிக் கற்கைநெறிகள்**

**Photoshop, Coral Draw, Pagemaker, VB, Access, MS Office, Web and Internet, Flash, Front Page, Dream Weaver, Hardware**

மற்றும் நாடுதழுவிய ஆங்கில டிப்ளோமாவுக்கான பரீட்சை வழிகாட்டல் வகுப்புக்கள்

- இலவச கற்கைநெறிக் கையேடுகள்
- கலந்துகொள்வோருக்கு சான்றிதழ்கள்

இடம் : ரிம்மர் மண்டபம் (யாழ் மத்திய கல்லூரி அருகில்)

காலம் : இம்மாதம் 26 முதல் 31 வரை

தற்போது பரீட்சை எழுதிய க.பொ.த சாதாரணதர மாணவர்கள் மற்றும் அலுவலர்கள், உயர்கல்வி மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள், அனைவரும் கலந்துகொள்ளலாம்

**அனுமதி இலவசம்**

மேலதிக விபரம் 25.12.2005 உதயனில்

## மோட்டார் சைக்கிள், கார் வாடகைக்கு

மணித்தியாலம் மற்றும் நாளாந்த வாடகைக்கு இருபாலாருக்கும் மோட்டார் சைக்கிள், மோட்டார் கார் வாடகைக்கு வழங்கப்படும். அத்துடன் குளிரூட்டப்பட்ட திருமணக்காரும் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 360/10, பிரதான வீதி, (பஸ்ரியான் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம். T.P.No.021-222 9154, 0777 - 593722, 0776991899. (43206)

**SLAS**

எதிர்பார்க்கை வினாத்தாள் :
பொது அறிவு, கட்டுரை

வே.தபேந்திரன் B.Com

பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும்.

(44384) (21.16.45)

## நிகொட் நிறுவிய முன்பள்ளிகளுக்கு தீவகத்தில் விளையாட்டு உபகரணங்கள்

யாழ்ப்பாணம் டிசெ 24

தீவகம் வடக்கு , ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவைச்சேர்ந்த 4 முன்பள்ளிகளுக்கும், காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த ஒரு முன்பள்ளிக்கும் சிறுவர் பாதுகாப்பு இலங்கை அமைப்பு விளையாட்டு உபகரணங்களை வழங்கியுள்ளது.

நிகொட் திட்டத்தின் கீழ் தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறைஉதவி அரச அதிபர் பணிமனையின் ஊடாக புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட முன்பள்ளிகளுக்கே இவ்வாறு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அனலைதீவு வடக்கு முன்பள்ளி, அனலைதீவு தெற்கு முன்பள்ளி, கரம்பன் கிழக்கு முன்பள்ளி, புளியங்கூடல் முன்பள்ளி, நீலங்காடு முன்பள்ளி, என்பனவற்றுக்கே பெறுமதிமிக்க விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## அளவுக்கு...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

தப் பிரச்சினையை நாமாகவே தீர்த்துகொள்ளும் நிலையை உருவாக்க வேண் டும்.

எமது பிரச்சினையை நாம் சர்வதேசமயப்படுத்தக்கூடாது.

சர்வதேச நாடுகள் எமது பிரச்சினையைத் தீர்த்து வைப்பதாகக் கூறிக்கொண்டு எம்மிடம் வருகின்றன. அவை எமது நாட்டை இரண்டாகப் பிரித்து வைப்பதற்காகவே செயற்படுகின்றன.

சூடானைப் பாருங்கள். சூடானின் பிரச்சினை சர்வதேசமயப்படுத்தப்பட்டதன் காரணமாக அது வட சூடான் என்றும் கிழக்கு சூடான் என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

எதியோப்பியாவும் இதே நிலைக்குத்தான் தள்ளப்பட்டுள்ளது. சைப்பிரஸூம் இதில் இருந்து தப்பவில்லை.

இவ்வாறான உதாரணங்களை வைத்துப் பார்த்தால், இந்த நாடுகள் எமது நாட்டுப் பிரச்சினையில் அளவுக்கு அதிகமாகக் கவனம் செலுத்துவது நாட்டை இரண்டாகப் பிரிக்கத்தான் என்பது தெளிவாகும்.

அந்த ஆலோசனைகளை ஆராய்ந்து பார்த்து செயற்புடாமல் - ஆராய்வுக்கு அப்பால் சென்று செயற்பட முனைவதே தப்பு.

சர்வதேச நாடுகளின் இந்த மாதிரியான சதித்திட்டங்களில் நாம் என்றும் சிக்கிவிடக் கூடாது.

- இவ்வாறு அவர் கூறினார். (க)

## அரச கரும...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரார்த்திக்கிறேன்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பதவிக்குப் போட்டியிடும் நம்மவரான ஜயந்த தனபால பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும்.

ஜயந்த தனபால இந்தப் பதவிக்கு மிகவும் பொருத்தமானவர். அதற்கான திறமையும், அனுபவமும் அவருக்கு உண்டு.

இவர் ஐ.நா.வின் செயலாளர் நாயகமாகத் தெரிவுசெய்யப்பட்டால் எமது நாட்டுக்கு அதிக நன்மைகள் உண்டு.

அரசு இந்த விடயத்தில் அதிக அக்கறை எடுத்து அவரை ஊக்குவிக்க வேண்டும். - என்றார். (க)

## அமைச்சர்

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

துரோகி' - போன்ற சொற்பதங்கள் தாராளமாகப் பிரயோகிக்கப்பட்டன.

கஜேந்திரனுடன் இணைந்து அவரின் பின்வரிசையில் அமர்ந்திருந்த சிவநேசன் மற்றும் ஈழவேந்தன் ஆகியோரும் பலத்த சத்தத்துடன் அமைச்சர் டக்ளஸூக்கு எதிராகச் சொற்போர் தொடுத்தனர்.

ஆளுங்கட்சியில் எவரும் அமைச்சர் டக்ளஸூக்கு ஆதரவாக அவருடன் இணையவில்லை. அமைதியாக நடப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். ஜே.வி.பியினர் சபையில் இருந்தும்கூட அவர்களும் கூச்சல் போடாமல் - குழப்பம் செய்யாமல் - அமைதியாகப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

கஜேந்திரன் உரையாற்றி முடிந்ததன் பின்பும் கூட டக்ளஸூக்கு எதிரான தமது வசை பாடலைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நிறுத்தவில்லை.

இதனால், கஜேந்திரனையடுத்து உரையாற்ற வேண்டிய அமைச்சர் டியூ. குணசேகரவால் உரையாற்ற முடியாமல்போனது.

ஒரு சில நிமிடங்கள் கழித்தே சபையில் அமைதி நிலவியது. அதன்பிறகே அமைச்சர் டியூ. குணசேகர உரையாற்றினார்.

இந்தப் பிரச்சினைகளுக்கு மத்தியில் சபையில் இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் இந்தச் சண்டையில் கலந்து கொள்ளாமல் அமைதியாகவே காணப்பட்டார்.

அதன் பிறகு டக்ளஸ் தேவானந்தா ஆசனத்தைவிட்டு எழுந்து சென்று ஒவ்வொரு அமைச்சரிடமும் ஏதோ கூறினார்.

முதலில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவின் காதில் ஏதோ ஓதினார் அவர். அதன்பின் அமைச்சர் டிலான் பெரேராவிடம் போய் ஏதோ உரைத்தார்.

அதனையடுத்து எதிர்வரிசையில் அமைர்ந்திருந்த ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம் சந்திரசேகரனும் டக்ளஸின் அருகே வந்து அவரின் காதோடு காதாக எதையோ கூறினார்.

அதன்பின் சிறுது நேரம் சபையில் இருந்துவிட்டு வெளியேறிப்போய்விட்டார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. (க)

## அரசு...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

கும் தொந்தரவுகளுக்கும் சர்ச்சைகளுக்கும் உள்ளாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

வீடுவீடாகத் தேடுதல் நடத்தி எந்தவித குற்றச்செயல்களும் செய்யாத தமிழ்மக்களைக் கைதுசெய்வது, சோதனை செய்து பொலீஸ் நிலையங்களில் அடைத்து வைப்பது, தனிப்பட்ட குடும்ப விவரங்களைக்கூட எழுத்து மூலமாக பதிவுசெய்துதரவேண்டும் என்று இம்சைப்படுத்துவது போன்ற பல்வேறு இன்னல்களுக்கு தமிழ் மக்கள் முகம் கொடுத்துவருகின்றனர்.- என்றார்.

# தேசவிடுதலையை மூச்சாகக் கொண்டவர் நாட்டுப் பற்றாளர் நவரட்ணம்

## மாவட்ட அரசியல்துறை அறிக்கையில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.24

தேச விடுதலைப் போராட்டத்தை உயிர் மூச்சாகக் கொண்டவர் சி.கி.நவரட்ணம். இதனால், அவரது செயற்பாடுகளைக் கௌரவிக்கும் வகையில் விடுதலைப் புலிகள் நாட்டுப்பற்றாளர் கௌரவம் வழங்கியுள்ளனர்.

- இவ்வாறு யாழ்.மாவட்ட அரசியல் துறையினர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தஅறிக்கையில்:-

22.12.2005 அன்று அதிகாலை 5.15 மணியளவில் யாழ்.தினக்குரல் பத்திரிகை அலுவலகத்திற்கு முன்பாக தமிழ்த் தேசியத்திற்காக உழைத்த சின்னத்தம்பி கிருஷ்ணன் நவரட்ணம் என்பவரை ஸ்ரீலங்கா இராணுவப் புனலாய்வுத்துறையினரும் ஒட்டுக் குழுவான ஈ.பி.டி.பி தேசவிரோதக் கும்பலும் இணைந்து கோழைத்தனமாகச் சுட்டுக் கொன்றுள்ளனர்.

இவர் 1985 ஆம் ஆண்டுமுதல் தமிழ்த் தேசிய போராட்டத்திற்கு தனது பங்களிப்பை வழங்கி, சளைக்காது அரசியல் பணிகளில் துணிவுடன் செயலாற்றியவர். இவரது விடாமுயற்சியான உழைப்பு மக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வை பரிணமிக்கச் செய்தது.

இவர் 1995 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்ததைத் தொடர்ந்து வன்னிப் பகுதியில் அக்கராயன் பிரதேச போர் எழுச்சிக்குழுவின் செயற்பாடுகளில் சிறப்பாகப் பங்காற்றினார். அத்துடன், ஸ்ரீலங்காப் படைகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் எல்லைப்படை வீரராக களம் பல சென்று வந்தவர்.

போர்நிறுத்த உடன்படிக்கைக்குப் பின்னர் யாழ்ப்பாணம் திரும்பிய இவர், தமது பிரதேச மக்களின் தேசிய எழுச்சியை மழுங்கடிக்கச் செய்வதற்காக தேச விரோதிகளின் அடிவருடிகள் சமூகச் சீர்கேடுகளைப் புகுத்த முனைந்தபோது தேசிய எழுச்சிப் பேரவையூடாக அயராது உழைத்து மக்களுக்கு விழிப்பூட்டி வெற்றி கண்டார்.

ஸ்ரீலங்காப் படையினராலும் ஒட்டுக் குழுக்களாலும் தமக்கு ஆபத்து என்று அறிந்திருந்தும் இவரது தேசிய விடுதலைத் தாகம் தணியவில்லை. அது கொழுந்து விட்டு எரிந்தது. தமிழ் மக்களுடைய தேசிய விடுதலைப் போராட்டமானது எவ்விதமான ஏற்றத் தாழ்வுகளையும் களைவதற்கான சமூக மாற்றத்தை உண்டாக்கலாம் என்ற தெரிவு இவருக்கு இருந்தது.

எனவேதான், சமூக ஒடுக்குமுறைகளையும் விடுவிப்பதற்கான ஆர்வலனாக இவர் இயங்கினார். இவர் அரச ஊழியராக இருந்தபோதும் அவரது பதவி தேச விடுதலை உணர்வுக்கோ செயற்பாடுகளுக்கோ தடையாக அமைய அவர் இடம்கொடுக்கவில்லை.

தேசவிடுதலையை உயிர் மூச்சாகக் கொண்டு செயற்பட்ட மதிப்பாளர் அமரர் சி.கி.நவரட்ணத்துக்கு அவர்களுடைய செயற்பாடுகளைக் கௌரவிக்கும் முகமாக விடுதலைப் புலிகள் நாட்டுப்பற்றாளர் கௌரவம் வழங்கியுள்ளனர். நாட்டுப்பற்றாளர் சி.கி.நவரட்ணத்துக்கு வீரவணக்கம் செலுத்தி சிரம் தாழ்த்துகின்றோம்.

ஆக்கிரமிப்பாளர்கள் என்றும் வெற்றி பெற்றதும் இல்லை; துரோகத்தனங்கள் நிமிர்ந்து நிலைத்ததும் இல்லை. மக்களின் சுதந்திர வேட்கை இறுதியாக வெற்றியைப் பெறும் - என்றுள்ளது. (எ-6)

# இரவுநேர கடைசி பஸ் இனிமேல் 7.30 மணிக்குப்புறப்படும்

யாழ்ப்பாணம்,டிசெ.24

குடாநாட்டின் தற்போதைய நிலைவரத்தைக் கருத்தில் கொண்டு யாழ். மத்திய பஸ் நிலையத்திலிருந்து தினமும் இரவுநேர கடைசி பஸ் புறப்படும் நேரத்தில் தற்காலிகமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் செயலாற்று முகாமையாளர் (வடக்கு) எஸ். கமலநாதன் அறிவித்துள்ளார்.

இதன்படி, தினமும் இரவு 8.15 மணிக்குப் புறப்படும் சகல பகுதிகளுக்குமான கடைசி பஸ், இன்று சனிக்கிழமை முதல் 7.30 மணிக்குப் புறப்படும் என்றும் -

பயணிகள், நேரமாற்றத்தைக் கருத்தில் கொண்டு பயணத்தைத் தொடரலாம் என்றும்-

குடாநாட்டின் அசாதாரண நிலைமை வழமைக்குத் திரும்பியதும் மீண்டும் முன்னைய நேர அட்டவணையின் படி இரவுநேர கடைசி பஸ் சேவை நடைபெறும் என்றும் - செயலாற்று முகாமையாளர் மேலும் கூறினார். (எ)

# அமைதிப் பேரணி மீதான தாக்குதல்; பொலீஸாரின் விசாரணை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.24

யாழ். பல்கலைக்கழக சமூகத்தினரால் கடந்த திங்கட்கிழமை நடத்தப்பட்ட அமைதிப் பேரணி மீது படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதல் குறித்து யாழ். பொலீஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு மகஜர் கையளிப்பதற்காக ஊர்வலமாகச் சென்ற சமயமே படையினர் கண்மூடித்தனமாகத் தாக்கினர். துப்பாக்கிகளால் சுட்டும் கொட்டன்களால் தாக்கியும் படையினர் மேற்கொண்ட இந்தத் தாக்குதலில், கலைப்பீடாதிபதி சிவச்சந்திரன் உட்படப் பலர் காயமடைந்தனர்.

அமைதிப் பேரணி மீது படையினர் அராஜகத்தைக் கட்டவிழ்த்து விட்டது குறித்துப் பல்வேறு தரப்பினரும் கண்டனங்களைத் தெரிவித்திருந்தனர். இந்த விடயம் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கடந்த புதன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துத் தமது கண்டனத்தைத் தெரிவித்தனர்.

படையினர் மேற்கொண்ட இந்தத் தாக்குதல் குறித்தே யாழ். பொலீஸார் தமது விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். அன்றைய தினம் பரமேஸ்வராச் சந்தியில் கடமையில் இருந்த படையினர் அனைவரும் நேற்று முன்தினம் விசாரணைக்காக யாழ். பொலீஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் தனித்தனியே வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன. இந்த விசாரணை நடவடிக்கைகளையொட்டி பொலீஸ் நிலையப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. (எ-க-7)

# தீவகத்தில் கடற்படையின் வீதி ரோந்து அதிகரிப்பு

## அச்சத்துடன் பொதுமக்கள்

ஊர்காவற்றுறை,டிசெ.24

ஊர்காவற்றுறை மற்றும் வேலணை பிரதேசங்களிலுள்ள பிரதான வீதிகளில் வீதிக் காவல் கடமைக்கு கடற்படையினர் நிறுத்தப்பட்டுள்ளதுடன், வீதிரோந்து நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை - அண்மையில் ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு சமீபமாக பிரதான வீதியில் அமைந்துள்ள மதகிற்கு அருகே கடற்படையினரால் குண்டு ஒன்று மீட்கப்பட்டது.

பொதுமக்கள் மீதான கடற்படையினர் மேற்கொள்ளும் சோதனை கெடுபிடிகளை நியாயப்படுத்துவதற்கும் -

பொதுமக்கள் மீதான கெடுபிடிகளை தீவிரப்படுத்தும் நோக்குடனேயே கடற்படையினர் வீதியோரத்தில் குண்டை வைத்துவிட்டு அவற்றைத் தாம் கண்டுபிடித்து மீட்டதாகக் கூறிவருகின்றனர் எனப் பொதுமக்கள் மத்தியில் பேசப்படுகிறது.

படையினரின் இந்த நடவடிக்கையானது இங்குள்ள தமிழ்த்தேசியப் பற்றாளர்களையும் ஆதரவாளர்களையும் இலக்கு வைத்த தாக்குதலுக்கான ஆரம்ப ஏற்பாடுகள் என்று இங்குள்ள பொது அமைப்புகள் சுட்டிக் காட்டியுள்ளன. (எ-16)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# வல்வை ஆலடி பூங்காவில் இன்று எம்.ஜி.ஆர் சிலை திறப்பு

கரவெட்டி ,டிசெ 24

வல்வை ஆலடி மாவீரர் பூங்காவில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தமிழக முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரனின் உருவச்சிலை இன்று திறந்துவைக்கப்படவுள்ளது.

வல்வெட்டித்துறை, ஆதிகோவிலடி மக்களால் அமைக்கப்பட்ட இந்தச்சிலையின் திறப்புவிழா இன்று சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டு சிலையைத் திரைநீக்கம் செய்து வைப்பார். நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பொதுமுகாமையாளர் க.சூரியகுமார், வல்வை மாவட்ட வைத்தியசாலை அதிகாரி க.மயிலேறும்பெருமாள்,வல்வை முத்துமாரி அம்மன் ஆலய பிரதமகுரு சோ.தண்டாயுதபாணிகதேசிகர், வல்வை கிராம சேவகர் சி. சிவபாலசிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர். (எ-70-202)



(படம்:சுந்தரலிங்கம்)



ஓய்வுபெற்ற வங்கியாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. யாழ்.மக்கள் வங்கியின் பிரதேச முகாமையாளர் ரி.ரகு, யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், வங்கி ஓய்வூதியர் சங்கத் தலைவர் ஆர்.சுந்தரலிங்கம், யாழ்.வர்த்தக வங்கி முகாமையாளர் எஸ்.இரவீந்திரா, யாழ். செலான் வங்கி முகாமையாளர் கே.கனகசிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்துவதையும் - மூத்த வங்கியாளர் ஒருவர் கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: பகீரதன்)

# சிறப்புற நடந்த மூத்த வங்கியாளர் கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.24

யாழ்.மாவட்ட வங்கியாளர் சங்கம் ஏற்பாடுசெய்த ஓய்வுபெற்ற வங்கியாளர் கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது.

யாழ்.மாவட்ட வங்கியாளர் சங்கத்தின் தலைவர் து.ரகு தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸும், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற வங்கியாளர் சங்கத் தலைவர் எஸ்.சுந்தரலிங்கம், யாழ். வர்த்தக வங்கி முகாமையாளர் எஸ்.ரவீந்திரா, செலான் வங்கி முகாமையாளர் எஸ்.கனகசிங்கம், யாழ்.ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கிளையின் முகாமையாளர் ஆர்.சிவராமலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தலைமை உரையைத் தொடர்ந்து ஓய்வுபெற்ற முகாமையாளர்கள், விருந்தினர்களுக்குத் தம்மை அறிமுகம் செய்து வைத்தனர். அதனையடுத்து சிறப்பு விருந்தினர்கள் உரைகள் இடம்பெற்றன.

தொடர்ந்து ஓய்வுபெற்ற வங்கியாளர்களில் இருந்து மூத்த வங்கியாளர்கள் இருவர் தெரிவுசெய்யப்பட்டு மாலை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டு, துணைவேந்தரால் அன்பளிப்புப் பொருள்கள் வழங்கப்பட்டன.

பிரதம விருந்தினர் உரையை அடுத்து பிரம்ம குமாரிகள் சங்கத் தலைவர் பிரம்ம குமார் ஜெகதீஸன் 'மன அழுத்தம்' தொடர்பாக உரை நிகழ்த்தினார். பட எறி கருவி மூலம் திரையில் தெளிவான விளக்கம் அளிக்கப்பட்டது.

பின்னர் ஓய்வுபெற்ற வங்கியாளர்கள் அனைவரும் அன்பளிப்புப் பொருள்கள் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர். மதிய போசனத்தை அடுத்து இசை நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வின் நிறைவாக நன்றி உரையினை யாழ். மாவட்ட வங்கியாளர் சங்கத்தின் செயலாளர் ந.சிவரட்ணம் நிகழ்த்தினார். (3-12)



## யா/ கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்

**ஆண்கள் விடுதிக்கான மாணவர் அனுமதியும் தரம்6-ஆங்கில, தமிழ்மொழி மூலமான மாணவர் அனுமதியும் - 2006**

*மேற்படி பிரிவுகளுக்குரிய அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் பாடசாலைக் காரியாலயத்தில் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று 31.12.2005 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்*

வி.மாணிக்கம்
அதிபர்.

(சி-47040)
(16-17-42)

## அறிவித்தல்

**பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்**
(குடியியல் நடவடிமுறைச் சட்டக் கோவையின் 16ஆம் பிரிவின் கீழ்)

நடராஜா கணேசலிங்கம்
கௌரவ செயலாளர்,
புற்றளை சித்திவிநாயகர் ஆலயப் பரிபாலன சபை,
புற்றளை சித்திவிநாயகர் ஆலயம், புற்றளை,
புலோலி தெற்கு, புலோலி.

மற்றும் கணையன் தோட்டம்
புலோலி கிழக்கு, பருத்தித்துறை,புலோலி.
புலோலி தெற்கு,
புற்றளை சித்திவிநாயகர்,ஆலய பரிபாலன சபை சார்பாக,

வழ.இல:-நானாவிதம்/1323/05. *வழக்காளி*

எதிர்
சிவ்ஸ்ரீ சோமஸ்கந்தக் குருக்கள்,
தண்டபாணி தேசிகர்
பிரதான குருக்கள் வல்வை
ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில், வல்வெட்டித்துறை.
*எதிராளி*

மேற்படி வழக்காளியால் எதிராளிக்கு எதிராக 2005ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 3ஆம் திகதி இம்மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு கௌரவ மாவட்டநீதிபதி அவர்கள் முன்னிலையில் ஆதரிக்கப்பட்டு எதிராளிக்கு எதிராக ஒரு கட்டாணையும் குடியியல் நடவடிமுறைச் சட்டக்கோவையின் 16ஆம் பிரிவின் கீழான ஓர் அறிவித்தலும் வழங்கும்படி கட்டளையிடப்பட்டுள்ளது. இவ்வழக்கில் யாராவது அக்கறை உள்ளவர்கள் இருப்பின் 2006ஆம் ஆண்டு தைமாதம் 03 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ நேரடியாகவோ அல்லது சட்டத்தரணி மூலமாகவோ தோன்றி ஆட்சேபனையையும் மறுமொழியையும் அணைக்கும்படி இத்தால் வேண்டப்படுகின்றீர்

2005ஆம் ஆண்டு மார்கழி மாதம் 21ஆம் திகதி
''மன்றின் கட்டளைப்படி''

பதிவாளர்
S.SANTHIRALINGAM,
REGISTRAR & J.P.
DEPUTY FISCAL,
DISTRICT COURT,
POINTPEDRO.

(சி/47037)(42-16-17)

வரைவு,
**லிங்கா துரைராஜா**
**வழக்காளியின் சட்டத்தரணி.**

## மரண அறிவித்தல்

**திருமதி ஜெயவீரசிங்கம் இலட்சுமிப்பிள்ளை**

குரும்பைகட்டி, புலோலியைச் சேர்ந்தவரும் தற்போது கல்லூரி வீதி, ஆத்தியடியில் வசித்து வந்த திருமதி ஜெயவீரசிங்கம் இலட்சுமிப்பிள்ளை 22.12.2005 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஜெயவீரசிங்கத்தின் அன்பு மனைவியும் சூரியப்பிரகாசம் (நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை-திருகோணமலை), சந்திரப்பிரகாசம் (எஸ்.பி.ஆசிரியர் யா/ஹாட்லிக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயும், தவச்செல்வராணி, தேவந்தி ஆகியோரின் மாமியும், நிலக்ஸ்மன், நிலக்ஷாந், திவ்யாசினி, யதுகுலன், கவிசேஷன், ராகவேந்தன், ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.12.2005) வெள்ளிக்கிழமை கல்லூரி வீதி, ஆத்தியடியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குரும்பைக்கட்டி ஜெ. சந்திரப்பிரகாசம்
புலோலி. (சி-47041)(16-17-42) (மகன் -S.P).

## G.A.Q. I[st] in Com.

**யாழ். - பேராதனை**

மேற்படி பாடநெறிக்கான பதிவுகள் பேராதனைப் பல்கலைக்கழகத்தால் கோரப்பட்டுள்ளன. பதிவுகள் யாவும் எம்மால் செய்துதரப்படும்.

**விரிவுரைகள் 01.01.2006 இல் ஆரம்பமாகின்றன.**


பட்டப்படிப்புகள் கல்லூரி,
57/18, ஸ்ரான்லி வீதி
(இலங்கை வங்கி முன்பாக), யாழ்ப்பாணம்.

(44515)(16-17-42)

## Vacancy for MLT

Aidlines Clinical Pathology Laboratory in seeking for experienced MLT.
Contact in T.P. No. 222 3800.
between 9 a.m.to 3 p.m
Clossing date on 31[st] Dec.2005
(44510)(21.16.11)

## ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அழைப்பும்

| அன்னை மடியில் | | ஆண்டவன் அடியில் |
|---|---|---|
| 17 - 04 - 1947 |  | 03 - 12 - 2005 |

### அமரர் சிவசுப்பிரமணியம் சிவரட்ணம்
(மதிப்பீட்டாளர்)

*பாசத்தின் உறைவிடமாய், பண்பதனின் இலக்கணமாய்,*
*செயற்றிறனில் வல்லவனாய், நினைத்ததை தான் முடிப்பவனாய்,*
*பலர்வாழ்வின் கலங்கரையாய்,*
*உம் நண்பர் உதவிக்கரமாய்,*
*உங்கள் மக்கள் உயர்ச்சிக்காய்*
*மெழுகுவர்த்தியான எம் இனிய அப்பாவே!*
*நினைக்காத பேரிடியாய் வீழ்ந்ததுவே உம் பிரிவு*
*திக்கற்ற நடுக்காட்டில் நிற்கின்றோம் உம் பாசதீபங்கள்*
*சாய்ந்ததுவோ கோபுரம் தான்.*

எமது அன்புத் தெய்வத்தின் மரணச் சடங்கில் கலந்துகொண்ட அனைத்து உறவினர்கள், நண்பர்கள் மற்றும் உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து தொலைத் தொடர்பு, தந்தி மூலம் தங்களின் அனுதாபத்தைத் தெரிவித்த அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் நாளை (25.12.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயில்மண்டபத்தில் (அஞ்சல் அலுவலகம் அருகில்) நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துசிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*அன்னாரின் பிரிவால் துயருறும்:*
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.**

*டாக்டர் சுப்பிரமணியம் வீதி,*
*சுன்னாகம்.*
(44506)(42-16-17)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
*திருமதி வக்சலா ஸ்ரீஸ்கந்தராஜா* அவர்களின் அன்புத் தந்தை


### இராசலிங்கம் சொர்ணலிங்கம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிராத்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிச்சங்கம்**
**யா/மல்லாகம் மகாவித்தியாலயம்.**

(சி-47044)(16-17-42)

## கண்ணீர்க் காணிக்கை



*எமது அங்கத்துவ சங்கமான யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் 1995ஆம் ஆண்டு சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்து வன்னியில் இயங்கிய பொழுது அதன் இயக்குநர் சபை உறுப்பினரும், அக்கராயன் போர் எழுச்சிக்குழு உறுப்பினரும், தற்பொழுது யாழ்ப்பாண ப.நோ.கூ. சங்கத்தின் கிளைக்குழு உறுப்பினருமான*

**நாட்டுப்பற்றாளர்**

### சின்னத்தம்பி கிருஷ்ணர் நவரெட்ணம்

*அவர்களுக்கு கூட்டுறவாளர் ஆகிய நாம் எமது இதய அஞ்சலியைத் தெரிவிப்பதோடு, அவர்களது இழப்பினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

**யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும் அதன் அங்கத்துவக் கூட்டுறவுச் சங்கங்களும்.**

(சி-47046) (25


Jayoda ஜயோதா ජයෝදා

**உத்தியோகபூர்வ முடிவுகள்**

டிக்கட் தொடர் இல. 7349281 முதல் 7359094 வரை சீட்டிழுப்பு இல. 196 திகதி 22-12-2005

வெற்றி எண்கள் **4 5 9 6 9 3** சுப்பர் எண் **10**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,37,97,075/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,37,97,075/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/- | 4,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 88 | 5,000/- | 4,40,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 862 | 500/- | 4,30,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 8,612 | 50/- | 4,30,600/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 85,370 | 10/- | 8,53,700/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 87 | 1,000/- | 87,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 859 | 100/- | 85,900/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 8,538 | 20/- | 1,70,760/- |
| | | மொத்தம் | 39,93,960/- |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/- | 6,02,600/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 45,96,560/- |

இந்த திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,40,36,600/-**

தொடர் இல. 6436381 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 டிசம்பர் 26 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 11, சென் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மாத்தளை | 7349872-9-55 |
| காலி | 7351520-2-94 |
| பதுளை | 7350987-9-41 |
| அம்பாறை | 7354083-1-13 |
| கண்டி | 7352629-7-98 |
| அனுராதபுரம் | 7355306-9-20 |
| கம்பஹா | 7358415-4-37 |
| ஹம்பாந்தோட்டை | 7353955-6-31 |

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



### திருமதி சுவாமிநாதன் வள்ளியம்மைப்பிள்ளை

கடந்த 22.11.2005 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள்இன்று (24.12.2005) சனிக்கிழமை முற்பகல் எமதில்லத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*முதலியார் வளவு*
*கோப்பாய் மத்தி.*
(44512)
(54-11-34)
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### இராமலிங்கம் பொன்னுத்துரை (கதிரவேலு)

**(முன்னாள் உரிமையாளர் - பாலா பான்சி ஹவுஸ் - ஊர்காவற்றுறை)**



கரம்பொன் கிழக்கைப் பிறப்பிடமாகவும் 153, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் பொன்னுத்துரை 22.12.2005 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான நாகராசா, முத்துலிங்கம், இராசமணி மற்றும் பூமணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை-அன்பப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்றவர்களான பராசக்தி, சாரதா, அன்னலட்சுமீ, அமிர்தலிங்கம், தாமோதரம்பிள்ளை, பரமானந்தம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் புஸ்பராணி, சர்வானந்தன் (உரிமையாளர் - ராதாஸ் ரெக்ஸ் ரைல்ஸ் - வெள்ளவத்தை), கிருபானந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்திரசேகரம், ராதா, நிர்மலா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சுரேஸ்குமார் (மக்கள் வங்கி), வனஜா (மக்கள் வங்கி), துளசிகரன், மயூரி, பார்கவி, லக்ஸ்மன் (கிங்ஸ்ரன் பல்கலைக்கழகம் - லண்டன்), விக்ரம் (இந்துஸ்தான் பொறியியல் கல்லூரி -இந்தியா), சாமந்தி, வைஷ்ணவசங்கரி, மஞ்சுளா (ஜேர்மனி), அஜீவ் (ஜேர்மனி), ஆனந் (ஜேர்மனி), சாதனா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேரனும் நீகனின் (ஜேர்மனி) பாசமிகு பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2005) சனிக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*153, சிவன்பண்ணை வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(44519)
(54-11-34)
தகவல்:
பொ.சர்வானந்தன்
(மகன்).

### யோசேப்பு சின்னத்துரை

**(ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தரும் தென்னிந்தியச் திருச்சபை ஊழியரும்)**



நவாலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோசேப்பு சின்னத்துரை நேற்று(23.12.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னா சின்னத்துரையின் அன்புக் கணவரும் அருட்திரு சி.ஞானராஜா, திருமதி ஞானமலர் கிருபைநாயகம், திருமதி ஞானமணி கிருபைநாதன் (ஆசிரியை,யா/நவீல்ட் பாடசாலை, கைதடி), ஞானரட்ணம் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் நிர்மலா (கொழும்பு, வலுவிழந்தோர் பாடசாலை),காலஞ்சென்ற கிருபைநாயகம் (லிகிதர், மானிப்பாய் இந்துக் கல்லூரி), கிருபைநாதன் (நிர்வாக உத்தியோகத்தர்,பிரதேச செயலகம் ஊர்காவற்றுறை), கௌரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் சஞ்சோ, அஞ்சலா (ஆசிரியை,புத்தளம்),ஜெஸ்ரினா(பொறியியலாளர், கொழும்பு), ஞானோதயன்,பிரகாஷ்(கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று(24.12.2005) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல் நவாலி தென்னிந்தியச் திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'தமிழ்அகம்'*
*கலையரசு வீதி,*
*நவாலி தெற்கு, மானிப்பாய்.*
(44518)
(54-11-34)
தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


## UNIVAC

**Software Engineering Park**

2006 ஆம் ஆண்டில் 1000 கணனி மென்பொருள் பொறியியலாளரில் நீங்களும் ஒருவராக வர

இன்றே விண்ணப்பியுங்கள்

**யுனிவெக் போட்டிப்பரீட்சை**

விண்ணப்ப முடிவு திகதி: 31-12-2005
213, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். T.P : 077 6176476
(சி-47042)

## S. L. A. S.

28.12.2005 இல் நடைபெறவுள்ள பரீட்சைக்கான

**விசேட வகுப்புகள்**

நிபுணத்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு
பொது அறிவு: திரு.வே. தபேந்திரன் B.Com.
நுண்ணறிவு: திரு.சு.கிருபாகரன் B.Sc.
கட்டுரை, சுருக்கம்: திரு.பா. மகாலிங்கம் B.A.
கையேடுகளும் மாதிரி வினாத்தாள்களும் வழங்கப்படும்
இன்று ஆரம்பமாகின்றது.

**பட்டப்படிப்புகள் கல்லூரி**

57/18, ஸ்ரான்லி வீதி,
(இலங்கை வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்.
(44516)


## அடையாள அட்டை தவறிவிட்டது

யாழ். கஸ்தூரியார் வீதிக்கும் சயன்ஸ் ஹோல் நாவலர் வீதிக்கும் இடையில் வைத்தியநாதன் மயூரன் 17/17, திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை என்ற விவரம் கொண்ட 862761740V என்ற இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் தயது செய்து உதயன் பணிமனையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

**வை.மயூரன், 595/14, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். T.P.: 222 2213** (சி-47032)

## மரண அறிவித்தல்

### திருமதி சதாசிவம் கனகம்மா

குருந்தடித்தோட்டம், கரணவாய் மத்தியைச் சேர்ந்த சதாசிவம் கனகம்மா 20.12.2005 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து-சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வல்லிபுரம் சதாசிவத் தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சந்திரலேகா (சுவிஸ்), இராசகுலசிங்கம் (ஜேர்மனி), ராதாதேவி, மல்லிகாதேவி அவர்களினதும் சரஸ்வதியம்மா, இலங்காதேவி, கௌரிதேவி (சுவிஸ்), ஜெயபாலசிங்கம் (சுவிஸ்), மதிவதனபாலசிங்கம் (சுவிஸ்), ஆகியோரினதும் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2005) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கரணவாய் மத்தி எள்ளங்குளம் மயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**குருந்தடித்தோட்டம்,**
**கரணவாய் மத்தி.**
(சி-47048)
(54-
தகவல்:
குடும்பத்தினர்.

## சமூகசேவை மன்றத்தில் இன்று ஒளி விழா

யாழ்ப்பாணம்,டிசெ.24

சமூக அபிவிருத்தி மன்றம் நடத்தும் ஒளி விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள மன்ற பணிமனையில் தலைவி திருமதி நவநீதம் ஜெகதீசன் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக திருமதி ருக்மணி ஆனந்தவேலும் சிறப்பு விருந்தினராக 'செப்பாக்' நிறுவனப் பிரதிநிதி அருட்சகோதரி ஜெயசீலியும் கலந்து கொள்வர்.

சமூக அபிவிருத்தி மன்ற அங்கத்தவர்களின் கலைநிகழ்ச்சிகள், தீபநடனம், பாட்டு, வில்லுப்பாட்டு என்பனவும் இடம் பெறவுள்ளது.

(3-6)

## மரண அறிவித்தல்கள்

### முருகேசு நாகலிங்கம்

**(சுடுவார் நாகலிங்கம்)**



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு நாகலிங்கம் 21.12.2005 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகலிங்கம் கனகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான 'மாத்தயா' பொன்னையா சின்னத்தம்பி (விதானையார்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் பொன்னையா பஞ்சலிங்கம் அவர்களின் சிறிய தகப்பனாரும் காலஞ்சென்ற இராசரத்தினம், பாக்கியலட்சுமி ஆகியோரின் பாசமிகு வளர்ப்புத் தந்தையும் காலஞ்சென்ற பத்மநாதனின் மாமனாரும் விஜஜேந்திரன் (அமெரிக்கா), சத்தியபாஸ்கரன் விஜயரஞ்சனி(கனடா), காலஞ்சென்ற விஜயரஞ்சன் மற்றும் மனோகரன் மாலினி (லண்டன்), சிறிதரன் (லண்டன்), இதயரூபன் ராகினி (நோர்வே), சுதர்சன், ரஜனி (நோர்வே), ராஜ்கரன் பத்மினி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2005) சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மாயனத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*369, கண்டி வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.*
(44513)
(54-11-34)
தகவல்:
ஆ. தேவராஜா

### கணபதிப்பிள்ளை செல்வநாயகம்



அரசகேசரிப் பிள்ளையார் கோயிலடி, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் சுவிற்ஸர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை செல்வநாயகம் நேற்று (23.12.2005) வெள்ளிக்கிழமை சுவிஸில் அகாலமரணமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை-வேதநாயகம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சொக்கநாதன் -பவளம் தம்பதியரின் அன்பு மருமகனும் யோகாம்பாளின்(சுவிஸ்) அன்புக்கணவரும் பிரபாலினி, நிஷ்கலாஜினி, சர்மிளா(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு, காலஞ்சென்ற அருணாசலம் ,ஏரம்பமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும் யுவதி செல்வநாயகம்,யோகநாதன் யோகேஸ்வரன் (இலங்கை வங்கி, 2ஆம் கிளை), கணேஸ்வரன் (கனடா), யோகேஸ்வரி மனோகரன், கணேஸ்வரி தம்பிராசா, சிவனேஸ்வரி ஞானேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அரசகேசரிப் பிள்ளையார் கோயிலடி,*
*நீர்வேலி வடக்கு, நீர்வேலி.*
(44513)
(54-11-34)
க.ஏரம்பமூர்த்தி
(சகோதரன்).

### R.R. கணேசன்

**(ஓய்வு பெற்ற பொறியியலாளர், நீர்ப்பாசனத் திணைக்களம்)**



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட இராமுப்பிள்ளை கணேசன் லண்டனில் காலமானார்.

அன்னார் வடிவாம்பிகையின் அன்புக் கணவரும் புவனேந்திரன், யசோதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற R.R பூபாலசிங்கம், விஜயரெத்தினம், பூமணி மற்றும் அப்பாத்துரை ஆகியோரின் அன்புச்சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பூமணி அகம்,*
*7ஆம் வட்டாரம், நயினாதீவு.*
*தொலைபேசி:- 6693, 7962.*
(44522)
(54-11-34)
தகவல்:
வி. மகாலிங்கம்,
வி.ஓங்காரலிங்கம் (மருமக்கள்).

### மரியநாயகம் றதநாயகம் (துரை)



கிளாலியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட மரியநாயகம் றதநாயகம் அவர்கள் 22.12.2005 வியாழக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் அமரர் மரியநாயகம் - மேரி விக்டோரியா தம்பதியரின் மகனும் றஜனியின் கணவரும் றிக்கோ, ஸ்டெபெனி ஆகியோரின் தந்தையும் எலிசபேத், அருள்வதனி, அமரர் ரூபநாயகம் (அப்பன்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தவசி குளம்,*
*மிருசுவில்.*
(44525)
(54-11-34)
தகவல்:
மரியநாயகம் விக்டோரியா
(மணி- தாய்).


**நாகம்ஸ் சுன்னாகம்**

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
அர்ஜூன், நமிதா, வடிவேல் நடித்த
**ஆணை**



தினசரி: புது நேரம் 11.30, 1.30, 4.30, 7.30

**மனோகரா யாழ்ப்பாணம்**



இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சூர்யா, த்ரிஷா, வடிவேல் நடித்த
**ஆறு**
காட்சி நேரம் - 10.30, 1.30, 4.30, 7.30, 10.30

**ராஜா யாழ்ப்பாணம்**

விஜய், ஜோதிகா, வடிவேலு நடித்த
**திருமலை**
காட்சிநேரம்: பு.நே. 10.30, 2.30, 6.30
(46404)

**நாதன்ஸ் யாழ்ப்பாணம்**

பிரசன்னா, லைலா
உங்கள் பிரகாஷ்ராஜ் வழங்கும்
**கண்ட நாள் முதல்**
காட்சி நேரம்:
10.30, 2.00, 5.15, 8.15

# தமிழ் இளைஞர்களை புலிகளின் அமைப்பில் சேரத் தூண்டுகின்றன படை நடவடிக்கைகள்

## உண்மையைத் தெளிவுபடுத்துகின்றார் சிவாஜிலிங்கம்

படையினர் புலிகளை தானாக படைக்கு இழுப்பது மாத்திரமின்றி இளைஞர்கள் புலிகள் அமைப்பில் இணைந்துகொள்வதற்கும் வழி செய்கின்றனர்.

படையினர் மக்கள் மீதும் பாடசாலை மாணவர்கள்மீதும் மேற்கொள்ளும் இந்த அடாவடித்தனம் இவ்வாறான நிலைமையைத் தான் தோற்றுவிக்கும் என்று தோன்றுகிறது.

-இவ்வாறு கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றில் இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

வடக்கில் ஒவ்வொரு பகுதியிலும் மக்கள் படையினரால் தாக்கப்படுகிறார்கள் என்ற செய்தியே வெளிவந்து கொண்டிருக்கிறது. அதேபோல், மாணவர்களும் தாக்கப்படுகின்றனர். அவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளைச் சுற்றி சோதனைச் சாவடிகள் அமைக்கப்படுகின்றன.

படையினரின் இந்த நடவடிக்கை புலிகளை சண்டைக்கு இழுக்கும் செயலாகவும், மாணவர்களைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்துவிடுவதற்கு தூண்டும் செயலாகவுமே அமைகின்றது.

இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் ஒரு முடிவுகட்ட வேண்டும் என்ற நோக்கில் நாம் புதன்கிழமை ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தினோம். அவர் உரிய நடவடிக்கைகளை எடுப்பாரெனக் கூறினார்.

இந்தப் பேச்சு இடம்பெற்றுக்கொண்டிருந்தபோது படைத் தளபதிகளும் வந்து இந்தப் பேச்சில் இணைந்துகொண்டனர். அப்போது அந்தப் பேச்சு திசைமாறிப் போனதை நாம் அவதானித்தோம்.

பாதுகாப்புப் படையினர் தவறான முறையில் நடத்தப்படுகின்றனர் என்பதை நாம் இதிலிருந்து அறியக்கூடியதாக இருந்தது.

உண்மையில், படையினர் கொல்லப்படுகின்றதையிட்டு நாம் மனவேதனை அடைகிறோம். இந்த நிலைமையை நிறுத்த அரசு சமாதானப் பேச்சை ஆரம்பிக்க வேண்டும் அதேபோல் படையினரும் மக்கள் மீதான அடாவடித்தனத்தை நிறுத்தவேண்டும்.

படையினர் படை முகாம்களுக்குள்ளும், பொலீஸார் அவர்களின் நிர்வாகப் பிரிவுகளுக்குள்ளும் இருந்து கொண்டு அவர்களது பணிகளைச் செய்யவேண்டும். மக்கள்மீது அடாவடித்தனம் புரிய வரக்கூடாது. இந்த அடாவடித்னம் தொடர்ந்தால் படையினர் மோசமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும்.

- இவ்வாறு அவர் கூறினார். (க-3)

## வவுனியாவில் படையினர் சோதனை

வவுனியா,டிசெ.24

வவுனியா குருமன் காட்டுப்பகுதியில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களின் மாணவர் ஒன்றிய காரியாலயத்திற்குள் நேற்று மாலை 5.30 மணியளவில் புகுந்த இராணுவத்தினரும், பொலீஸாரும் அங்கு சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இந்தச் சோதனை நடவடிக்கை தகவல் ஒன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதென்றும், அங்கிருந்து இராணுவத்தினராலும், பொலீஸாராலும் பல பொருட்கள் கைப்பற்றப்பட்டு பொலீஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இங்கிருந்து விடுதலைப்புலிகளின் சுவரொட்டிகள், பாடசாலை உடைகள் என்பனவும் கைப்பற்றப்பட்டு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் புகைப்படம், சிவப்பு, மஞ்சல் கொடிகள் போன்றவற்றை படையினர் எடுத்து வீதியில் போட்டனர் என்றும் கூறப்பட்டது. (க-3-164)

## இளைஞனுக்கு விளக்கமறியல்

தென்மராட்சி,டிசெ.24

சரசாலைப் பகுதியில் வெடிபொருள்கள் வைத்திருந்தாகக் கூறப்படும் நபர் ஒருவரைப் படையினர் கைதுசெய்து சாவகச்சேரி பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இந்நபரை பதில் நீதிவான் சு.கந்தசாமி முன்னிலையில் பொலீஸார் ஆஜர் செய்தனர்.

இந்நபரை அடுத்த மாதம் மூன்றாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (3-117)

## வவுனியாவில் வாகன விபத்தில் 3 பொலீஸார் காயம்

வவுனியா, டிசெ.24

வவுனியா-மன்னார் வீதியில் சாளம்பைக்குளத்திற்கு அண்மையில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் பொலீஸார் மூவர் காயமடைந்தனர். அவர்கள் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வேகமாக வந்த பொலீஸாரின் வாகனம் மரமொன்றுடன் மோதியதாலேயே இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-3-164)

## படையினரின் தாக்குதலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அங்கு மரணமானார். காயமடைந்த மற்றொரு நபரான சின்னத்துரை ராஜதுரை (வயது 63) என்பவர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகின்றார்.

கிரனேட் வீச்சுச் சம்பவத்தையடுத்து வீதியால் பயணம் செய்த பொதுமக்களைப் படையினர் கண்டபடி கொட்டன்களால் தாக்கினார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

அதனால், சிவன்கோயிலடி, சாவகச்சேரியைச் சேர்ந்த தனபாலசிங்கம் சுரேந்திரகுமார் (வயது - 36) என்ற இளைஞர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தையடுத்து சாவகச்சேரிப் பகுதியில் உள்ள கடைகள், அரச அலுவலகங்கள் இழுத்து மூடப்பட்டன. போக்குவரத்து சேவைகளும் சிறிது நேரம் தடைப்பட்டுப் பின்னர் வழமைக்குத் திரும்பின.

அதேவேளை -

நீர்வேலியில் நேற்று அதிகாலை படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த கிருஷ்ணராசா ஜெயப்பிரகாஷ் (வயது 23 - உரும்பிராய் தெற்கு), அவரது மனைவியான ஜெயப்பிரகாஷ் கேதினி (வயது - 20) ஆகியோர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

### ஆனைக்கோட்டையில்

முள்ளி, ஆனைக்கோட்டைப் பகுதியில் நேற்று மாலை படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.

முள்ளி , ஆனைக்கோட்டை என்ற முகவரியைச் சேர்ந்த எஸ்.கஜேந்திரன் (வயது-19), எஸ்.றொபின்சன் (வயது 19) ஆகிய இருவருமே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அரச செயலகங்களுக்கு பணிக்காக நேற்றுச் சென்ற அரச ஊழியர்கள் பலரும் படையினரின் தாக்குதல்களுக்கு இலக்காகினர் என அவர்கள் அதிகாரிகளிடம் முறையிட்டுள்ளனர்.

(க-3-6-7-12-14-15-76-78-86-117-180-190)

## வாகன அணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து முப்படையினரும், பேசாலைப் பகுதியில் சுற்றிவளைப்புத் தேடுதலொன்றை நடத்தினர். ஆனால், சந்தேகத்தின் பேரில் எவரும் கைது செய்யப்படவில்லை. (க-3)

## குடாநாட்டில் தொடர்ந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பாடுகள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் அவற்றில் அநேகமானவை மூடப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினமும் அதற்கு முதல் நாளும் கல்வியங்காட்டுப் பகுதியில் படையினர் பொதுமக்களைக் கடுமையாகத் தாக்கியதை அடுத்து அப்பகுதிக் கடைகளில் அனேகமானவை நேற்றும் மூடப்பட்டிருந்தன. யாழ். குடாநாடு முழுவதும் பதற்றமான சூழல் காணப்படுகின்றது.

கடந்த சில தினங்களில் மட்டும் படையினரின் தாக்குதலில் சிக்கிப் படுகாயமடைந்த பத்துப்பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொட்டன்கள், சைக்கிள் செயின்கள், தடிகள் என்பவற்றுடன் வீதிவலம்வரும் படையினர் தாம் விரும்பியபோதெல்லாம் வீதியில் செல்வோரைத் தாக்குகின்றனர். அதிலும் ஆண்களையே அவர்கள் குறிவைத்துத் தாக்குகின்றனர்.

### சட்டநாதர் கோயிலடியில்

இதற்கிடையில் நல்லூர் சட்டநாதர் கோயிலடியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் மீது நேற்று மாலை 4.35 மணியளவில் இனந்தெரியாதோரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு சிப்பாய்கள் காயமடைந்தனர். அவர்கள் பலாலி மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளனர்.

சம்பவத்தையடுத்து அப்பகுதியில் இராணுவத்தினர் பரவலாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். அப்பகுதி மிகவும் பதற்றமான நிலையில் காணப்படுகிறது. இப்பகுதியிலும் பொதுமக்கள் தடிகள், பொல்லுகள் மற்றும் சைக்கிள் செயின் போன்றவற்றால் கடுமையாகத் தாக்கப்பட்டனர்.

### ஐந்து சந்தியில்

யாழ். ஐந்து சந்திப் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் மீது நேற்றிரவு 8 மணியளவில் கைக்குண்டுவீசப்பட்டது. இதனை அடுத்து அப்பகுதியில் நின்ற படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். அவ்வீதிவழியாகப் பயணம் செய்த பொதுமக்கள் தாக்குதலுக்கு இலக்காகினர்.

### நல்லூரில்

நல்லூர், கைலாசபிள்ளையார் கோயில் வீதிப் பகுதியில் அமைந்துள்ள காவலரண் மீது நேற்றிரவு 9 மணியளவில் கிரனேட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. படையினர் தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இச்சம்பவத்தில் சிப்பாய் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டார்.

### தாவடியில்

தாவடி, உப்புமடம் பிள்ளையார் கோயிலடிப் பகுதியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது நேற்றிரவு 7.30 மணியளவில் கிரனேட் வீச்சு மேற்கொள்ளப்பட்டது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து இராணுவத்தினர் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதைத் தொடர்ந்து வீடு வீடாகச் சென்ற படையினர் தேடுதல்களை மேற்கொண்டனர். பதற்ற நிலை காணப்பட்டது.

(க-3-6-7-8-12-14-15-76-78-86-117-139-180-190)

**புலமைப்பரிசில் பரீட்சை**
திரு.கணேசலிங்கம் *அவர்களின்*
2006 தரம்:5 மாணவர்களுக்கான விசேட
2 ஆவது பரீட்சை வினாத்தாள் விற்பனைக்கு
யாழ் நகர் பூபாலசிங்கம் புத்தகசாலை

## பேசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிங்களக் கூலிப் படையால் எம் உறவுகள் மீது இத்தகைய சம்பவங்கள் இடம் பெற்றால் இவ்வாறான தாக்குதல்கள் தொடர்ந்தும் இடம் பெறும் என்றும் மன்னார் மாவட்ட மக்கள் படையினரால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-6)

## இயல்புவாழ்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு சமூகத்தின் அதிஉயர் கல்விநிறுவனமான பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்கு கௌரவம், பாதுகாப்பு இல்லையெனில் சாதாரண மக்களின் பாதுகாப்புக்கும் கௌரவத்துக்கும் என்ன உத்தரவாதம்?

இந்த இக்கட்டான நிலையில் சிங்களப் படைகளின் அராஜகங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து இயல்பு வாழ்க்கையையும் மனித கௌரவத்தையும் வென்றெடுக்கவேண்டும். நாம் ஒன்றிணைந்து இதைச் சர்வதேசத்துக்கு தெரியப்படுத்தி அரச படைகளின் அராஜகத்தை நிறுத்த வேண்டியது அவசியம். எமது பாதுகாப்பை உறுதி செய்யும் வரை -இயல்பு வாழ்க்கைக்கு உத்தரவாதம் வழங்கும் வரை -எதிர்வரும் திங்கட்கிழமை முதல் பணிப் புறக்கணிப்பைச் செய்வோம்.'

உடனடி மனிதாபிமானப் பணிகள் தவிர்ந்த அனைத்துப் பணிகளையும் புறக்கணிப்போம் - இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

## மரண அறிவித்தல்கள்

### சின்னப்பு அரியகுட்டி



இணுவில் கிழக்கு, தியேட்டர் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு அரியகுட்டி அவர்கள் நேற்றுமுன்தினம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - குழந்தை தம்பதியரின் அன்பு மகனும் தெய்வமணியின் (பூரணம்) அன்புக் கணவரும் பாஸ்கரன் (ஹொலண்ட்), காலஞ்சென்ற கிருபாகரன் குமுதா, பிரபாகரன் (கனடா), மனோகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சரஸ்வதி, இரத்தினம், மகேஸ்வரி நல்லையா, காலஞ்சென்ற மகாலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தர்ஷினி (ஹொலண்ட்), இராஜராஜேஸ்வரன் ஆகியோரின் மாமனாரும் கிருத்திகா (ஹொலண்ட்), துளசிகா (ஹொலண்ட்), பிருந்தாபன், பிரணவி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

(சி-47050)(11-46-33)

### நல்லதம்பி தர்மலிங்கம்

காரைநகரைப் பிறப்பிடமாகவும், டச்சுவீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் அவர்கள் நேற்று (23.12.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் தெய்வீகராணியின் அன்புக் கணவரும் அமிர்தகௌரி (நிக்கொட்), செந்தில்குமரன் (மலேசியா), சாளினி (மாணவி - 2005 உ/த, சாவ.இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2005) சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இல்லத்தில் இடம்பெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*டச்சு வீதி,*
*சாவகச்சேரி.*

(சி-47049)(11-46-33)

தகவல்: செந்தில்குமரன் (மகன்)

## மரண அறிவித்தல்

### திருமதி வல்லிபுரம் இராசம்மா

துன்னாலை மேற்கு, கரவெட்டியை வதிவிடமாகக் கொண்ட திருமதி வல்லிபுரம் இராசம்மா அவர்கள் நேற்று (23.12.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கா.செ.சிதம்பரி - இலட்சுமி தம்பதியரின் மகளும் கா.செ.சின்னத்தம்பி - வள்ளி தம்பதியரின் மருமகளும் சின்னத்தம்பி வல்லிபுரத்தின் பாரியாரும் தேவராசா சிவபாக்கியம், தங்கவேலு (இளை. அதிபர்), இரத்தினம், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரரும் இராசதுரை, செல்வம், மகேந்திரன் (அ.இ.ச.நீதவான்), சிதம்பரநாதன் (அ.இ.ச.நீ), சிவநாதன் (வியாபாரம்), ரங்கநாதன் (கொடிகாமம்), வசந்தி ஆகியோரின் தாயாரும் கணபதி சந்திரலிங்கம் அவர்களின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2005) சனிக்கிழமை மு.ப. 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேரொன்றை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**துன்னாலை மேற்கு,**
**கரவெட்டி.**

(சி-47051)(11-46-33)

தகவல்: குடும்பத்தினர்.

**இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.12.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.**